www.tamilarangam.net

களத்தில்

அடக்கு முறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தைவிட, பொதுமக்களின் ஆன்மீக உறுதியை உடைக்க வேண்டும் என்பதில்தான் அதிக அக்கறை காட்டுகின்றார்கள்.

வே. பிரபாகரன்
தமிழீழத் தேசியத் தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடவை 27 (11.07.1995) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வருஞ் செய்தித் தாள் 40p

# பலாலியில் பாரிய சண்டை

## யாழ். குடாநாட்டின்மீது பாரிய இராணுவ நடவடிக்கை

### ஆலயங்கள் மீது குண்டு வீச்சு

### மருத்துவ மனைகள் மீது குண்டு

### கோவிலுள்ளேயே பலர் பலி

சிறீலங்கா அரச படைகள் 'முன்நோக்கிப் பாய்தல்' என்ற குறியீட்டுப் பெயருடன் யாழ் குடாநாட்டின்மீது 09.07.95 ஞாயிற்றுக்கிழமைஅன்று பாரிய இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தன.

பலாலி இராணுவ முகாமிலிருந்தும், ஏனைய முகாம்களிலிருந்தும் அகோரமான எறிகணைத் தாக்குதலையும், புக்காரா விமானங்களில் இருந்து குண்டு வீச்சுத் தாக்குதல்களையும் நடத்தி அரச படைகள் பலாலி முகாமிலிருந்து இரு திசைகளில் முன்னேற முயன்று வருகின்றனர். இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள், சிறீலங்கா ஆக்கிரமிப்புப் படையினர் மீது கடும் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இம் மோதலின்போது விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி, சிறீலங்கா விமானப்படையினரின் உலங்கு வானூர்தி ஒன்று கடும் சேதத்துக்குள்ளானது. பண்டத்தரிப்பில் நிலை கொண்டுள்ள படையினர், சங்கானை நோக்கி முன்னேற முயன்ற போது விடுதலைப் புலிகளின் மிக உக்கிரமான தாக்குதலுக்கு இலக்காகி பெரும் இழப்புக்குள்ளாகியுள்ளனர். இச் சண்டையின் போது ஏராளமான படையினர் கொல்லப்பட்டும், காயப்பட்டும் உள்ளனர். இந் இராணுவ நடவடிக்கையின் போது பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட படையினர்

தொடர்ச்சி: 12 ஆம் பக்கம்

## புனித அந்தோனியார் தேவாலயம் மீது குண்டுத்தாக்குதல்! 65 பொதுமக்கள் பலி

சிறீலங்காப் படையினர் மக்கள் குடியிருப்புக்கள் மீது கண்மூடித்தனமாகப் பாரிய குண்டுத் தாக்குதல்களை நிகழ்த்தியுள்ளனர். மானிப்பாய் புனித அந்தோனியார் தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 65 க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் உடல்கள் சிதறுண்ட நிலையில் காணப்பட்டதால், அடையாளம் காணமுடியாத நிலையில் இருந்தன. 9.7.95 நடத்தப்பட்ட இக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்கள் தொகை நூற்றுக்கும் அதிகம் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.




## புலிகளின் இலண்டன் கிளையை மூட முடியாது

### — கதிர்காமருக்குப் பிரித்தானிய அமைச்சர் தெரிவிப்பு

இலண்டனில் இயங்கிவரும் விடுதலைப் புலிகளின் காரியாலயத்தை மூடி விடுவதற்கு சிறீலங்கா அரசு எடுத்த இராஜதந்திர நடவடிக்கைகள் தோல்வியில் முடிவடைந்துள்ளது. விடுதலைப் புலிகளின் இலண்டன் அலுவலகம் மூடப்பட மாட்டாது என பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டக்கிளஸ் ஹேட் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் தெரிவித்துள்ளார்.

சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டக்கிளஸ் ஹேட்டுடன் நடத்திய பேச்சின் போதே டக்கிளஸ் ஹேட்டினால் இவ்விடயம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இச்சந்திப்பில், விடுதலைப் புலிகளின் இலண்டன் அலுவலகம் மூடப்படமாட்டாது,

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

## ஜேர்மனியிலும் கதிர்காமரின் கோரிக்கை நிராகரிப்பு

புலம் பெயர்ந்த தமிழர்கள் குறிப்பாக பிரித்தானியா, பிரான்சு, சுவிஸ், ஜேர்மனி போன்ற நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் போதைப்பொருள் கடத்தல், வலுக்கட்டாயப் பணம் சேகரிப்பு, தீய வழிகளிற் பணம் சேகரித்தல் போன்றவை மூலம் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதக் கொள்வனவுக்கு உதவுகிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்சமன் கதிர்காமர் ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் கலாநிதி. குளோஸ் கிங்கெல், சமஸ்டி இணையமைச்சர் கிமிட் போர் ஆகியோரிடம் எடுத்துக்கூறி இந்நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த ஜேர்மன் ஒத்துழைக்க

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

## மண்டைதீவு தாக்குதலினால் இராணுவத்துக்கு ஏற்பட்ட இழப்புக் குறித்து அதிர்ச்சி

மண்டைதீவில் விடுதலைப்புலிகள் 28.06.95 அன்று நடத்திய தாக்குதலில் இராணுவத்திற்கு ஏற்பட்ட பெரும் இழப்புக்குறித்து அரசியல், இராணுவ வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியும் குழப்பநிலையும் ஏற்பட்டுள்ளதாகக் கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதைத்தொடர்ந்து, பாதுகாப்பு அமைச்ச உயர்அதிகாரிகளுடனும் படை உயர் அதிகாரிகளுடனும் ஜனாதிபதி சந்திரிகா விரிவாக ஆராய்ந்துள்ளதாகவும் அறியப்படுகின்றது. இத் தாக்குதலினால் இராணுவத்திற்குப் பெரும் உயிரிழப்பும், ஆயுததளபாட இழப்பும் ஏற்பட்டது தெரிந்ததே. இவ்விழப்புக்கள் தொடர்பான தகவல்கள் கொழும்பை எட்டியதும் அரசியல், பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது. இராணுவத்தின் உளவுப்படையினர் சிறப்பாகச் செயற்பட்ட

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

## எறிகணை வீச்சுக்கு

### கிளிநொச்சியில் நால்வர் பலி

ஆனையிறவு முகாமிலிருந்து 08-07-95 சனிக்கிழமையன்று கிளிநொச்சியை நோக்கி, தொடர்ச்சியாக நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலின்போது நாலு பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகினர். ஏழு பேர் படுகாயம் அடைந்தனர். இறந்தவர்களில் இருவர், வவுனியாவைச் சேர்ந்த தமிழ்ச்செல்வன் (வயது 19), மண்டானைச் சேர்ந்த கிருபா (வயது 20) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## திருமலைக் கடற்பரப்பில் கடற்படைப் படகு மூழ்கடிப்பு

சிறீலங்கா கடற்படையின் ரோந்துப்படகு ஒன்று 07-07-95 வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் திருகோணமலைக் கடற்பரப்பில் வைத்து கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது. இதன் போது கடற்படை அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டு நாலு கடற்படையினர் படுகாயம் அடைந்துள்ளனர்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பேச்சு வார்த்தையெனில் கடுமையான நிபந்தனை

- சந்திரிகா பேட்டி

இன்றைய சூழ்நிலையில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதானால் அது மிகக்கடுமையான நிபந்தனைகளின் பேரிலேயே ஆரம்பிக்கப்படும். இவ்வாறு ஜனாதிபதி சந்தரிகா குமாரதுங்கா லண்டன் OBSERVOR பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பேச்சுவார்த்தைகள் மூலமான தீர்வையே நாம் எப்போதும் விரும்புகிறோம். இழப்புகள் இன்றி சமாதானத்தையே அடைய பேச்சுகளின் மூலமான தீர்வுதான் ஒரே வழி. நம் நாட்டிலுள்ள இரண்டு சிறுபான்மை இனத்தினரும் சில தரைப்பகுதிகளை அனுபவிக்கின்றனர். என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். எனினும் உண்மையில் பாரபட்சம் எதுவும் காண்பிக்கப்படவில்லை. பெரும்பான்மை சிங்கள மக்களில் நன்கு படித்தவர்களும்இந் நாட்டின் நிலங்களில் போதிய அளவு பகிர் உரிமைகோர தமிழர்க்கு உரிமையுண்டு எனக் குரல் எழுப்புகின்றனர்.

முதற்தடவையாக எமது அரசாங்கம் இந்த நாட்டிலுள்ள சிறுபான்மை மக்கள் தமக்குரிய இடத்தைப்பெற்றுக்கொள்ள வேண்டும்மென்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஏற்கனவே பதவிக்கு வந்த எந்த அரசாங்கமும் பிரச்சனைகளுக்குத் தேவையான தீர்வு காண முன் வரவில்லை. அந்தந்த அரசாங்கங்கள் சிறுபான்மை மக்களின் கோரிக்கைகளுக்கு ஆமாம் போட்டு இழுத்தடித்துள்ளன. சிறுபான்மை மக்களும் பெரும்பான்மை மக்களும் தொடர்ந்தும் இழுபறிநிலையில் வாழ்ந்துவரவிட்டுவிட்டனர். அண்மையில் எதிர்க்கட்சியினர் கலங்கிய குட்டையில் மீன்பிடிக்கும் முயற்சியாக தென்னிலங்கையில் கலவரத்தை ஏற்படுத்தும் முயற்சி செய்தனர். பகிரங்கமாக அரசாங்கத்திற்கு கூறுகிறார்கள். ஆனால் விசாரணை அறிக்கை காலியில் சில கடைகளுக்குத் தீ வைத்த சம்பவத்திற்கு ஒரு எதிர்க்கட்சியினரே பொறுப்பு என்பதை சுட்டியுள்ளது. பிரதான எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளரும் அந்தப்பகுதியின் பாராளுமன்ற உறுப்பினருக்கு நெருங்கிய சகாவும் இந்த தீ வைப்பு சம்பவத்திற்கு பொறுப்பாக இருந்துள்ளனர். அன்றைய தினம் எதிர்க்கட்சியினர் தயாரித்த கலவரத்தினைத் தூண்டும் சுவரொட்டிகள் கொழும்பு நகரெங்கும் ஒட்டப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதே ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இந்த சுவரொட்டிக்கான பணத்தையும் வேறு ஏற்பாடுகளையும் செய்து கொடுத்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் இதுபற்றி தெரிவித்திருந்தனர் இதே அரசியல் கட்சியில் மற்றொரு பாராளுமன்ற உறுப்பினரும் பிறிதொரு தீ வைப்பு சம்பவத்தில் சம்பந்தப்பட்டுள்ளார் என்றார்.

# குண்டு வீச்சில் இது வரை 160 பேர் பலி தொடரும் சிறீலங்கா அராசகம்

## இலட்சக்கணக்கானோர் இடம் பெயர்வு

நேற்று சிறீலங்கா அரசபடைகளினால் ஆரம்பிக்கப்பட்ட முன்னோக்கிப்பாய்தல் நடவடிக்கை இன்றும் தொடர்ந்த குண்டு தாக்குதல்களுடனும் ஆட்டிலறி ஷெல் வீச்சுக்களுடன் தொடர்ந்தது. மேற்படி தாக்குதல்களின் போது 160 க்கும் மேற்பட்டோர் பலியாகினர் மேலும் 300 க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். கொல்லப்பட்ட பொதுமக்களில் ஏராளமான குழந்தைகளும் பெண்களும் அடங்குவர். இவர்களில் பலர் அடையாளங்காணப்பட முடியாத நிலையில் குண்டு வீச்சுக்கு இலக்காகியுள்ளனர்

நவாலி சென். பீற்றர் தேவாலயத்தின் மீதும் சென் . பீற்றர் பாடசாலையின் மீதும் வீசப்பட் ஆறு குண்டுகளின் விளைவாக 65 பொது மக்கள் தலத்திலேயே பரிதாபகரமாக மாண்டனர். 70 க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

பல பெண்களும் குழந்தைகளும் படுகாயமுற்று, எல்லா வைத்திய சாலைகளிலும் நிறைத்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அதைவிட குருதி ஒட்சிசன் போன்றவற்றிற்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் சாவு அதிகரிக்கலாமென அஞ்சப்படுகிறது.

ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் , கோவில்கள் பாடசாலைகளும் குண்டு வீச்சுத் தாக்குதலுக்குள்ளாவதால் மரங்களின்கீழும் தெருவோரங்களிலும் அகதிகளாயுள்ளனர். மகாஜனாக் கல்லூரி யாழ். இந்துக் கல்லூரி இணுவில் கந்தசாமி போவில் இராமநாதன் கல்லூரி கொக்குவில் இந்துக் கல்லூரி எல்லாமே அகதிமுகாமாக்கப்பட்டுள்ளது.

துன்னாலை, வட்டுக்கோட்டைச் சந்தி வல்லை வெளி, வல்வெட்டித்துறை பகுதிகளில் பெரும் குண்டுத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளது. வல்வை சிதம்பராக்கல்லூரியும் குண்டுத்தாக்குதலுக்குள்ளாகியுள்ளது.

இராணுவம் சுழிபுரம் நோக்கியும், பலாலியில் இருந்து சண்டிலிப்பாய் பகுதிநோக்கியும் முன்னேற முயற்சிக்கின்றது. ஆனால் புலிகள் இப்பகுதிகளில் கடும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். இதனை விட அராலித்துறைப்பகுதியிலும் பெருஞ் சண்டை நடைபெறுவதாக அறியப்படுகிறது. இலங்கை செஞ்சிலுவைச்சங்கமும் சென். ஜோன்ஸ் தொண்டர்களும் அகதிகளுக்கான நிவாரணப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இராணுவத்தினர் 12 மணி நேர ஓய்வின் பின் தம்து மூர்க்கத்தனமான தாக்குதல்களை தொடர்ந்தனர்

# முதலில் போரில் வெற்றி பின்னரே அரசியல் தீர்வு

## சந்தி சிரிக்கும் சந்திரிகா அரசு

“முதலில் வடக்கு-கிழக்குப் போரில் வெற்றி, அதன் பின்னரே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசின் யோசனைகள்” என அமைச்சர் பீரிஸ் அவர்கள் திருவாக்கு நல்கி உள்ளார். “முதலிற் போரை நிறுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன்” என ஆட்சிக்கு வந்த சந்திரிகா தற்பொழுது தலைகீழாக ஐக்கிய தேசியக் கட்சி அரசைவிட கேவலமான முறையிற் போர் நடாத்துவதைக் கண்டு சந்தி சிரிக்கிறது.

இதற்கிடையில் இவர்களின் இந்த அரசியல் ஏமாற்று வித்தைக்கு மல்வத்தை மகா நாயக்க தேரோ பேராசி வழங்கியுள்ளார்.

“விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் வெற்றி அடையும்வரை புதிய அரசியலமைப்பை நடைமுறைப்படுத்த வேண்டாம்” என உத்தரவிட்டுள்ள பௌத்த அருளாளர் “இந்த நாட்டிலுள்ள புத்திஜீவிகள், அரசியல்வாதிகள் எனது கருத்துடன் இணங்குவார்கள்” என்ற நம்பிக்கையையும் வெளிப்படுத்தியுள்ளார்.

# பிரான்ஸ் இராணுவக்குழு ஆலோசனையுடன் பெரியதொரு தாக்குதலுக்குத் திட்டம்

## ஜனாதிபதி அழைப்பின் பேரிலேயே இராணுவ ஆலோசனைக்குழு கொழும்பு வந்தது

பிரான்ஸ் நாட்டு இராணுவ ஆலோசகர்களின் உதவியுடன் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக, பாரிய தாக்குதல் திட்டமொன்றை பாதுகாப்பு அமைச்சு வகுத்துவருவதாகத் தெரிகிறது. பிரான்சிலிருந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் விசேட அழைப்பின்பேரில் கொழும்புவந்துள்ள சுமார் இருபதுபேரைக்கொண்ட இக்குழுவினர் ஜனாதிபதி சந்திரிகாவையும், பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தவையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

இவர்கள் சிறீலங்கா இராணுவத்துக்குப் புதிய பயிற்சி வழங்குவது பற்றிய ஆலோசனைகளையும், நவீன ஆயுதங்களைக் கையாள்வது பற்றிய பயிற்சியையும் வழங்குவார்கள் என கொழும்பிலிருந்து கிடைத்த தகவல் தெரிவிக்கின்றது.

சந்திரிகாவின் தனிப்பட்ட அழைப்பின் பேரில் வரவழைக்கப்பட்ட இவர்கள், சந்திரிகாவின் பிரான்ஸ் தொடர்பு காரணமாகவே அந்த நாட்டிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இவர்களில் பலர், பிரான்ஸ் தூதுவராலய விடுதிகளிலும் வேறு இடங்களிலும் பகுதி பகுதியினராகத் தங்கியுள்ளனர்.

சமீபத்தில் கொழும்புக்கு வந்துசேர்ந்த இவர்கள், முதலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும், பிரதிப்பாதுகாப்பமைச்சர் அனுருத்த ரத்வத்த மற்றும் பலரையும் சந்தித்தனர்.

பின்னர் முப்படைத் தளபதிகளையும் சந்தித்து விரிவாகப் பேசியுள்ளனர் என அத்தகவல் தெரிவிக்கின்றது.

சிறீலங்கா இராணுவத்திற்குப் புத்தூக்கம் வழங்குவதே இவர்கள் வரவழைக்கப்பட்டதற்கான நோக்கம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரான்ஸ்சிலிருந்து இங்கு வந்துள்ள இராணுவ ஆலோசகர்கள் கடந்தவாரத்தில் வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார் ஆகிய இடங்களில் உள்ள இராணுவ, கடற்படை, விமானப்படைத் தளங்களை நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இராணுவ கேணல் ஒருவரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இக்குழுவில் இரண்டு மேஜர்களும் அடங்குகின்றனர். முப்படை முகாம்களும் பார்வையிடப்பட்ட பின்னரே இத்தாக்குதல் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் பூரணப்படுத்தப்பட முன்னர் மேலும் சில வெளிநாட்டு ஆலோசகர்கள் சிறீலங்காவிற்கு வருவார்கள் என பாதுகாப்புவட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. இந்த உத்தேச இராணுவ நடவடிக்கை என்பது முப்படைகளையும் சேர்ந்ததாக அரை இலட்சத்துக்கு மேற்பட்ட துருப்புக்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். இதற்கு வசதியாக இராணுவத்தினர் 10,000 பேரையும் இராணுவத் தொண்டர்கள் 15,000 பேரையும் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

# மண்டைதீவைப் பார்க்கச் சென்றவருக்குத் துப்பாக்கிச் சூடு

மண்டைதீவுப் பகுதியைப் பார்க்கச்சென்ற ஒருவர், அங்கிருந்த இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்காகி தலையில் படுகாயமடைந்தார். 29.06.95 காலை தொழிலுக்குச்சென்ற ஐவர் தாம் சென்ற படகை கடலின் நடுவில் நிறுத்தி நங்கூரமிட்டுவிட்டு மண்டைதீவுக் கரையை நோக்கி நீந்திச் சென்றனர்.

தீவுக் கரையில் நின்ற இராணுவத்தினர் இவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இத்துப்பாக்கிப் பிரயோகத்தால் நீந்திச் சென்றவர்களில் ஒருவரான குருநகரைச் சேர்ந்த ஜெயராஜ் அனுஷ்டன் (18) என்பவர் தலையில் காயமுற்றார். இதனைத் தொடர்ந்து தமது முயற்சியைக் கைவிட்ட மீனவர்கள் தப்பினோம் பிழைத்தோம் என காயப்பட்டவரையும் இழுத்துக்கொண்டு தமது படகிற்கு நீந்திச் சென்று கரையை வந்தடைந்தனர்.

அங்கிருந்து துப்பாக்கிச் சூடுகளின் மத்தியில் ஒருவாறாகத் தப்பிவந்த அம்மீனவர்களில் காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

## பொதிகளுக்கும் கட்டுப்பாடு

வடபகுதிக்கு வரும் பயணிகள் கொண்டு வரும் பொதிகளுக்கு சிறீலங்கா இராணுவத்தினர் கட்டுப்பாடுகளை விதித்திருக்கின்றனர். தாண்டிக்குளம் சோதனை நிலையத்தில் சில உணவுப் பொருள்களின் அளவு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகிறது. வடபகுதிக்கு ஒன்றரை கிலோ உருளைக்கிழங்கு மட்டுமே கொண்டு செல்ல அனுமதிக்கப்படுவதாகத் தெரியவருகிறது இதே போல் வேறு சில உணவுப் பொருட்களுக்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# அரச பயங்கரவாதம்.

சிறீலங்காவில் ஏன் தமிழர்கள் ஆயுதம் ஏந்தினார்கள்? என்ற கேள்விக்கு ஒரே விடை அரச பயங்கரவாதம்.

இதனை மீண்டும் மீண்டும் நிரூபிக்கும் சம்பவங்கள்தான் அங்கு நடந்தன - நடக்கின்றன - இனியும் நடக்கலாம்.

1983 ஆடியில் கொழும்பில் ஆரம்பமான அரச பகிரங்க ஆதரவுடனான இன அழிப்பு என்பது 1995 ஆடியில் சிறீலங்கா அரசின் 'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கை" என்ற பெயரில் யாழ் குடாநாட்டில் தொடர்கிறது.

நவாலி சென். பீற்றர் தேவாலயத்தின்மீதும் விழுந்த குண்டில் 65 அகதிகள் அநியாயச் சாவு என்பது முதல் குடாநாடு எங்கும் நூற்றுக் கணக்கான தமிழர்கள், வானில் எட்டா உயரத்தில் ஒளித்து நின்று இலக்கின்றி வீசும் விமானக்குண்டுகளாலும் கடற்படையினரின் எறிகணைகளாலும், இறந்தும், காயமுற்றும் உடமைகள் இழந்தும் உள்ளனர் என்பது வரை இன்றைய கதையாகும். கிழக்கில் எங்கள் சகோதரர்களை 'மனித கவசமாக்கி' சிறீலங்கா இராணுவம் செய்யும் அட்டகாசம் இன்னொரு கதை. இப்படி எத்தனையோ தமிழின அழிப்பு நடவடிக்கைகள் சிங்கள அரச பயங்கரவாதிகளினால் தொடர்ந்தும் செய்யப்படத்தான் போகிறது.

ஆனால் வரலாற்றிற்கு முற்பட்ட காலம் முதல் நமது சொந்த மண்ணில் ஆண்டும், வாழ்ந்தும் வந்த தமிழீழ மக்கள், 1972 முதல் நாடற்ற நாட்டினமாக ஆக்கப்பட்ட அவலநிலையில், தமது வாழ்வினை, உயிரினை உடமைகளை அழிக்கும் சிங்கள அரச பயங்கரவாதிகளுக்கு எதிராக ஆயுத எதிர்ப்பை முன்னெடுத்தால் அவர்களைத் தீவிரவாதிகள் எனவும் பயங்கரவாதிகள் எனவும் பிரிவினைவாதிகள் எனவும் ஓரங்கட்டப் பார்க்கிறது சிறீலங்கா அரசு. உண்மையில் தமிழீழ மக்கள் சிங்கள அரச பயங்கரவாதத்திலிருந்து விடுபட்டு தாம் வாழ்வதற்கு எடுத்துள்ள தோற்றமே விடுதலைப் புலிகள்.

இதனால் தான் விடுதலைப் புலிகளும் மக்களும் வேறானவர்கள் அல்லர். அதனாலேயே மக்களையும் விடுதலைப் புலிகளையும் எவ்வகையிலாவது தனிமைப் படுத்தினால் தான் தனது அரசியல் இலாபங்களை உறுதி செய்யலாமென சந்திரிகா தவிக்கிறார். பேச்சுவார்த்தைகளின் போது நயமாகப் பேசிப் பிரிக்க முயன்றார். தற்பொழுது இராணுவத்தின் மூலம் பயங்காட்டிப் பிரிக்க முயல்கிறார். இதுதான் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சந்திரிகாவின் வழியே தவிர அவரிடம் வேறு எத்தகைய ஏற்புடைய திட்டமும் இல்லை. ஆனால் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவரவே இராணுவ நடவடிக்கை என்ற நியாயப்படுத்தல் சொற்றொடருடன் அம்மையார் தமிழ்மக்கள் மேலான யுத்தத்தை முடக்கி விட்டிருக்கின்றார்.

மக்கள் மேலான யுத்தத்தை நடாத்தும் எந்த ஒரு அரசாங்கமும், அம்மக்களை ஆளும் தார்மீகத் தன்மையை இழந்து விடும். இவ்வகையில் சிறீலங்கா தமிழீழத்தின் அரசல்ல. ஆகவே ஆக்கிரமிப்பாளனான சிறீலங்காவிடமிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்ற விடுதலைப் புலிகள் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் எம்மாலான நிதியும் மதியும் உடல் உழைப்பும் கொடுப்பதன் மூலம்தான் எமது சகோதரர் மீதான அரச பயங்கரவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கலாமென்பது உலகெங்கும் வாழும் தமிழர்களின் முடிவாகவுள்ளது.

# கண்ணிவெடியில் இராணுவ வண்டி

திருமலை மாவட்டத்தில் திரியாய் இராணுவ முகாமிற்குச் சமீபமாக, விடுதலைப்புலிகள் நடத்திய கண்ணிவெடித்தாக்குதலில் ஜீப் வண்டி ஒன்று சிதறியதுடன், 6 இராணுவத்தினர் தலத்திலேயே கொல்லப்பட்டனர். 29.06.95 காலை 10மணியளவில் திரியாய் இராணுவ முகாமிலிருந்து வெளியேறி, புல்மோட்டை வீதியில் வந்துகொண்டிருந்த ஜீப் வண்டி மீது முகாமிலிருந்து சமார் 700மீற்றர் தொலைவில் வைத்து இந்தக் கண்ணிவெடித் தாக்குதலை விடுதலைப்புலிகள் மேற்கொண்டனர்.

# அனுராதபுர வீதியில் 10 பொலிசார் பலி

அண்மையில், அநுராதபுரம் வீதியில் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலாலும் துப்பாக்கிப் பிரயோகத்தாலும் 10 பொலிசார் கொல்லப்பட்டனர். இதன்போது, சில ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

கடந்த 27-06-95 அன்று மதியம் 12.30 மணியளவில் விடுதலைப் புலிகள் நடமாடுவதாகக் கிடைத்த தகவலையடுத்து, அவர்களைக் கைது செய்யவெனச் சென்ற பொலிஸ் அணியினரின் வாகனத்தின் மீதே, கல்லால என்ற இடத்தில் வைத்துப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகத் பொலிஸ் நிலைய அதிகாரி தெரிவித்துள்ளார். இத்தாக்குதல்குறித்து மேலும் தெரிவிக்கையில், மதகு ஒன்றின் அருகே புதைத்திருந்த கண்ணி வெடியை வெடிக்கச் செய்த புலிகள், பொலிஸ் அணியின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும், 10 பொலிசார் கொல்லப்பட்டதாகவும், சாரதியும் மற்றுமொருவரும் உயிர் தப்பியதாகவும் அறியப்படுகின்றது. 32சிறி4389 என்ற வாகனத்தை யும் புலிகள் எரித்தனர் எனவும் மேலும் அவர் கூறினார்.இதில் சப்இன்ஸ்பெக்டர், சார்ஜ ன்ட் உட்படப் பத்துப்பேர் கொல்லப்பட்டு UP56 ரகதுப்பாக்கி-07, ஏ.கே மகசீன்-27,நடுத்தர ரவைகள்-278, ஏ.கே கோல்சர்-7, தொப்பி-2, சப்பாத்து - 2 சோடி ஆகியனவும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

# மட்டக்களப்பில் 16 இராணுவம் பலி
## காட்டுப்பகுதி முகாம் மீது புலிகள் தாக்குதல்

### சிறிலங்கா இராணுவத் தரப்பு தகவல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டுப்பகுதி முகாம் ஒன்றின் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் 16 சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத்தகவலை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி யூஎன்ஐ செய்திகள் தெரிவித்தன. அண்மையில் நிகழ்ந்த இத்தாக்குதலைத் தொடர்ந்து மோதல்கள் இடம் பெற்றதாகவும் அச்செய்தி மேலும் தெரிவித்தது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டம் கிரான் காட்டுப்பகுதியில் விடுதலைப் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் கடும் சண்டை மூண்டதாகவும் சிறீலங்கா பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகம் அறிவித்தது.

மாலை ஆறு மணியளவில் தொடங்கிய இச்சண்டை தொடர்ந்து பல மணி நேரமாக இடம்பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இராணுவத்தின் போர் மூலோபாயம் தோல்வி
# ஆற்றல் மிகு தளபதிகளின்றி நெருக்கடி!

விடுதலைப் புலிகளுடனான மூன்றாங் கட்ட ஈழப்போரில் சிறீலங்கா இராணுவம் பெரும் உயிர், மற்றும் தளபாட இழப்புக்களைச் சந்தித்துள்ளதோடு, போருக்கான தனது மூலோபாயத்தையும் இழந்து நிற்கின்றது. இந்நெருக்கடியான கட்டத்தில் இராணுவத்தைச் சிறப்பாக வழிநடத்திச் செல்லக்கூடிய இராணுவத்தலைமையும் அதனிடம் இல்லை. இவ்வாறு அண்மையில், கொழும்பு வாரப்பத்திரிகைகளில் அதன் இராணுவ அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுடனான மூன்றாங் கட்டப்போர், சிறீலங்கா இராணுவத்தைப் பொறுத்தவரையில் பெரும் உயிர், மற்றும் தளபாட இழப்பை ஏற்படுத்தி வருகின்றது. அத்தோடு விடுதலைப்புலிகள் கிழக்கில் மேற்கொண்டுவரும் தொடர்ச்சியான தாக்குதல்கள், இராணுவம் வடக்கில் நடத்தவிருந்த தாக்குதல் திட்டங்களைப் பெரிதும் பாதித்துள்ளதோடு, இராணுவத்தின் மூலோபாயத்தையே கேள்விக்குள்ளாக்கியுள்ளதாக அவ்விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். இதன் பிரகாரம் வடக்கா! கிழக்கா! முதல் தாக்குதல் இலக்கு என்பதில் குழப்பமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேசமயம், சிறீலங்காவின் போரை முன்னெடுத்துச் செல்லும் அரசின் தலைமைக்கும் குறிப்பாக அமைச்சர் ரத்வத்தைக்கும் இராணுவ உயர்அதிகாரிகளில் ஒரு பகுதியினருக்கும் இடையில் பலமான கருத்து முரண்பாடு எழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இம்முரண்பாடானது, போரின் மூலோபாயம் குறித்தும், அரசின் விருப்பை விரைந்து நிறைவேற்ற முடியாது என இராணுவ உயர்பீடத்தில் தெரிவிக்கப்பட்டதில் இருந்துமே ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக எழுந்த முறுகல், சில உயர் அதிகாரிகளைப் பதவி நிலை மாற்றம் வரை கொண்டுசென்றதாகவும் இதனால் ஏற்கனவே பிரிவு பட்டிருந்த இராணுவத்தில் மேலும் பிளவுகள் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பிளவுபட்ட நிலையினால் இராணுவத்தைச் சிறப்புற வழிநடத்த முடியாத ஒருசூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சிறப்பான ஆற்றல் மிக்கதொரு தலைமையின்றி, விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரை நடத்த முடியாதுள்ளதாகவும் இவ்விமர்சகர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# கப்டன் எழில்மாறன் வீரச்சாவு

திருமலையில் 16.06.95 இல் சிறீலங்கா இராணுவத்தினர் சுற்றி வளைத்துக் கைதுசெய்ய முற்பட்டபோது, விடுதலைப்புலிப் போராளி ஒருவர் சயனைட் அருந்தி வீரச்சாவடைந்துள்ளார்.

திருமலையைச் சேர்ந்த கப்டன் எழில்மாறன் அல்லது சாரங்கன் என்றழைக்கப்படும் சிதம்பரநாதன் தயாபரன் என்ற அப்போராளிக்கு எமது வீர வணக்கங்கள்.

# 2வது லெப் ஈழச்செல்வி வீரச்சாவு

பூநகரி முகாமிலிருந்து முன்னேற முற்பட்ட இராணுவத்துடன், 28.06.95 இல் நடைபெற்ற மோதலின்போது பெண் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார். இதன்போது 4 படையினர் கொல்லப்பட்டது தெரிந்ததே. வவுனியாவைச் சேர்ந்த 2வது லெப்ஈழச்செல்வி -தங்கராஜா மகேஸ்வரி எனும் போராளிக்கு எமது வீரவணக்கங்கள்.

# 'ஐலண்ட்' செய்தித்தாளின் செய்தி தவறானது

'காத்தான்குடியைவிட்டு முசலிம் மக்கள் வெளியேறிவிட்டதாக வெளியாகிய செய்தி முற்றிலும் தவறானது. இதை நம்பவேண்டாம் என சிறீலங்காவின் கப்பல்துறை, துறைமுகங்கள் அமைச்சர் எம்.எச்.எம். அசரப் பொதுமக்களைக் கேட்டுள்ளார். தற்போது உயிருக்கு அஞ்சி அப்பிரதேச மக்கள் வெளியேறிவிட்டதாக 'ஐலண்ட்' செய்தித்தாள் செய்தி வெளியிட்டுள்ளமை குறித்தே, அமைச்சர் அஸ்ரப் மேற்கண்டவாறு தனது கருத்தை தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமாதானத்திற்கு நிபந்தனை

இன்றைய சூழ்நிலையில், விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்துவதனால் மிகக்கடுமையான நிபந்தனைகளை விதிப்போம் என்ற சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் இந்நிலைப்பாடானது, இனப்பிரச்சினை விவகாரத்தைச் சமாதான ரீதியில் தீர்ப்பதற்கு என்றுமே அவர் தயாராக இல்லை அல்லது அவர் விடுதலைப் புலிகளைப்பற்றி சரியாக விளங்கிக்கொள்ளவில்லை என்பதையே காட்டுவது போன்று உள்ளது. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, பேச்சுவார்த்தைகள் என்பன என்றுமே நிபந்தனையுடன் கூடியதாக இருக்கமுடியாதென்பது விடுதலைப்புலிகளின் நிலைப்பாடாகும். இதன் காரணமாகவே, ஐதேக ஆட்சிக்காலத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறாமல் போனது. பின்னர் பொ.ஐ.ஐ முன்னணி பேச்சுக்களை ஆரம்பித்ததாகவும் இருந்தது. ஆனால் இது ஏதுவாக இருப்பினும் ஜனாதிபதி சந்திரிகா விதிக்கும் நிபந்தனைகள், இனப்பிரச்சனைக்குச் சமாதானத் தீர்வை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பை ஒருபோதும் உருவாக்கப்போவதில்லை ஏனெனில் விடுதலைப்புலிகள் இயக்கம் எப்போதும் அழுத்தங்களுக்கு விட்டுக்கொடுக்கவோ அன்றி மிரட்டல்களுக்குப் பணிந்து போகவோ மாட்டார்கள். கடந்த காலத்தில் பெரும் இராணுவ நெருக்கடிகள் இருந்த போது கூட, குறிப்பாக இந்திய இராணுவம் இலங்கையில் இருந்த போதும் புலிகள் அழுத்தங்களுக்கு பணிந்து போகவில்லை. இதனை மனத்தில் கொள்ளாது ஜனாதிபதி சந்திரிகா, புலிகளுடன் சமாதானப் பேச்சை நடத்துவதற்கு நிபந்தனை விதித்தமையானது அவர் புலிகள் தொடர்பான தப்பான அபிப்பிராயத்தை வெளிக்காட்டுவதாகவே கொள்ள முடியும். மேலும் சிறீலங்கா ஜனாதிபதி இவ்வாறான ஒரு நிலைப்பாட்டைக் கொள்வதற்கு எதிர்கால இராணுவ வெற்றிமீது கொண்டுள்ள நம்பிக்கையும் காரணமாக இருக்கலாம். இதற்கு அரசாங்கம் வெளிநாட்டில் கொள்வனவு செய்து குவிக்கும் ஆயுதங்களும், சில வெளிநாட்டு அரசாங்கங்கள் தெரிவித்துள்ள காரணங்களும் அவருக்கு நம்பிக்கை ஊட்டலாம்.

> போர்முனையிலும் இராணுவம் வைத்திருந்த போர்த்தந்திரோபாயம் விடுதலைப் புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது. அண்மையில் மண்டைதீவில் நடந்த வெற்றிகரமான தாக்குதல் இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.
> இந்நிலையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்துவதானால் நிபந்தனையுடன் கூடியதாக இருக்கும் என்ற ஜனாதிபதி சந்திரிகாவின் கூற்று வரலாற்றை மறந்ததாகவும் யதார்த்தத்தைப் புறந்தள்ளியதாகவும் உள்ளது

ஆனால் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு, இராணுவ வெற்றி என்பது ஒரு பகல்கனவே ஆகும். அதாவது ஒரு தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்பது சாத்தியமான வழிமுறை இல்லை என்பதை உலக வரலாறே உணர்த்தியிருப்பது ஒருபுறமிருக்க, விடுதலைப்புலிகள் இயக்கத்தை சிறீலங்கா இராணுவம் வெற்றிகொள்ளுதல் என்பது ஒரு வகையில் வேடிக்கையான விடயமாகவே இருக்கும். ஏனெனில், வடக்குக்கிழக்குப் போர்முனையின் நிலை அவ்வாறான போக்கொன்றையே காட்டி நிற்கின்றது. கிழக்கு மாகாணத்தை இராணுவம் தனது கட்டுப்பாட்டுப் பிரதேசம் என உரிமைகோரினும் இன்று அவ்வாறான நிலை இல்லை. புலிகளின் தாக்குதலினால் முகாம்கள் பல அழிக்கப்பட்டுள்ளன. அதேவேளை தாக்குதலுக்கு அஞ்சி பல முகாம்களை இராணுவம் தானாகவே மூடிவிட்டு வெளியேறி உள்ளது. வடக்குப் போர்முனையிலும் இராணுவம் வைத்திருந்த போர்த்தந்திரோபாயம் விடுதலைப் புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது. அண்மையில் மண்டைதீவில் நடந்த வெற்றிகரமான தாக்குதல் இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இந்நிலையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்துவதானால் நிபந்தனையுடன் கூடியதாக இருக்கும் என்ற ஜனாதிபதி சந்திரிகாவின் கூற்று வரலாற்றை மறந்ததாகவும் யதார்த்தத்தைப் புறந்தள்ளியதாகவும் உள்ளது என்பது உண்மையாகும். ஆனால் சமாதானம் எமது இராணுவ மேலாதிக்க அடிப்படையிலோ அன்றி நிபந்தனைகளின் அடிப்படையிலோ ஏற்படுத்த முடியாததாகும். இதேசமயம் ஜனாதிபதி சந்திரிகாவின் இவ்அறிவிப்பானது, அவரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்பாகவோ அன்றி அவர் சார்ந்த கட்சியின் விருப்பு வெறுப்பாகவோ இருக்கலாம். ஆனால் இது நிச்சயம் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தவோ அன்றி ஐக்கிய இலங்கையை உருவாக்கப்போவதோ இல்லை. மாறாக இலங்கையில் நீண்ட காலத்திற்கு இரத்தஆறு ஓடுவதற்கே இது வழிவகுக்கும்.

# காவல் நிலையம் அகற்றப்பட்டுள்ளது

குருமண்வெளி பொலிஸ் காவல் நிலையம் அகற்றப்பட்டு, அங்கிருந்த பொலிசாரைப் பயன்படுத்தி செட்டிப்பாளையம் பொலிஸ் நிலையப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருகிறது.

இதேவேளை, மட்டக்களப்பு ஆரையம்பதிக்கும், காத்தான்குடிக்கும் இடையே பொலிஸ் சோதனைச் சாவடி நிலையம் ஒன்று புதிதாகத் திறக்கப்பட்டுள்ளது.

# மலையகத்திலும் உரிமைக்குரல் கேட்கிறது

**- கலாநிதி ஐயம்பதி அச்சம்**

"வடக்கு கிழக்கில் மட்டுமல்ல மலையகத்திலும் வித்தியாசமான சூழ்நிலை உருவாகிவருகிறது. உரிமைகளுக்காகக் குரல் அங்கும் கேட்கிறது. இதற்கு மனித உரிமை ரீதியான பரிகாரம் காணப்படாவிட்டால் அங்கும் சிலவருடங்களுக்குள் யுத்தம் மூண்டுவிடும். மொழியுரிமை என்பது மனித உரிமை. மனித உரிமைப் போராட்டங்களை அடக்கி ஒடுக்குவதன் மூலம் நிற்பாட்ட முடியாது" எனக் கலாநிதி ஐயம்பதி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் மலையகப் பகுதிகளிற் சிறீலங்கா அரசாங்க பாதுகாப்புப்படைகள் அப்பட்டமான அத்துமீறல்களை ஏற்படுத்தி வருகின்றன. பெண்களுக்கு ஆண் குழந்தைகள் பிறந்தால் உரோமைய அடிமைகள் காலத்திற் கூறப்பட்டதுபோல "புலி பிறந்துவிட்டது என எள்ளிநகையாடுவது முதல் வகைதொகையின்றி ஆண்களைக் கைது செய்வது வரைச் சகஜமாகி விட்டது. ஆதாரமற்றநிலையில் கைதுச் சம்பவங்களும் அதிகரித்துவருகிறன. சமீபத்தில் இந்தியாவில் இருந்து இங்கு வந்த இருவர் திருமண வீட்டில்வைத்து கைதாக்கப்பட்டுள்ளனர்.

# வீட்டில் திருடமுயன்றவர் மக்களிடம் மாட்டினார்

நேற்றையதினம் தென்மராட்சிப் பகுதியில் சிறீலங்கா விமானப் படைக்குச் சொந்தமான சுப்பர் சொனிக் விமானம் தாக்குதலை நடத்திய அதேவேளை வீடொன்றில் திருடமுயன்ற திருடன் ஒருவர் மக்களிடம் மாட்டிக் கொண்டார்.

விமானத் தாக்குதல் நடந்ததையடுத்து சாவகச்சேரி நகர்ப்பகுதியில் உள்ள வீட்டார் வெளியே ஓடிவந்த போது ஒருவர் அவ்வீட்டில் உட்புகுந்து தாச்சிச்சட்டி உட்படப் பல பொருட்களைத் திருடி வீதியால் சென்ற வேளை அயலவர்களால் மடக்கிப் பிடித்து காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

# கிழக்கினில் படையினரின் புதியவகைத் துன்புறுத்தல்கள்

தரவைக்குளம் இராணுவ முகாம் புலிகளால் தாக்கப்பட்டதை அடுத்து இராணுவத்தினர் தம்முன் எதிர்ப்படும் விவசாயிகளை வயது வேறுபாடின்றி துன்புறுத்துகின்றனர்.

சில விவசாயிகள் பலமணிநேரமாக ஆற்றில் அமிழ்ந்திருக்குமாறு படையினரால் பணிக்கப்படுகின்றனர். வேறு சிலருக்கு வாளிகள் கொடுக்கப்பட்டு 500 தரம் வாளிநீரை ஆற்றிலிருந்து அள்ளி வெறும் தரையில் ஊற்றுமாறு கட்டளையிடப்பட்டுள்ளது.

வேறு சில வயோதிப விவசாயிகள் நீர் நிறைந்த மதகுகளின் ஊடாகப் புகுந்து மூழ்கி வெளியேறுமாறு கேட்கப்பட்டனர்.

மரக்கறிகளைக் கொண்டு சென்றவர்கள் அவற்றைப் பச்சையாகவே உண்ணும்படி படையினரால் பலவந்தப்படுத்தப்படுகின்றனர்.

அத்துடன் வழுக்கைத் தலை கொண்டவர்களின் தலையில் அலுமினியப் பாத்திரத்தை வைத்துக்கொண்டு உச்சி வெயிலில் நீண்டநேரம் நிற்கு மாறும் கட்டாயப்படுத்தப்படு கின்றனர்.

இவ்வாறான விசித்திரமான சித்திரவதைகளால் விவசாயிகள் பெரிதும் அச்சமடைந்துள்ளனர்.

# 10 தமிழரை நோர்வே திருப்பி அனுப்பியது

நோர்வே அரசு அங்குள்ள தமிழர்களில் பத்துப்பேரைத் திருப்பி அனுப்பியுள்ளதாக கொழும்பிலுள்ள நோர்வே தூதரக பிரதித் தலைவர் எலிஸபெத் சோல்நர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரியில் இலங்கையில் 12 வருடங்களாக நிலவிய இனநெருக்கடி முடிவிற்கு வந்துவிட்டது. எனவே தமிழர்கள் தமக்கு ஏதேனும் துன்புறுத்தல்கள் ஏற்படும் என்று அஞ்சத் தேவையில்லை என நோர்வே கருதியதை அடுத்தே அங்கு வாழும் தமிழர்களை திருப்பி அனுப்புவதென அந்நாட்டு அரசு முடிவு செய்தது.

நோர்வேயில் சுமார் 6000 தமிழர்கள் வசித்துவருவதாகவும் இவர்களில் 300 பேரைத் திருப்பி அனுப்ப அந்நாட்டு அரசு கடந்த ஜனவரியில் திட்டமிட்டிருந்தது. எனினும் பத்துப்பேரே இதுவரை திருப்பி அனுப்பப்பட்டதாக அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

# நோர்வே திருப்பிஅனுப்பிய இருவர் கொழும்பில் பொலிசாரால் கைது

**- தமக்கு மீள விசா வழங்க கோருகின்றனர்**

நோர்வேயிலிருந்து பலாத்காரமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்ட இரு தமிழ் இளைஞர்கள் கொழும்பில் தாம் துன்புறுத்தல்களுக்குள்ளாகலாம் என அஞ்சுவதாக நோர்வே இராஜதந்திரி ஒருவரிடம் தெரிவித்தனர்.

கருணாரட்னம், இன்னாசி மாசிலாமணி ஆகிய இரு இளைஞர்கள் கடந்த வாரம் நோர்வேயிலுள்ள மீன்பதனிடும் தொழிற்சாலை ஒன்றிலிருந்து கைது செய்யப்பட்டு கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

நோர்வேயிலிருந்து தலா 100 டாலர்களுடன் மட்டுமே வந்து இறங்கிய இவர்கள், தம்மைச் சந்தித்த இரு நோர்வே பத்திரிகையாளர்களிடம் தமக்கு இங்கு என்ன நடக்குமென்று தெரியாது என்றும் எனவே மீண்டும் நோர்வே செல்ல எப்படியாவது உதவுமாறும் மன்றாடினர்.

ஏற்கெனவே கொழும்பில் பொலிசாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்ட இந்த இரு இளைஞர்களும் மீண்டும் கடந்த சனிக்கிழமை விசாரணைக்குட்படுத்தப்பட்டதாக நோர்வே தூதரக இரண்டாவது செயலாளர் ஹரல்ட் லார்சன் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் வடபகுதியில் கடந்த மூன்று வருடகாலமாக வசித்துவரும் இவர்கள் தமது விசாக்களைப் புதுப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்ட சமயமே நோர்வே பொலிசாரால் கைதாகி திருப்பி அனுப்பப்பட்டனர். இவர்களில் கருணாரட்னம் மட்டக்களப்பையும், மாசிலாமணி வடக்கே தீவுப்பகுதியையும் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆளணிபலமின்றி சிறீலங்கா இராணுவம் தடுமாறுகிறது

**தப்பியோடிய 24,000 பேருக்குப் பகிரங்க மன்னிப்பு**

சிறீலங்கா இராணுவமும், பாதுகாப்புப் படைகளும் தமது மனோநிலையிற் பலத்த பாதிப்பை அடைந்துள்ளதினாற் சிறீலங்கா இராணுவம் ஆளணிப் பலமின்றித் தள்ளாடுவதைத் தெளிவாக உணரமுடிகிறது.

சிறீலங்கா இராணுவம் பல கவர்ச்சிகரமான முன்வைப்புகளுடன் ஆளணி சேர்ப்புக்கு முயற்சித்தபோதிலும் சிங்களப் பொது மக்களிடம் இருந்து போதிய ஆதரவு கிட்டவில்லை.

இதனையடுத்துச் சிறீலங்கா இராணுவத்திலிருந்து விலகி ஓடிய இருபத்திநாலாயிரம் பேருக்குப் பகிரங்க மன்னிப்பைச் சிறீலங்கா வழங்கியுள்ளது. ஆடி மாத முடிவுக்குள் திரும்பிவந்தால் சம்பளத்துடன்கூடிய விடுமுறை காலமாக அவர்கள் படையிலிருந்து விலகியகாலத்தைச் சிறீலங்கா கணிப்பதாகவும் ஆசைவார்த்தைகள் கூறப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அந்நியப் படைகள் வருமா?

சிங்கள வான்படையின் இரண்டு 'அவ்ரோ' விமானங்கள் யாழ்ப்பாண வான்பரப்பில் வைத்துச் சுட்டுவீழ்த்தப்பட்டது தெரிந்ததே. இந்நிகழ்வின் பின், வடக்கு வான்பரப்பில் சிங்கள வான்படையின் நகர்திறன் பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளது. அத்தோடு, வடகடற் பிராந்தியத்தில் சிங்களக் கடற்படை தனது ஆதிக்க நிலையை, கடற்புலிகளிடம் மிக வேகமாக இழந்தும் வருகின்றது. இந்தத் தளநிலையால் வடபுலத்தில் நிலைகொண்டுள்ள சிங்களப் படைகளுக்கு ஏற்பட்ட அபாயத்தைத் தடுப்பதற்காக, வெளிநாடுகளிலிருந்து இராணுவ உதவியைக் கோரச் சந்திரிகா அரசு முயற்சி செய்கின்றது என்ற செய்தி, தமிழ் மக்கள் மனதில் ஒரு கேள்வியை எழுப்பியுள்ளது. "இந்தியப் படைகள் மீண்டும் இங்கு

> ஆயினும், 'சார்க் படை' என்று இப்போது ஒரு படையுமே இல்லை. அப்படி ஒரு படையை அமைக்கக்கூடிய சூழலில் 'சார்க்' நாடுகளும் இல்லை. உண்மையில் அவை, ஒன்றையொன்று பிடித்துத் தின்னும் நிலையில் உள்ளன. ஒன்றின் மீது மற்றது சந்தேகப்படும் அளவில் இருக்கின்றன.

வருமா?" என்பதே அதுவாகும்.


இக் கேள்விக்கான தெளிவான பதிலை எமது மக்கள் பெறுவதற்கு வழிகாட்டி விடுவதே, இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கொழும்பில் இருந்து வெளிவரும் அனைத்து ஆங்கிலச் செய்தித்தாள்களும், இந்தியாவின் உதவியைக் கோரும்படி, அரசுக்கு ஆலோசனை கூறிக் கொண்டிருக்கின்றன. அதேவேளை, பெரும்பாலான சிங்கள அரசியல்வாதிகளும் அதற்கு ஆதரவு தெரிவிக்கின்றனர். புலிகளுடனான போரில், சிங்களப்படைகள் தோல்வியை நோக்கி அடி-யெடுத்து வைக்கத் தொடங்கிவிட்டன என்ற பயம் சிங்கள தேசத்தில் எழுந்துவிட்டதையே இவை காட்டுகின்றன.

இருந்தபோதிலும், மீண்டும் படைகளை இலங்கைக்கு அனுப்பும் நோக்கம் இந்தியாவுக்குக் கிடையாது என்றே, உலக அரசியல் நோக்கர்கள் வலியுறுத்திக் கூறுகின்றனர். இந்திய-புலிகள் போரில் இந்தியா அடைந்த தோல்வியும், அதனால் பெற்ற அவமானமும், அரசியல் விளைவுகளும் இந்தியாவுக்குப் பலபடிப்பினைகளை வழங்கி உள்ளன. இந்த நிலையில், மீண்டும் படையை அனுப்பிச் சிக்கலுக்குள் மாட்டிக் கொள்ள இந்தியா தயாராக இல்லை என்று, அவர்கள் கூறுகின்றனர். வேண்டுமானால், சிறீலங்கா அரசுக்கு ஆயுதங்களை-இராணுவ ஆலோசனைகளைக் கொடுக்கவோ அல்லது கூட்டுக்கடல் ரோந்துகளை மேற்கொள்ளவோ இந்திய அரசு இணங்கலாம் என, அவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதேவேளை, அண்மையில் இந்தியா சென்றிருந்த சந்திரிகா அம்மையார், 'இந்தியா ருடே' சஞ்சிகைக்குச் செவ்வி அளிக்கையில், "படைகளை அனுப்பும்படி நாங்கள் வேண்டுகோள் விடுத்தாலும், அதைச் செயலாக்க முன்னர், இந்திய அரசு பத்துத் தடவைகள் யோசிக்கும்" என்று கூறியுள்ளார். இதேவேளை, இந்தியப்படைகள் மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்படும் சாத்தியங்கள் இல்லை என்று, திருவாளர் டிக்சிற் உட்பட பல இந்திய இராசதந்திரிகளும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதற்குப் பல காரணிகள் உண்டு. முதலாவதாக, புலிக-ளுடன் ஒரு நேரடிப் போரை மீண்டும் நடத்த இந்திய அரசு விரும்பவில்லை. ஏனெனில், அவ்வாறானதொரு முடிவை எடுத்து புலிகளுடன் ஒரு நீண்ட போரில் ஈடுபட அது விரும்பாது என்பதுடன், முன்னரைவிடப் பெருந்தொகைத் துருப்புக்களை இழக்க நேரிடும் என்பதும் இந்தியாவிற்குத் தெரியும். இதனால் பல எதிர் விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும். அத்தகைய விளைவுகளைச் சந்திக்கும் நிலையில் இன்று இந்தியாவின் உள்நாட்டு நிலைமைகள் இல்லை என்பது ஒரு காரணம்.





இரண்டாவதாக, இலங்கை அரசை நம்பி எப்படிப் புலிகளுடன் போரைத் தொடுப்பது என்ற கேள்வியும், இந்திய இராசதந்திரிகளிடம் உண்டு. முன்னாள் சனாதிபதிகளான ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும், ஆர். பிரேமதாசாவும் இந்திய அரசின் முகத்தில் பூசிய கரி இன்னமும் அழிந்துவிடாத நிலையில், மீண்டும் தமது தலையில் மண்ணள்ளிப்போட, இந்தியா தயாராக இருக்கமாட்டாது.

இந்தியாவைப் பொறுத்தளவில் சந்திரிகா அம்மையார் மீது நம்பிக்கை வைத்திருந்தாலும், அடுத்து வரப்போகின்ற சிறீலங்கா ஆட்சியாளர் இந்தியாவுக்கு விசுவாசமாக இருப்பாரா! என, இந்தியா சந்தேகப்படும் சூழலே இன்றிருக்கின்றது. உண்மையில், சந்திரிகாவிற்கும் இந்திய அரசுக்குமான தற்போதைய நெருக்கம், ஒரு தற்செயல் அல்லது தேவை கரு-திய உறவு என்பது, மற்ற எல்லாரையும் விட இந்திய அரசிற்கு நன்கு தெரியும். ஏனெனில் சிறீலங்காவிற்கான

> இவ்வாறு ஒவ்வொரு நாடும் தத்தம் நலன்களைக் கருத்தில் எடுத்தபடியும்-ஆளை ஆள் நம்பாத சூழலிலும் "சார்க்" என்ற ஒரு கூட்டுப்படை அமைவதை விரும்பமாட்டாது. இன்றைய சூழலில், சிறீலங்கா மட்டும்தான், "சார்க்" ஆசையுடன் அலையும் ஒரு நாடாக இருக்க முடியும். ஆனால் அது ஓர் அழகான கற்பனை மட்டுந்தான்! எனவே எமது மக்களே! "சார்க் படை" என்ற சஞ்சலத்தை மனதிலிருந்து பிடுங்கி எறிந்து விடுங்கள்.

சனாதிபதித் தேர்தலின்போது, காமினி திசநாயக்காவையே இந்தியா மறைமுகமாக ஆதரித்திருந்தது. இது, சந்திரிகா அம்மையாருக்கும் தெரியும். எல்லாவற்றிக்கும் மேலாக, சிங்கள மக்களின் பண்பாட்டு மனதில் ஆழக் குடி-கொண்டிருக்கும் இந்திய எதிர்ப்பு என்ற வரலாற்று உணர்வையும், இந்தியா சரியாக அறிந்தே வைத்திருக்கும் என நம்பலாம். எனவே, மீண்டும் ஒருமுறை சிங்களத் தலைவர்களால் பயன்படுத்தப்படுவதை இந்தியா விரும்பாது.



இதேவேளை, இந்தியாவின் உள்நாட்டு அரசியல் உறுதிப்பாடு ஒரு ஸ்திரமான நிலையில் இல்லை. ராஜீவ் காந்தியின் மரணத்திற்குப் பின்னர், ஒரு உறுதியான-கவர்ச்சி-மிக்க-தலைமை இந்திய ஆளும் வர்க்கத்திற்குக் கிடைக்கவில்லை. ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சியும் பலமிழந்து கிடக்கின்றது. இந்த நிலையில், இந்திய ஆளும் வர்க்கத்தின் நலனுக்காக (இந்திய மக்களின் நலனுக்காக அல்ல) மீண்டும் புலிகள் இயக்கம் மீது போர் தொடுப்பது என்ற சிக்கலான-ஆபத்து நிறைந்த-முடிவை எடுக்க, இந்தியத் தலைமைப்பீடம் தயாராக இல்லை. அத்துடன், தமிழர்களுடைய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க வேண்டும் என்ற வெறி, இந்திய வாக்காளர்களிடம் இல்லை. அண்டை நாடான பாகிஸ்தான் மீது படை எடுத்து, அதன்மூலம் தனது கட்சி நலனைப் பாதுகாத்தபடி-ஆட்சி அதிகாரத்தை நிலைநிறுத்த முயலும் தந்திரோபாயத்தை, இந்திய அரசியல்வாதிகள் தமிழீழம் மீது பயன்படுத்த முடியாது. ஏனெனில், பாகிஸ்தான் இந்தியாவின் பகைமை நாடு. ஆனால், தமிழீழம் அப்படியல்ல. தமிழீழம் அமைவதை, இந்திய ஆளும் வர்க்கம் விரும்பவில்லை என்பது உண்மையே. இதற்குக் காரணம் இந்தியாவின் நலன்கள் அல்ல. இந்தியாவின் ஆதிக்க சக்திக-ளான பிராமணியத்தின் நலன்களே ஆகும்.

இத்துடன், உள்நாட்டுக் கிளர்ச்சிகளால் இந்தியா இப்போது திண்டாடிக் கொண்டிருக்கிறது. காஸ்மீர் மாநிலத்தில் பிரச்சினை வலுவடைந்துள்ளது. மணிப்பூர், சிக்கிம், அஸ்ஸாம், நாகலாந்து மற்றும் ஆந்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களிலுள்ள விடுதலை இயக்கங்கள், தத்தமது ஆயுதச் செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தி உள்ளன. இதனால், இந்தியப் படையின் பெரும்பகுதி, உள்நாட்டுக் கிளர்ச்சிகளை அடக்குவதிலேயே பயன்படுத்தப்படுகின்றது. இந்த நிலையில், பாகிஸ்தானுடனான பகைமையும் உச்சக் கட்டத்தில் இருக்கின்றது. இத்தகையதொரு யதார்த்த சூழலில், வெளிநாடொன்றுக்கு-இலட்சக்கணக்கான துருப்புக்களை , அதுவும் போரிடுவதற்கென்று அனுப்ப இந்திய அரசால் முடியாது.

ஆயினும், ஆயுத உதவிகளையும் இராணுவ ஆலோசனைகளையும் சிங்களப் படைக்கு வழங்க, இந்தியா முயலலாம். இதை, இந்தியாவை விட பலம்வாய்ந்த நாடுகளிடம் இருந்தும் சிங்கள அரசு பெறலாம். ஆனால், அதைப் பயன்படுத்த போர்க்களத்திற்கு வரும்போது தான், உண்மையை உணர்வார்கள். எனவே, ஆயுதங்கள்-ஆலோசனைகள் பற்றி எமது மக்கள் பயங்கொள்ளத் தேவையில்லை. இதேவேளை, சிங்கள அரசுடன் இணைந்து ஒரு கூட்டுக் கடல் ரோந்தில் இந்தியக் கடற்படை ஈடுபடும் சாத்தியங்கள் உண்டு. ஆனால், இந்தக் கடல்ரோந்து இனிமேல்தான் தொடங்கப் போகின்றது என எண்ணாதீர்கள். ஏற்கனவே, இந்தியா இதைச் செய்தபடியே இருக்கின்றது. ஆனாலும், பல்லா

தொடர்ச்சி : 18 ஆம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## திருகோணமலை மாவட்டம்

# அழுத்தங்கள் மத்தியில் தமிழர்கள்

**மா**லை மூன்றுமணிக்குப் பின்னர் திருகோணமலை நகரின் முற்றவெளியில் சனக்கூட்டத்திற்குக் குறைவிருப்பதில்லை. முற்றவெளிக்கு அப்பால் கடற்கரைவரை ஓடித்திரியும் சிறுவர் கூட்டமும் ஐஸ்பழ வான்களும் முட்டாசுக் கடைகளும் என ஒரே கலகலப்பாக இருக்குமிப்பகுதி இன்று வெறிச்சோடிப்போயிருக்கின்றது.

புழுதிவாரி வீசும் காற்றுக்கு நடுவில் இராணுவத் தொப்பிகள்தான் வீதிகளில் தெரியும்நிலை இன்று அங்கேயுள்ளது.

படையினருடன் உலாவும் தமிழ்க்குழுக்களின் அட்டகாசம் மீண்டும் ஆரம்பித்துவிட்டது. ரெலோ குழுவினரை ஏற்றிக்கொண்ட இராணுவ வாகனங்கள் திருமலை வீதிகளில் ஓடித்திரிய ஆரம்பித்துவிட்டது.

திருகோணமலை இந்துக் கல்லூரி, சென். ஜோசப் கல்லூரி, மெதடிஸ் பெண்கள் கல்லூரி என அனைத்துப் பிரபல பாடசாலைகளினதும் உயர்தரவகுப்பு மாணவர்களின் வரவு மிகக் குறைந்துவிட்டது.

தொழில் நிமித்தமோ தேவையான பொருள்களைக் கொள்வனவுசெய்யவோ நகருக்குள் வரும் தமிழர்கள் தமது வேலை முடிந்ததும் வீடுகளுக்கு உடனடியாகத் திரும்ப ஆர்வம் காட்டுகின்றனர்.

சிங்கள, முஸ்லீம் இனத்தவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் சுதந்திரமாகத் திரி-வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். இவர்களுக்குப் படையினரும், பொலிசாரும் போதிய உதவிகளை வழங்கி வருகின்றனர்.

> படையினருடன் உலாவும் தமிழ்க்குழுக்களின் அட்டகாசம் மீண்டும் ஆரம்பித்துவிட்டது. ரெலோ குழுவினரை ஏற்றிக்கொண்ட இராணுவ வாகனங்கள் திருமலை வீதிகளில் ஓடித்திரிய ஆரம்பித்துவிட்டன.

காலி, அம்பாறை, மாத்தறைப் பகுதிகளில் சிங்களவர் எப்படி வசிக்கின்றார்களோ அதேபோன்று, திருகோணமலையிலும் சிங்கள மக்களின் ஆக்கிரமிப்பு வலுத்து வருகின்றது.

தமிழர்களின் இயல்பான வாழ்க்கையை, வேண்டுமென்று பரப்பப்படும் வதந்திகளும் பாதிக்கின்றன. மாகாணசபை கட்டடங்களில் குண்டுவைக்கப்பட்டுள்ளது, சந்தைக்குள் குண்டுவைக்கப்பட்டுள்ளது என்றவாறாகப் பரப்பப்படும் வதந்திகள் மிகவும் வேகமாகப் பரவுகின்றன. உல்லாசப் பயணத்திற்கும், சுற்றுலாவுக்கும் பெரும் வரவேற்புப்பெற்ற திருகோணமலைக்குள் உல்லாசப்பயண விடுதிகள் வெறிச்சோடிப்போயுள்ளன. நிலாவெளி, கெவுளியா பகுதிகளில் மருந்துக்குக்கூட வெளிநாட்டவர்களைப் பார்க்கமுடியவில்லை.

மூன்றாம் ஈழப்போர் தொடங்கிய சித்திரை19 ஆம் நாள் இரவு, திருமலைநகரிலுள்ள உல்லாசப்பயண விடுதிகளில் சமார் 307 உல்லாசப்பயணிகள் இருந்தனர். அடுத்தநாள் காலையில் இவர்கள் அனைவருமே வெளியேறிவிட்டனர்.

இந்த விடுதிகளில் சில தற்போது படையினர் தங்கியிருக்கும் விடுதிகளாக மாற்றப்பட்டுள்ளன. இராணுவத்தின் நகர நிர்வாகியின் (TOWN COMMANDER) அலுவலகம்கூட, ஒரு உல்லாசப்பயண விடுதியிலே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை நகரில் வசிப்பவர்களில் 16 வயதுக்கு மேற்பட்டோருக்கான விசேட அடையாளஅட்டை வழங்கும் அலுவலகங்களும் இந்த விடுதிகளிலேயே தொழிற்படுகின்றன.

மாவட்ட பொலிஸ் அதிகாரியினதும், நகரகொமாண்டரினதும் கையெழுத்துடன் வழங்கப்படுகின்ற இவ் அனுமதி அட்டைகளை சம்பந்தப்பட்டோர் நேரடியாகவந்து பெற்றுக்கொள்ள வேண்டும் எனக்கூறப்படுகின்றது.

இதேபோல் ஒவ்வொருவீட்டிலுமுள்ள உறுப்பினர்களின் பெயர்விபரங்கள் ஓர் அட்டையில் எழுதப்பட்டு, அதனைப் பொலிஸ்நிலையத்தில் அத்தாட்சிப்படுத்தி, அவ் அட்டையினை வீட்டின் முகப்பில் தொங்கவிடப்படவேண்டும் எனவும் படையினரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இராணுவ வாகனங்களில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்டு இந்த உத்தரவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்துக்களின் முக்கிய ஆலயங்களான கோணேசர் கோயில், காளி கோயில் ஆகியவை பாழடைந்தவை போல் காணப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. படையினரின் கெடுபிடியினால் நகர்ப்பகுதியிலுள்ள இந்த வழிபாட்டுத்தலங்களுக்குப் பொதுமக்கள் செல்லமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பிட்டமணிநேரத்திற்கப்பால் இப்பகுதிகளுக்கு மக்கள் செல்வதை இராணுவம் தடைசெய்துள்ளது.


திருகோணமலை மாவட்டத்தின் கடற்கரைப்பகுதிகளில் மீன்பிடிப்பதற்கோ, சாதாரணமாக உலாவுவதற்கோ கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தடைகள் உத்தியோகபூர்வமற்ற வகையில் தமிழர்களுக்கு மட்டுமே உள்ளமை கவனிக்கத்தக்கது.

இத் தடைகளைமீறிக் கடலில் குளிக்கச்சென்ற தமிழர்கள் படையினரால் தாக்கப்பட்டுள்ளனர். பலர் கைதுசெய்யப்பட்டு கடற்கரைவெயிலில் நிறுத்திவைக்கப்பட்டுப் பலமணிநேரத்தின்பின்பே விடுதலைசெய்யப்பட்டனர்.

திருகோணமலை நகரிலிருந்து வெளியே செல்லும் பேரூந்துகளுக்கும் கட்டுப்பாடுகள் பல. குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட பாதைகளின் ஊடாகவே செல்லவேண்டும் என்ற கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பல இடங்களில் நிரந்தர சோதனைச் சாவடிகளில் இப் பேரூந்துகள் நிறுத்தப்படுவதைத்தவிர, திடீர்ச் சோதனைகள் என்ற பெயரில் நடக்கும் கெடுபிடிகளுக்கும் குறைவில்லாமலில்லை.

சில இனங்காட்டப்பட்டுள்ள பகுதிகளுக்கு குறிப்பிட்ட தொகை உணவுப்பொருட்களுக்கு மேலதிகமாக எவற்றையும் கொண்டுசெல்லப் படையினர் அனுமதி மறுத்து வருகின்றனர். இதனால் இந்தப்பகுதிகளில் வாழும் மக்கள் பெரும்



கஸ்டங்களை அனுபவிப்பதைக் கண்கூடாகப் பார்க்கமுடிகின்றது.

திருமலை சந்தைவியாபாரம் முற்றாகச் சிங்கள வியாபாரிகள் கைக்கு மாறியுள்ளது. தமிழர்கள் சந்தைகளுக்குப் பொருட்களைக் கொண்டுவந்து விற்பனைசெய்த காலம் ஒரு கனவாகவே மாற்றமடைந்து வருகின்றது. மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையினால் திருமலை மீன்சந்தையில் மீன்களுக்குப் பதிலாகக் கருவாடுகளே விற்பனை-செய்யப்பட்டு வருகின்றது. மீன்வாடிகள் படிப்படியாக மூடப்பட்டும் வருகின்றன. திருமலை தளவைத்தியசாலையைப் பொறுத்தமட்டில் தமிழ்வைத்தியர்கள், சிங்கள சிற்றூழியர்களுக்குப் பயந்தே கடமையாற்றும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

தமிழ் வைத்தியர்களுக்குத் தெரியக்கூடியதாகவே சிங்களச் சிற்றூழியர்கள் வைத்தியசாலைகளுக்குவரும் மருந்துகளை நகரிலுள்ள தனியார் மருத்துவ விற்பனை நிலையங்களுக்கு விற்பனை செய்வதும் நடைபெறுகின்றது.

கடற்படைத்தளப்பகுதி, துறைமுகப்பகுதி ஆகியவற்றில் இதுவரை காவற்கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் அகற்றப்பட்டு, கடற்படையினரும் பொலிசாரும் நிறுத்தப்பட்டுள்ளனர். துறைமுகப்பகுதியில் கடற்படைக்குச் சொந்தமான கப்பல்கள் அருகருகே நங்கூரம் பாய்ச்சப்பட்டிருந்த நிலைமாறி, துறைமுகப்பகுதியின் ஒவ்வொரு திக்குத்திக்காகக் கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

சிறிய விசைப் படகுகளில் கடற்படையினர் ரோந்துகளில் ஈடுபடுகின்றனர். கடலின் ஆழம்குறைந்த பரப்பினூடாக இந்த விசைப்படகுகள் தொடர்ந்து சுற்றிவருகின்றன.

மீன்சந்தைகளிலும் இருந்த சிங்கள இளைஞர்களுக்கு ஊர்காவற்படை என்ற போர்வையில் ஆயுதங்கள் தாராளமாக விநியோகிக்கப்படுகின்றன. 15 வயதிற்கும் 20 வயதிற்கும் இடைப்பட்ட இந்த இளைஞர்கள் துப்பாக்கிகளுடன் திரிவதை இன்று காணமுடிகிறது.

> திருமலை சந்தைவியாபாரம் முற்றாகச் சிங்கள வியாபாரிகள் கைக்கு மாறியுள்ளது. தமிழர்கள் சந்தைகளுக்குப் பொருட்களைக் கொண்டுவந்து விற்பனை-செய்த காலம் ஒரு கனவாகவே மாற்றமடைந்து வருகின்றது. மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையினால் திருமலை மீன்சந்தையில் மீன்களுக்குப் பதிலாகக் கருவாடுகளே விற்பனைசெய்யப்பட்டு வருகின்றது.

இவர்கள் அனைவரும் தத்தமது பொலிஸ் நிலையப்பகுதியிலிருந்து மாலை ஆறுமணிக்கு ஆயுதங்களைப் பெற்று அடுத்தநாள் காலை ஆறுமணிக்கு ஆயுதங்களை ஒப்படைத்துவிட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

நிலைமை இவ்வாறு இருக்க, திருமலையின் எல்லைப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் தீவிரமாக நடைபெற்றுவருகின்றது.

சர்வோதயம் போன்ற அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இந்தக் குடியேற்றங்கள் உச்சகதியில் நடந்தேறுகின்றன.

சர்வோதயத்துக்குச் சொந்தமான வாகனங்களில் குடியேற்றத்திற்கு தேவையான பொருட்கள் கொண்டுவரப்படுகின்றன.

இவற்றுக்குப் பாதுகாப்பாக காவற்படையினரும் நூற்றுக்கணக்கில் இப்பகுதிகளில் குவிக்கப்படுகின்றனர்.

சத்தமில்லாமல் தமிழர்கள் நிலம் படிப்படியாகப் பறிக்கப்பட்டு, சிங்களவரைக் குடி-யேற்றும் முயற்சிகள் அரசினால் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ விடுதலைப் போராட்டம்

## முடிவில்லாத போரா?



"எவருமே வெற்றி பெற முடியாத போர் இது"
"ஒரு முடிவில்லா போர் இது"
"போரில் தோற்றவர்களே உண்டு. வென்றவர்கள் இல்லை"

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்த அபிப்பிராயங்கள் அவர்களுக்கு மிகவும் பழக்கமானவையாகும். எமது விடுதலைப் போரை மதிப்பீடு செய்ய முனைந்த மேலைத்தேய செய்தியாளர்கள், மேற்குறித்த கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர். அத்துடன், சில சமயங்களில் சிங்கள அரசியல்வாதிகள் சிலரும், சிங்கள புத்திஜீவிகள் மற்றும் தொடர்பு சாதனங்களும் இந்த மதிப்பீடுகளை எடுத்தாள விரும்புவது 'ஆடு நனைகின்றது என்று ஓநாய் அழுத கதைபோல' உள்ளது.



இந்தத் 'தத்துவங்களை', சிங்களப் பேரினவாத சக்திகள் பிரச்சாரப்படுத்துவதன் உள்நோக்கங்களை, தமிழ்மக்கள் அறிந்து வைத்திருப்பது அவசியம். ஏனெனில், இந்தத் 'தத்துவங்களின்' பின்னாலுள்ள ஆக்கிரமிப்புவாத நோக்கத்தை அறியாமல், எமது மக்களும் இவற்றை நம்ப முயல்வது அபாயமானதாகும்.

போர், உயிரழிவுகளையும் சொத்தழிவுகளையும் கொண்டுவருகின்றது என்பது உண்மையே. அதனால், மனிதகுலம் காலாதிகாலமாக அளப்பரிய சோகங்களைச் சுமந்து வருகின்றது என்பதும் உண்மையே. ஆனால், ஒரு நாட்டை எதிரியானவன் தனது படைபலம் கொண்டு ஆக்கிரமிக்க முயலும்போது, அல்லது ஒரு இனஅழிப்பில் எதிரிப்படைகள் ஈடுபட முனையும்போது, இவற்றிலிருந்து பாதுகாப்பைத் தேடிக்கொள்வதற்காகத் தற்காப்புப் போர் ஒன்றை நடாத்துவது, தவிர்க்க முடியாதது. அத்துடன் அத்தியாவசியமானதும் கூட.

இத்தகையதொரு தற்காப்புப் போர், படிப்படியாகப் பலமடைந்து, வெற்றியை நோக்கி வீறுநடை போட முயலும்போது, குறித்த அந்த மக்களது உளவலுவை-போர் உறுதியை-சிதைக்கும் சூழ்ச்சிகர எண்ணத்துடன், போர் தொடர்பான அவநம்பிக்கைத் தத்துவங்களைப் பரப்புவதை, எதிரி அரசுகள் ஒரு தந்திரோபாயமாகக் கைக்கொள்கின்றன.

"முடிவில்லாப் போர்" என்ற சொற்பதம், வியட்னாம் விடுதலைப் போரின்போது அமெரிக்கத் தலைமையிலான மேற்குலகத் தொடர்பு சாதனங்களால் பெரிதும் கையாளப்பட்டு வந்தது. அன்றிலிருந்து, விடுதலைப் போராட்டங்களின் வீரியத்தைச் சிதைக்கும் நோக்குடன், இத்தகைய கருத்துத் திணிப்புக்களை ஆக்கிரமிப்பாளர்கள் கையாள முனைகின்றனர்.

மேலெழுந்தவாரியாக நோக்கும்போது, போர் தொடர்பான இந்தக் கருத்துக்கள் சரியானதாகத் தென்பட வாய்ப்புக்கள் உண்டு. ஆனால் அவற்றைச் சொல்பவர்களின் நோக்கங்களை ஆராய்ந்து பார்த்தால், ஒரு சூழ்ச்சி அரசியல் அங்கிருப்பதைக் காணமுடியும். பொதுவாக, போரில் ஈடுபடும் அரசுகளின் படைகள் போருக்கு வேண்டிய முழு வசதிகளுடனும் தயார்நிலையில் இருக்கும். போர் தொடங்கினால், குறித்தகால இடைவெளிக்குள் ஏதோ ஒரு நாடு வென்று போரை முடித்துவிடும். அதாவது, போர் தொடக்கப்பட்டதற்கான இலக்கை சொற்ப காலத்தில் அடைந்துவிட அல்லது அதில் தோல்வி அடைய அதிக வாய்ப்புக்கள் உண்டு.

ஆனால், ஒரு விடுதலைப் போராட்டம் அத்தகைய பரிமாணத்தில் நிகழமாட்டாது. ஒரு அரசின் படையைப்போல ஒரு விடுதலைச் சேனை, முழுமையாகவும்-தயார்நிலையிலும் நின்றபடி திடீரென விடுதலைப் போரைத் தொடுப்பது, சாத்தியமில்லை.

முதலில் விடுதலைக்கான போரின் விதை விழவேண்டும். பின் அது முளைத்து-துளிர்விட்டு-வளர்ந்து-கிளை-பரப்பி-விடுதலைப் படை என்ற மரமாகி முழுமைபெற, பல பத்தாண்டுகள் செல்லும்.

ஒரு விடுதலைச் சேனை வளர்ந்து முழுமைபெற எடுக்கும் காலம் வரை விடுதலைப் போரும் நீளும். ஆக்கிரமிப்புப் படைக்கு நிகராக அந்த விடுதலைப் படை வளர்ந்ததும், போர் உச்சக்கட்டத்தை அடைந்து, பின்னர் குறுகிய காலத்தில் போர் முடிவடைந்துவிடும். வியட்னாமிலும் அதுதான் நடந்தது. சீனாவிலும் அதுதான் நடந்தது. எரித்திரியாவிலும் அதுதான் நடந்தது. தமிழீழத்திலும் அதுதான் நடக்கப்போகின்றது.

இந்தநிலையில், ஒரு விடுதலைச் சேனை தனது உயர்வளர்ச்சியைத் தொட எடுக்கும் அந்த நீண்டகாலத்தைத் தமக்குச் சாதகமாக எடுக்கும் எதிரி அரசுகள், போரின் வெற்றி தொடர்பான அவநம்பிக்கைக் கருத்தைப் போராடும் மக்கள் மத்தியில் பரப்ப, அதைத் தகுந்த வாய்ப்பாகப் பயன்படுத்துகின்றன. வியட்னாமில் அமெரிக்கா அதைத்தான் செய்தது. தமிழீழத்தில் அதைச் செய்ய சிங்கள அரசும் முயல்கின்றது.

எமது விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை, ஜேஆரின் ஆட்சிக்காலம் வரை, தமிழீழ விடுதலைப் போரை, "முடிவில்லாப் போர்" என்றோ அல்லது "எவருமே வெற்றி-பெற முடியாத போர்" என்றோ யாருமே பெரிதாக அழைக்கவில்லை. மாறாக, "6 மாதத்தில் எல்லாவற்றையும் முடித்துவிடுவோம்" என்றும், "மிக விரைவில் புலிகளை அழித்துப் போரை வென்றுவிடுவோம்" என்ற எதிர்வு கூறல்களையும், வெற்றிப் பிர-கடனங்களையுமே சிங்கள அரசியல்வாதிகளும், பேரினவாத சக்திகளும் கூறிவந்தன. ஆனால், சிங்களதேசம் எதிர்பார்த்ததுபோல தமிழீழ விடுதலைப் போராட்டம் அழியவில்லை. மாறாக வளர்ந்தது.

இந்தப் போராட்ட வளர்ச்சியைக் கண்ணாரக்கண்டபடி சனாதிபதியாக வந்த திருபிரேமதாசா, "போரில் தோற்றவர்களே உண்டு. வென்றவர்கள் இல்லை" என்று தனது



ஆட்சிக்காலத்தில் கூறியிருந்தார். போர், மக்களுக்குக் கொடுத்த துயரங்களிலிருந்து பிறந்த ஞானம் அல்ல அது. மாறாக, விடுதலைப் போரின் வளர்ச்சி கொடுத்த விரக்தியில் -அல்லது இயலாமையில்-எழுந்த உள்நோக்கம் கொண்ட கூற்றே அதுவாகும்.

போர் என்று வந்துவிட்டால், அது-விடுதலைப் போரோ, ஆக்கிரமிப்புப் போரோ-ஏதோ ஒரு தரப்பு வெற்றியையும், மறு தரப்பு

தொடர்ச்சி : 13 ஆம் பக்கம் பார்க்க.

**போர், உயிரழிவுகளையும் சொத்தழிவுகளையும் கொண்டுவருகின்றது என்பது உண்மையே. அதனால், மனிதகுலம் காலாதிகாலமாக அளப்பரிய சோகங்களைச் சுமந்து வருகின்றது என்பதும் உண்மையே. ஆனால், ஒரு நாட்டை எதிரியானவன் தனது படைபலம் கொண்டு ஆக்கிரமிக்க முயலும்போது, அல்லது ஒரு இனஅழிப்பில் எதிரிப்படைகள் ஈடுபட முனையும்போது, இவற்றிலிருந்து பாதுகாப்பைத் தேடிக்கொள்வதற்காகத் தற்காப்புப் போர் ஒன்றை நடாத்துவது, தவிர்க்க முடியாதது. அத்துடன் அத்தியாவசியமானதும் கூட.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேசிய பாதுகாப்பே அடிப்படைப் பிரச்சனை

**"விடுதலைப் புலிகள் தான் சமாதான முறையிலான தீர்வுகளுக்குத் தடையாக இருக்கின்றனர்"**

**"விடுதலைப் புலிகள் தென்னாசிய பிராந்தியத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளனர்"**

இவை இரண்டும் சந்திரிகா அரசினாற் படுவேகமாகப் பரப்பப்பட்டுவரும் இரண்டு திரிபுவாதங்கள். ஒரு பொய்யை எவ்வளவுக்கு எவ்வளவு அழுத்தமாகத் திருப்பித் திருப்பிக் கூறமுடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு அது உண்மையானதாக மாறிவிடும் என்பது சர்வாதிகார உளவியற் தத்துவம். இதனையே இன்று அம்மையார் சந்திரிகா கெட்டித்தனமாகச் செய்கிறார். ஆயினும் கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத் தான் என்பது நம்தமிழர் அனுபவ மொழி.

> ஜிகோமோ லூசியானி, 'பாதுகாப்பின் பொருளியல் உள்ளடக்கம்' எனும் நூலில் கூறுவதுபோல் தேசிய பாதுகாப்பு என்பது "வெளியாரின் ஆக்கிரமிப்புக்கு எதிர்த்து நிற்கும் ஆற்றல் ஆகும்".

தமிழ்மக்கள் மீது அனைத்துலகப் போர்க் குற்றங்களான 'மக்கள் மேல் முற்றுகை', 'மக்கள் மீது போர் தொடுத்தல்' எனும் இரண்டையும் ஏககாலத்தில் மேற்கொண்டுள்ள சந்திரிகா, அனைத்துலக நாடுகளின் முன்பாகத் தனது செயலை நியாயப்படுத்துவதற்கான முயற்சியாக, "இந்தப் போர் தமிழர்களுக்கு அமைதியை ஏற்படுத்துவதற்கான ஒரு முன் நிபந்தனை" எனக் காட்ட முனைகிறார்.

ஐக்கிய தேசியக் கட்சி நடாத்திய போரால் அனைத்துலகச் சமூகத்திற் தமிழர்கள் இனஅழிப்புக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்ற உண்மை உணரப்பட்டது. இதுவே தமிழர்களுக்கான அனைத்துலக ஆதரவின் அடித்தளம் என்பது சந்திரிகாவின் கண்டுபிடிப்பு. எனவே தனது புத்திஜீவித்தனத்தைப் பயன்படுத்தி, "சிறீலங்கா அரசு மனித உரிமைகளை மதிக்கும், சமாதான வழிகளை நாடும் சனநாயக அரசு; விடுதலைப் புலிகள்தான் சமாதானத்துக்கான வழிகளைத் தடுத்து மக்களைச் சனநாயக ஓட்டத்திலிருந்து தனிமைப்படுத்துகின்றனர். ஆகவே தமிழர்களுக்கு எதிராக அல்ல, விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே நாம் போரில் ஈடுபட்டு இருக்கிறோம்" என்று பிரச்சாரப்படுத்துவதே சந்திரிகாவின் சதிகார நோக்கு. இதற்கான ஒரு தொழில் நுட்ப ஊடகமாகவே சமாதானப் பேச்சுவார்த்தைகளைச் சந்திரிகா கையாண்டார்.

> ஒரு நாட்டின் அரசியல், பொருண்மிய, சமூகச்சூழல்களும் இன்னொரு நாட்டின் அரசியல், பொருண்மிய, சமூகச்சூழல்களும் வித்தியாசமானவை. எனவே ஒரு நாட்டிற்கு அங்கீகாரம் அளிப்பதினால் மறு நாடு பாதிக்கப்படும் என்பது அர்த்தமற்றது.

"போரை நிறுத்தி இனப்பிரச்சினைக்கு அமைதிவழித் தீர்வு காண்பேன்" என்ற தேர்தல் வாக்குறுதியூடாகச் சிங்கள மக்களின் ஆணையைப் பெற்றுப் புதிதாக ஆட்சி அமைத்த சந்திரிகாவுக்கு, விடுதலைப் புலிகள் தம்மால் இயன்றளவு ஆதரவும் போதிய கால அவகாசமும் வழங்கினர்.

சந்திரிகா அம்மையாரும் மக்களைக் கவரும் நோக்கில் முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையில் "அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தேவையான தீர்வு பற்றி முதலிற் பேசுவோம்" என்ன நிகழ்ச்சி நிரல் அனுப்பினார். ஆனால் இந்த முதலாம் கட்டப் பேச்சுவார்த்தைகளில் சிறீலங்கா குறிப்பிட்ட மக்களின் அன்றாடப் பிரச்சினைகளான பொருண்மியத் தடைநீக்கம், போர் நிறுத்தம், கடல் வலயத்தடை நீக்கம், மீளக்குடியமர்வு, புனரமைப்பு அதன் தொடர்ச்சியான அபிவிருத்தி என்பனவற்றில் ஒன்றுகூடச் சிறீலங்காவால் முழு அளவிற் தீர்க்கப்படவில்லை என்பது யதார்த்தம்.

இரண்டாங்கட்டப் பேச்சுக்களின் போது, சிறீலங்கா அரசு, இழப்பின்றித் தனது இராணுவ நிலைகளைப் பேணுதல் என்ற உள்நோக்கையுடைய மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தைச் செய்தது.

மூன்றாங்கட்டப் பேச்சிற் கடல்வலயத் தடைநீக்கம் என்ற முடிவு இருதரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட போதிலும், மறுநாள் விடிவதற்கிடையில் இதனை சிறீலங்கா மீறியமையை அதன் செய்தித்தாட் குறிப்புக்கள் புலப்படுத்தின.

மூன்றாங்கட்டப் பேச்சுவார்த்தையிற் பாதைதிறப்பு விவகாரத்தை, மக்களின் நடமாட்டச் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் வலியுறுத்தக் கூடிய முறையில் விடுதலைப் புலிகள் முன்வைத்ததும், அரசு இழுத்தடிக்கத் தொடங்கியது. இதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு.

முதலாவது சிறீலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளதும் அனைத்துலக நிதியங்களதும் நிதி உதவிகளைப் பெருக்கி, திறைசேரியைப் பலப்படுத்திப்பொருண்மியப் பலவீனத்தாற் போர் நடத்த முடியாமற் போய்க் கொண்டிருந்த சூழ்நிலையை மாற்றி, போரைத் தொடர்வது என்பது சிறீலங்காவின் உள்நோக்கு. இதற்காகவே 4000 கோடி ரூபாவைப் புனரமைப்புக்கான நிதியாக வழங்குவோம் எனத் தொடக்கத்திற் சிறீலங்கா கூறியது. ஆனால் விடுதலைப் புலிகளோ குறைந்த பட்சப் புனரமைப்புத் தேவையாக 31,500கோடி ரூபா இருப்பதை திட்ட வரைபு மூலம் சிறீலங்காவுக்கு விளக்கினர். இந்தத் தேவைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த வெளிநாடுகள் பல, நேரடியாகவே வடக்கு-கிழக்கின் புனரமைப்புக்கு உதவக்கூடிய சாத்தியங்களை வெளிப்படுத்தினர். இதனாற் திகைப்புற்ற சிறீலங்கா, முதலாங்கட்டத்தில் வடக்கு-கிழக்கின் புனரமைப்பு என்றுகூறி, இரண்டாங் கட்டத்தில் வடக்குக்கு மட்டும் எனமாற்றி, மூன்றாங்கட்டத்தில் யாழ் மாநகர சபையின் எல்லைக்கு எனக் குறுக்கி, இறுதியில் எதையுமே நடைமுறைப்படுத்தவில்லை.

மேலும் இரண்டாவது காரணம், இக்கால கட்டத்தைத் தமிழீழ மக்களின் தேசிய பாதுகாப்பைச் சீர்குலைப்பதற்கான இராணுவ, இராசதந்திர, அரசியற் சாணக்கியமாக மாற்றச் சந்திரிகா முயற்சித்தாரேயன்றி, மனத்தளவிற் கூட இனப்பிரச்சினைக்கான தீர்வினை முன் எடுக்கக் கூடிய செயற்திட்டம் எதையும் வெளியிடவில்லை. இதன்மூலம், "இலங்கைத் தீவு பல்லின மக்கள் தொகுதியைக் கொண்ட நாடல்ல. ஆகவே அதற்குப் பல்லின மக்கள் தொகுதிக்கு அதிகார பரவலாக்கலை மேற்கொள்வதற்கான எந்த அரசியற் தொழில்நுட்பங்களும் ஒத்துவராது" என்பதைச் சிறீலங்கா அரசு மீண்டும் நிரூபித்துக் கொண்டது.

> "போரை நிறுத்தி இனப்பிரச்சினைக்கு அமைதிவழித் தீர்வு காண்பேன்" என்ற தேர்தல் வாக்குறுதியூடாகச் சிங்கள மக்களின் ஆணையைப் பெற்றுப் புதிதாக ஆட்சி அமைத்த சந்திரிகாவுக்கு, விடுதலைப் புலிகள் தம்மால் இயன்றளவு ஆதரவும் போதிய கால அவகாசமும் வழங்கினர்.

இந்நிலையில் தீர்வு எதுவும் கொண்டு வரப்படாமற்கால வீணாக்கம் செய்யப்படுவதைத் தடுக்க விடுதலைப் புலிகள் காலக்கெடு விதிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இக் காலக்கெடு மூன்று நோக்குடன் விதிக்கப்பட்டது.

அ:- காலக்கெடு விதித்ததன் ஊடாகச் சிறீலங்கா கீழ் இறங்கிச் செயற்பட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்கச் சந்தர்ப்பம்.

ஆ:- மாறாகச் சிறீலங்கா போரைத் தொடர விரும்பினால், அதனுடைய பொருண்மியப் பலவீனத்தைத் தொடரச் செய்து அதன்மூலம், போரிற் சிறீலங்கா தோல்வி அடைவதைத் துரிதப்படுத்துவதற்கான அவசியம்.

இ:- அனைத்துலக நிதி நிறுவனங்களிடமிருந்து சிறீலங்கா வடக்கு-கிழக்கின் புனரமைப்பு என்ற போர்வையிற் பெற இருந்த பெருந்தொகை நிதியைத் தடுத்து, 'அபிவிருத்தி என்பது அமைதியே' என்ற 'யுனெஸ்கோ' நிறுவனத் தலைவரின் கருத்துக்கமைய, உண்மையான அபிவிருத்திக்கு நிதி பயன்படுவதானால் அமைதி ஏற்பட வேண்டும் என்பதை நிறுவுதல்.

எல்லாவற்றுக்கும் மேலாக விடுதலைப் புலிகள், அமைதிக்கு உண்மையான அச்சாரம், 'முழு அளவிலான போர் நிறுத்தத்தின்' முக்கியத்துவத்தை உணர்த்துவதே எனக்கருதினர். எனவே காலக்கெடு போரைத் தொடங்க

## உலக நாடுகள் புரிந்து கொள்ள வேண்டிய உண்மை

வேண்டும் என்பதற்காக அல்ல, தீர்வுகள் விரைவுபட வேண்டும் என்பதற்காகவே முன்வைக்கப்பட்டது. இதனாலேயே சித்திரை 19 ஆம் நாள்வரை 2 வது அவகாசம் வழங்கப்பட்டது. முதலாவது கால அவகாசத்தைத் தொடர்ந்து, பங்குனி 24 ஆம் நாள் தடைநீக்க அறிவிப்பொன்றை விடுத்த சிறீலங்கா, மீண்டும் போர் தொடங்கும்வரை அதனை உத்தியோக பூர்வமாகப் பிரகடனப் படுத்தவோ நடைமுறைப் படுத்தவோ இல்லை.

மாறாக இந்த மோதல் தவிர்ப்புக் காலத்தில் 130 மோதல் தவிர்ப்பு மீறல்களைச் சிறீலங்கா செய்ததும் அல்லாமல், தென்தமிழீழத்திற் போர்க் காலத்தை விட அதிகமான கொடுமைகளையும் புரிந்துள்ளது.

இதன் அடிப்படையில் தமிழீழ மக்களது தேசியப் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டிய காலக்கட்டாயத்திற்குஏற்ப, விடுதலைப் புலிகள் ஆயுத எதிர்ப்பைத் தொடங்கினர். ஜிகோமோ லூசியானி, 'பாதுகாப்பின் பொருளியல் உள்ளடக்கம்' எனும் நூலில் கூறுவதுபோல் தேசிய பாதுகாப்பு என்பது "வெளியாரின் ஆக்கிரமிப்புக்கு எதிர்த்து நிற்கும் ஆற்றல் ஆகும்". இது ஆயுத வலிமையுடைய ஆக்கிரமிப்பு அரசுக்கு எதிராக, ஆயுத எதிர்ப்பாலேயே செயற்படுத்தப்பட வேண்டியதொன்றாக உள்ளது. 1972 இல் சிங்கள பௌத்த பேரினவாதக் குடியரசால் நாடற்ற நாட்டினமாக மாற்றப்பட்ட தமிழீழ மக்களின் தேசியப்பாதுகாப்பின் அமைப்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் திகழ்கின்றனர். இதனால் விடுதலைப் புலிகள் தேசியபாதுகாப்பிற்காக முயற்சிகளை எடுக்கும் பொழுது, அதனைப் பயங்கரவாதம் என்ற பெயரில் கொச்சைப்படுத்த முயல்வது வழமை. இந்த உண்மைகளை வெளிநாடுகள் உணர்வதுடன், "ஒரு அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய பாதுகாப்புக்காகக் கட்டி எழுப்பப்படும் பாதுகாப்பு முயற்சிகளைத் தென்னாசியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலென்பது, சிறீலங்காவினதும் இந்தியாவினதும் விசமத்தனமான பிரச்சாரமே. இந்தியா, தமிழீழ மக்களின் தமிழர் எனும் இன அடையாளம் ஊடாக தமிழீழ மக்களுக்குக் கிடைக்கும் சுயநிர்ணய உரிமை தனது ஆதிக்க நலன்களைப் பாதிக்கும், தமிழ் நாட்டுத் தமிழரிடையே சுயநிர்ணய உரிமைக் குரலைத் தூண்டும் எனும் சுயநல நோக்குடன் செயற்படும் நிலையை மாற்றவேண்டிய நேரம் இது. ஒரு நாட்டின் அரசியற், பொருண்மியச், சமூகச், சூழல்களும் இன்னொரு நாட்டின் அரசியல், பொருண்மிய, சமூகச் சூழல்களும் வித்தியாசமானவை. எனவே ஒரு நாட்டிற்கு அங்கீகாரம் அளிப்பதினால் மறு நாடு பாதிக்கப்படும் என்பது அர்த்தமற்றது.

ஆகவே இறுதியாக உலகெங்கும் வாழும் தமிழர்கள் இந்த உண்மைகளை எடுத்துரைத்துத் தாம் வாழும் பிரதேசங்களில் உள்ள அரசுகளுக்கு 'இலங்கைத் தீவின் அரசியல் யதார்த்தத்தைப்' புரிய வைக்க வேண்டும். இதுவே சந்திரிகாவின் பொய்யானஅனைத்துலகப் பிரச்சார வலையை அறுத்தெறிய ஒரே வழி.

பற்றிமாகரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மேற்குலக இராஜதந்திரமும் புலிகளின் நிலைப்பாடும்

சமாதானப் பேச்சிலிருந்து புலிகள் இயக்கம் விலகிக் கொண்டதையிட்டுப், பல மேற்குலக நாடுகள் கண்டன அறிக்கைகள் வெளியிட்டுள்ளன. நிலைமைகளை ஆராயாமல்-அவசரப்பட்டுப், புலிகளிற்கு எதிராகத் தெரிவிக்கப்பட்ட இந்தக் கண்டனம், உண்மையிற் கவலைதரக்கூடிய ஒரு விடயமாகும். அத்துடன் இந்த நிலைப்பாடு ஏற்படுத்தப்போகும் விளைவுகள், இலங்கைவாழ் மக்களின் எதிர்கால அரசியலிற் பாதிப்பையும்-குழப்பத்தையும் உண்டு பண்ணலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

புலிகள் மீது கண்டனக் கணைகளை வீசிய அதேவேளை, சிறீலங்கா அரசை ஆதரித்துப் புகழ்ந்துரைத்த மேற்கு நாட்டு அரசுகளின் செயல், நிச்சயமாக, நிதானமற்ற நிலையில் எடுக்கப்பட்ட குழப்பகரமான ஒரு அரசியல்



நகர்வு என்பதில் ஐயமில்லை.

வன்முறை அரசியலுக்குத் தீர்வுகாண முயன்ற ஒரு

பேச்சுக்களில் ஈடுபட்ட ஒரு பகுதியினர், நடந்து முடிந்த பேச்சுக்களின் பெறுபேறுகளை எடைபோட்டு-அது திருப்தி அளிக்காத பட்சத்தில்-தமது விருப்பத்தின் பேரில் அந்தப் பேச்சுவார்த்தையிலிருந்து விலகிக்கொள்ள, அவர்களுக்கு உரிமை உண்டு. புலிகளைக் கண்டிப்பதிற் காட்டிய அவசரத்தில், சனநாயக விழுமியங்களில் ஒன்றாகிய அந்த அரசியல் உரிமையை மேற்கு நாட்டு அரசுகள் கௌரவிக்கத் தவறியதுடன், அதை மறுக்கும் நிலைக்கும் சென்றுள்ளன. இது உண்மையில் ஏமாற்றத்தை அளிப்பதாகவே உள்ளது.

இந்தநிலையில், புலிகள் இயக்கம் மீது மேற்குலகம் தொடுத்த கண்டன அறிக்கைகளுக்குப் பின்னால், ஏதாவது காரணிகள் உண்டா என்ற கேள்வியும் எழுகின்றது. இந்தக் கண்டன அறிக்கையை, வெறுமனே, ஒரு இராசதந்திரத் தவறாகவும் குறைத்து மதிப்பிட முடியாதுள்ளது. இத்தகையதொரு கண்டன அறிக்கையால் வரும் பாதக விளைவுகள் பற்றியும், அத்தகைய அறிக்கை ஒன்றைத் தவிர்ப்பதால் வரும் நன்மைகள் பற்றியும் மேற்குலக நாடுகளுக்கு நிறைய அனுபவம் உண்டு. அப்படியாயின், அவை ஏன் அவசரப்பட்டு கண்டன அறிக்கைகளை வெளியிட்டன!

அரச-புலிகள் பேச்சுவார்த்தை மேசையில் என்ன நடைபெறுகின்றது! அது எதை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என்று, பேச்சுவார்த்தையின் போக்கை நாடிபிடித்துப் பார்க்கும் அளவுக்கு, மேற்குலக அரசுகளிடம் தகவல்கள் சென்றடையவில்லை என்றும் கூறமுடியாது. அதே வேளை, தலைவர் பிரபாகரனுக்கும்-சிறீலங்கா சனாதிபதிக்கும் இடையிற் பரிமாறப்பட்ட கடிதங்கள், பேச்சுவார்த்தையின் போக்கையும்-அது தொடர்பாகப் புலிகள் இயக்கம் கொண்டிருந்த அதிருப்தியையும், சிறீலங்கா அரசின் அசமந்தப் போக்கையும் துலாம்பரமாக

களைச் சந்தித்துப், பேச்சுவார்த்தையின் முன்னேற்றங்கள் பற்றியும், பேச்சிற் புலிகள் காட்டிய அக்கறைபற்றியும் கேட்டு-அறிந்து சென்றார்களே! இந்த இராசதந்திரிகள் தத்தமது அரசுகளுக்கு இவற்றைத் தெரிவிக்காது விட்டிருக்கவும் முடியாதே! அப்படியாயின், இந்த மேற்கு நாட்டு அரசுகள், ஏன் தங்களது நடுநிலைத் தன்மையை உதறித் தள்ளிவிட்டுப் புலிகள் இயக்கத்தைக் கண்டித்தார்கள்! பேச்சிலிருந்து வெளியேறுவது என்ற புலிகளின் முடிவு, இந்த மேற்கு நாடுகளின் தேசிய நலன்களுக்கு ஏதாவது ஊறுவிளைவித்து விட்டதா! ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்லமுடியும். சிறீலங்காவில் ஒரு அரசியற் திடநிலை ஏற்படவேண்டும் என்று மேற்கு நாடுகள் விரும்பின. இதன்மூலம் தத்தம் நாடுகளில் உள்ள பல்லாயிரம் அகதிகளை மீளவும் இலங்கைக்கே திருப்பி அனுப்ப முடியுமென்றும் ஆசைகொண்டிருந்தன. அப்படி நடந்தால் அது தங்களது நாடுகளின் சமூக உறுதிப்பாட்டுக்கு உதவி புரியும் என்றும் நம்பியிருந்தன. இத்தகையதொரு எதிர்பார்ப்பு மேலைநாட்டு அரசுகளிடம் இருந்திருந்தாலும், புலிகளிற்கு எதிரான கண்டன அறிக்கை, அவர்களது எதிர்பார்ப்பிற்கு மேலும் பாதகத்தையே கொடுக்கலாம். அத்துடன், குறித்த இந்த மேற்கு நாடுகளிற் பொருண்மிய நெருக்கடி இருந்தபோதிலும், இந்த அகதி மக்களுக்கு உதவும் விடயத்தால் அந்த நாடுகளின் பொருண்மியத்திற்கு நிச்சயமாக எந்தப் பாதிப்பும் ஏற்படாது. அப்படியாயின் புலிகள் இயக்கம் மீதான கண்டனத்திற்கு என்னதான் காரணமோ! சிலவேளை, முடிவில்லாமல் இழுபடும் போராலும் பேச்சுத் தோல்வியாலும் விரக்தி அடைந்த மேற்கு நாடுகள், புலிகளை மீண்டும் பேச்சிற்கு இழுப்பதற்கான ஒரு அழுத்தமாக அந்தக் கண்டனக் கணைகளைப் பயன்படுத்தியிருக்கலாமோ! இலங்கையில் சமாதானம் நிலவவேண்டும் என்ற விருப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகக் கருதலாமா....! அப்படியாயின், இவ்வித கண்டன அறிக்கை அந்த விருப்பைப் பிரதிபலிப்பதாக இல்லையே!


புலிகள் இயக்கம் மீதான கண்டனத்திற்கு என்னதான் காரணமோ! சிலவேளை, முடிவில்லாமல் இழுபடும் போராலும் பேச்சுத் தோல்வியாலும் விரக்தி அடைந்த மேற்கு நாடுகள், புலிகளை மீண்டும் பேச்சிற்கு இழுப்பதற்கான ஒரு அழுத்தமாக அந்தக் கண்டனக் கணைகளைப் பயன்படுத்தியிருக்கலாமோ! இலங்கையில் சமாதானம் நிலவவேண்டும் என்ற விருப்பின் அடிப்ப டையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகக் கருதலாமா....! அப்படியாயின், இவ்வித கண்டன அறிக்கை அந்த விருப்பைப் பிரதிபலிப்பதாக இல்லையே!

உண்மையில், பேச்சுக்கள் முறிந்ததால் எழுந்த ஏமாற்றத்தையும்-அதிர்ச்சியையும் வெளிப்படுத்த, இந்த மேற்கு நாட்டு அரசுகள், மென்போக்கான இராசதந்திர வழிகளைப் பயன்படுத்தியிருந்தாற் கூடிய அளவு பயன் ஏற்பட்டிருக்கும். பேச்சுக்கள் முறிந்திருந்தாலும்கூட, அதை மீண்டும் தொடங்கும் உயரிய நோக்குடன், இருதரப்பாரினதும் வாதங்களைக் கருத்திலெடுத்து, நம்பிக்கைதரும் தொனியுடனேயே இந்த மேற்கு நாடுகளின் கொள்கைப் பிரகடனம் அமைந்திருக்க வேண்டும்.

சமாதானப் பேச்சு, இடைநடுவிற் கைவிடப்படுவதை, உலகில் எந்த ஒரு மனிதனும் விரும்பமாட்டான். அந்தளவுக்குச் சமாதானம் என்பது மனிதகுலத்தால் நேசிக்கப்படுகின்றது. பகைமை கொண்டு போரிட்ட இரண்டு தரப்பினர், சமாதானத்தை நிலைநாட்டும் இலட்சியத்துடன் ஒரு பேச்சுவார்த்தையிற் பங்கு கொள்வது என்பது இயல்பே. ஆயினும், பேச்சுவார்த்தைகளிற் பங்குபெற வேண்டும் என்ற முடிவை, எந்தத் தரப்பும் கண்ணைமூடிக் கொண்டு எழுந்தமானமாக எடுக்க விரும்பாது. புறச்சூழலை நன்றாக எடைபோட்டு, அரசியல் நிலைமைகளை நுட்பமாக ஆராய்ந்து அதற்கான முடிவுகளை எடுப்பதே வழமை. மனிதகுல வாழ்வின் அனைத்து அம்சங்களைப் போலவே, நிரந்தரமானதென்று இவ்வுலகில் எதுவுமில்லை. எல்லாமே தொடர்ச்சியாக மாறிக்கொண்டே இருக்கின்றன. அதுவும் அரசியற் களத்தைப் பொறுத்தளவில், இன்றைய எதிரி நாளைய நண்பனாகலாம். இன்றைய வல்லரசு நாளை வலுவிழந்த அரசாக மாறலாம். இந்த நிலையற்ற உலகில், எதுவும் எப்போதும் நடக்கலாம். இந்தப் பேருண்மையை மேற்கு நாடுகளின் அரசுகளைவிட வேறு யார்தான் நன்றாக அறிந்திருப்பார்கள்! அப்படியிருந்தும், அரசு- புலிகள் அமைதிப் பேச்சு முறிவு தொடர்பான கொள்கைப் பிரகடனத்தைத் தயாரிக்கும்போது, மேற்குறித்த அரசியல் உண்மைகளைக் கருத்திலெடுக்க, மேற்கு நாடுகள் தவறிவிட்டன.

இதேவேளை, இன்னுமொரு விடயம் பலத்த ஏமாற்றத்தை அளிக்கும் வகையிலுள்ளது. அதாவது, அரசியற்

எடுத்துக்காட்டப் போதுமானதாக இருந்தன. அப்படியானால், பகிரங்கமாக வெளியிடப்பட்ட இந்தக் கடிதங்கள்



மேற்குலக அரசுகளைச் சென்றடையவில்லை என்றுங் கூறமுடியாது. அத்துடன், மேற்குலக இராசதந்திரிகளின் குழுவொன்று யாழ்ப்பாணம் வந்து, புலிகளின் பிரதிநிதி-

"கண்டனம்" என்ற பதத்திற்குப் பதிலாகக், "கவலை அடைந்துள்ளோம்" அல்லது "ஆழ்ந்த கவலை

தொடர்ச்சி: 16 ஆம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கரும்புலி நாள்

## ஆடி 5



கப்டன் மில்லர் 05.07.87

தமிழீழமெங்கும் கரும்புலிகள் நினைவு [illegible] பெருமளிகள், [illegible] கொண்டாடப்படுகிறது. இந்த அழியாத காவியங்கள் நினைவின் காத்தில் செய்தித்தாளும் [illegible] வணக்கம் செலுத்துகிறது.

# அழியாத காவியங்கள்

உங்களது நினைவுகளில்
நாங்கள் தீக்குளிக்கின்றோம்.
எங்கள் ஊருக்குள்
உங்கள் உருவமில்லை
ஏன் முகவரியும் கூட—
எல்லாம் ஒரு நொடியின் துகளில்
பீறிட்ட கணநேர அதிர்வோடு
பெயரிழந்து போனது.
ஆனாலும்
காற்றுக் கடந்த திசைவெளியாவும்
புருவங்களை விரித்தபடி
பேசிக் கொள்கின்றன
உங்கள் பெயரை
உச்சரிக்க முடியவில்லை
நாங்கள் எங்களுக்குள்
தவிக்கிறோம்
பந்தலிடப்பட்ட அந்த இடத்தில்
உங்களது படமில்லை
ஆனாலும் உங்களது
விம்பங்கள்
சூரியனை மறைப்பதாய்
உணர்கிறோம்.
காலைப்பொழுது செடியொன்று
உங்களுக்காய் மலரவில்லை.
சுவரொட்டிகள்கூட

உங்கள் வசனங்களைத்
தாங்கியதாக இல்லை.
உங்களுக்கும் இது தெரியும்.
தெரிந்துதானே தீயாகத் துணிந்தீர்!
விடை கொடுக்காத அந்தக்
கணத்துக்காக நாங்கள்
ஏங்குகின்றோம்.
ஓவியப்படிவாக மனதில்
நிலைத்துப் போன
உங்கள் உருவங்களை
நாங்கள் எங்களுக்குள்
தேடிக்கொண்டு
கவிவரிக்குள் நிறைந்து போன
கற்பனைகளோடு
உங்களது கனவுகளைப் பார்க்கிறோம்
ஒன்று மட்டும் புரிகிறது.
எமது வரலாற்று
அரிச்சுவடிக்குஇரண்டுபக்கங்களில்லை.
மூன்றாக—
அதில் மறைந்து போய்
உமது பெயரும் முகமும்—
அந்தப் பக்கத்தின்
நினைவில்தான்
இப்போதெல்லாம்
நாம் தீக்குளிக்கின்றோம்.

பலாலி விமானத் தாக்குதலின் போது தாக்குதலுக்குச் சென்ற கரும் புலிகளுக்கும் தலைமைக் கட்டளை நிலையத்துக்கும் இடையில் இடம்பெற்ற உரையாடலின் சில பகுதிகள்

**தலைமைக் கட்டளையகம்** — பரணி என்ன மாதிரி! என்ன சாமான் மச்சான்! பொம்பரா! கெலியா!

**கரும்புலி** — கெலி ஒன்றும், பவல் ஒன்றும் எரியுது.

**தலைமைக் கட்டளையகம்**-சரி, சரி அப்படியே நீ என்னெண்டால் கவருக்குள்ளை வந்து நிண்டு போ. கவருக்குள்ளே நில். பில்டிங்கினுள் உள்ளிடு. அல்லது அந்தக் கூடாரங்கள் எல்லாம் இருக்குமெல்லோ அதுகளுக்குள்ள வந்து பார்த்துப் பார்த்து கிளியர் பண்ணிக்கொண்டு போங்கோ.

*இரண்டு கிலோ மீற்றர் நீள, 500 மீற்றர் அகல விமான ஓடுபாதையில் குண்டு வீச்சு விமானங்களைத் தேடிக் கொண்டிருந்தபோது—*

*இருளில் பதுங்கிக் கிடந்த இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் வெளிச்சங்களின் உதவியின்றியே மேல் எழுந்து தப்பிச் சென்று விடுகின்றன.*

தாக்குதலுக்குத் தலைமை தாங்கிச் சென்ற

**கரும்புலி மேஜர் கெனடி** - தேடித் தேடி தட்டிக் கொண்டு போறோம்.

**தலைமைக் கட்டளையகம்** — கெனடியா!

**கரும்புலி மேஜர் கெனடி** — ஓம் ஓம் புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.


**கட்டளையகம்** — மச்சான்! நீ என்ன மாதிரி நிற்கிறாய்! எங்கை நிற்கிறாய்!

**கரும்புலி மேஜர் கெனடி** — எனக்கு இரண்டு காலும் இல்லை அண்ணை. புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம், நானும் திலகனும். புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.

**கட்டளையகம்** — கெனடி, கெனடி–கெனடி– கலோ! திலகன், திலகன்–திலகன்–

கரும்புலிகளிடமிருந்து எதுவித பதிலும் இல்லை.

அதன் பின்பு. தமிழீழ வானம் இந்த சாகா மனிதர்களை அணைத்தவாறு நெருப்புக் கண்களுடன் அடுத்த நாள் காலை விடிந்து கொண்டு இருந்தது.



மேஜர் காந்தரூபன் 10.07.90



கப்டன் வினோத் 10.07.90



மேஜர் வரதன் 25.08.93



கப்டன் மதன் 25.08.93



கப்டன் சிவலோகன் 11.11.93



கப்டன் மதிநிலவன் 11.11.93



லெப். வீரமணி 11.11.93



லெப். நல்லதம்பி 11.11.93



மேஜர் திலகன் 02.08.94



கப்டன் திரு 02.08.94



கப்டன் வாமன் 19.09.94



கப்டன் லக்ஸ்மன் 19.09.94

www.tamilarangam.net


கப்டன் கொலின்ஸ் 10.07.90


லெப். கேர்ணல் போர்க் 23.11.90


மேஜர் டாம்போ 19.03.91


கப்டன் சிதம்பரம் 04.05.91


கப்டன் ஜெயந்தன் 04.05.91


மேஜர் புகழரசன் 29.08.93


கப்டன் மணியரசன் 29.08.93


மேஜர் கணேஸ் 11.11.93


மேஜர் தொண்டமான் 11.11.93


மேஜர் கலையரசன் 11.11.93


கப்டன் கரிகாலன் 11.11.93


கப்டன் ஐயனார் 11.11.93


கப்டன் சீராளன் 11.11.93


கப்டன் செந்தமிழ் நம்பி 11.11.93


லெப். ஜீவரஞ்சன் 11.11.93


லெப். செங்கண்ணன் 11.11.93


லெப். கண்ணன் 11.11.93


மேஜர் கோபி 12.11.93


மேஜர் கெனடி 02.08.94


மேஜர் ஜெயம் 02.08.94


கப்டன் நவரெட்ணம் 02.08.94


லெப். ரங்கன் 02.08.94


கப்டன் அங்கயற்கண்ணி 16.08.94


லெப். கேணல் நளாயினி 19.09.94


மேஜர் மங்கை 19.09.94


மேஜர் வித்தி 08.11.94


மேஜர் தணிகை மாறன் 19.04.95


மேஜர் கதிரவன் 19.04.95


மேஜர் மதிசா 19.04.95


கப்டன் சாந்தா 19.04.95

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பலாலியில்...

ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், புதிய அரசு பதவிக்கு வந்த பின்னர் மேற்கொள்ளப்படும் பாரிய இரா ணுவ நடவடிக்கை இதுவே என்றும் கூறப்படுகிறது. கவச வாகனங்களும், பீரங்கிகளும், டாங்கிகளும் கொண்டு நடத்தப்ப டும் இவ் இராணுவ நடவடிக்கை குடாநாட்டைக் கைப்பற்றும் நோக்கத்தினைக் கொண்டது எனத் தெரியவருகின்றது.

## மானிப்பாய் மருத்துவமனை மீது எறிகணை வீச்சு

மானிப்பாய் மருத்துவமனை மீது எறிகணை ஒன்று விழுந்து வெடித்ததில் நோயாளர்கள் பலர் காயமடைந்ததை அடுத்து, அவர்கள் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளனர். இத்தாக்குதலினால் மானிப்பாய் மருத்துவமனை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

## ஒரு இலட்சத்துக்கு அதிகமானோர் இடம்பெயர்வு

இந் இராணுவ நடவடிக்கையால் மூளாய், சுளிபுரம், கட்டுடை, கந்தரோடை, அளவெட்டி, பனிப்புலம் ஆகிய இடங்களில் ஏராளமான வீடுகள், கட்டடங்கள் சேதமடைந்துள்ளதாகவும், ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான பகுதிகளை நாடி இடம்பெயர்ந்துள்ளதாகவும் தளச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந் இராணுவ நடவடிக்கை சம்பந்தமான மேலதிக விபரங்கள், இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கப்பெறவில்லை.

# மண்டைதீவு...

போதும் இப்பாரிய தாக்குதல் குறித்து தகவல்கள் எதையும் முன்கூட்டியே அவர்களால் அறியமுடியாமற் போனதுபற்றி அவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். மேலும், இரா ணுவத்தினரின் பூரணகட்டுப்பாட்டி ற்குள் இருக்கும் ஒருதீவினுள் பலநூறு புலிகள் ஊடுருவி எவ்வாறு தாக்குதல் நடத்தினர் என இராணுவ வட்டாரங்களில் ஆச்சரியம் நிலவுவதாகவும் தெரியவருகிறது.

மேலும் சிலமணி நேரத் தாக்குதலில் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் கொல்லப்பட்ட இத்தாக்குதலின் திட்டமிடல் குறித்து இராணுவ வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. மண்டதீவில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் 4 அதிகாரிகளும் 111 இராணுவத்தினரும் கொல்லப்பட்டதாகச் சிறீலங்கா இராணுவத்தினர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளனர். இதில் 25 பேரைக் காணவில்லை எனவும் 40ற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

இன்னும் மூன்று மாதகாலத்துள் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படும் என ஒருதரப்பும், ஒருவருட காலத்துள் முடிவுக்குக் கொண்டுவரப்படும் என இன்னும் ஒருதரப்பும் யாழ்ப்பாணத்தின் மீதான படையெடுப்பு யூலைமாதத்தில் அல்லது ஆகஸ்ட் மாதத்தின் முற்பகுதியில் இடம்பெறுமெனவும் சிங்கள அரசியல்வாதிகள் ஒருபுறமும் இராணுவத்தரப்பு மறுபுறமும் கூறிக்கொண்டிருக்கையில், மண்டைதீவு இராணுவ நிலைகள் யாவும் சிலமணி நேரத்தாக்குதலில் விடுதலைப்புலிகளினால் அழிக்கப்பட்டுள்ளன.

மண்டைதீவுத் தாக்குதலில் வீரச்சாவடைந்த எட்டுப் போராளிகளின் வித்துடல்களுக்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீரஅஞ்சலி செலுத்தினர். அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் கடற்புலிகளின் 'பாண்ட்' இசைஅணி, விடுதலைப்புலிகளின் மாணவர் அமைப்பின் 'பாண்ட்' இசைஅணி ஆகியவற்றின் அணிவகுப்பு மரியாதையுடன் போராளிகளின் வித்துடல்கள் வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி ஆகிய இடங்களுக்கு மக்களின் அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்பட்டது. வீதிகள் தோறும் மஞ்சள், சிவப்பு, கறுப்பு வர்ணக்கொடிகள் பறக்கவிடப்பட்டதுடன் பிரதான சந்திமுழுவதும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டும் இருந்தன. மலர்துவியும் தீபஒளி ஏற்றியும் மக்கள் அஞ்சலி செலுத்தினர். ஊர்வலத்தில் நாகர்கோவில், பருத்தித்துறை சிவன்கோவில் ஆகிய இடங்களில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. யாழ்பேருந்து நிலையத்தில் இறுதி அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து பூரண இராணுவ மரியாதையுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில், போராளிகளின வித்துடல்கள் புனித விதைகுழிகளில் விதைக்கப்பட்டன.

### பாவலரேறு

# பெருஞ்சித்திரனார்

# தமிழீழத்தூண்

பாவலரேறு பெருஞ்சித்திரனார் 11.06.95 அன்று, சடுதியாக மறைந்து போனது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு பெரும் இழப்பாக உள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழீழத்தில் பேராதரவாய் வெளிப்பட்ட குரல் அடங்கிவிட்டது.

போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளே விடுதலையை வென்று தருவார்கள் என்பதையும் மற்றவை போலிகள் என்பதையும், மழைக்கு முளைத்த காளான்கள், களையப்பட வேண்டிய களைகள் என்பதையும் புரிந்து கொண்டார். எனவேதான் 1990 ஆம் ஆண்டில் தமிழ் நிலம் இதழில் எழுதும்போது, "இறுதி வரை தாம் ஒரே கொள்கை தமிழீழ விடுதலைக் கொள்கையையே, என்னும் இலக்குடன் போராடி, இலங்கையின் வட-கிழக்குப் பகுதியில் உள்ள தமிழீழத்தை, இன்றைக்கு முழுவதும் கையகப்படுத்தியுள்ள, பெரு மாவீரன் பிரபாகரன் தலைமையிலுள்ள விடுதலைப் புலிகள் இருந்து வருவது, உலகத் தமிழினத்தை மிகவும் மகிழ்ச்சிக்கும் பெருமிதத்திற்கும் உள்ளாக்குகிற ஒரு சிறப்புச் செய்தியாகும்" என்று குறிப்பிட்டார். மேலும் அவர், 'தமிழீழ விடுதலைக்காக மட்டும் இது நடைபெறவில்லை. தமிழினத்தின் விடுதலைப் போரே இது! இப்போரின் முதல் படைத் தலைவனே பிரபாகரன்! எனவே தமிழினத்தின் சார்பில் போராடிக் கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஒருபோதும் பின்வாங்கக் கூடாது', என்று எழுதினார். சிறீலங்கா-இந்திய ஒப்பந்தத்தின் பின்னர், இந்திய 'அமைதிப்' படையுடனான சண்டையின் பின்னர், அவர் முழுமையாக விடுதலைப் புலிகளையே ஆதரித்துச் செயல்பட்டார், போராடினார், அடிபட்டார், சிறை சென்றார், அவர் எழுத்தும், சொல்லும், செயலும் இம்மாற்றத்தை தெளிவாக எடுத்துக் காட்டின.

அவர் 80 க்கும் மேற்பட்ட நூல்கள், பிரசுரங்களை வெளியிட்டதாக அறிகிறோம். அவற்றில் பல தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பற்றியதாக அமைகிறது. 'தமிழீழம்' என்ற சால், விரிவாகத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆராயும் சாலாகும். இந்சாலில் கால ஓட்டத்துடனான, அவரது படிமுறையான கருத்து மாற்றத்தைக் காண்கிறோம். 16 தடவைகள் தமிழுக்காகவும், தமிழனின் விடுதலைக்காகவும், தமிழீழப் போராட்டத்தை ஆதரித்தும் சிறை சென்றிருக்கின்றார். தமிழீழ விடுதலைப் புலிகளை இந்தியாவில் தடை செய்து தடா சட்டத்தின் கீழ் தமிழீழ ஆதரவாளர்கள் ஒடுக்கப்பட்டபோது, அதனை எதிர்த்துப் போராடி உள்ளார். தமிழீழ ஆதரவுப் பொதுக்கூட்டங்களும், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும், எழுத்துக்களும் அவரது போராட்டக் கருவிகள் ஆயின. இதன் விளைவாக, பலமுறை கைது செய்யப்பட்டு சிறைக்குள் அடைக்கப்பட்டு கொடுமைகளுக்கு உள்படுத்தப்பட்டார். இவரது உலகத் தமிழர் முன்னேற்றக் கழகமும் ஏனைய கட்சிகளும், இயக்கங்களும் இணைந்து நடத்திவரும் தமிழீழ, தமிழீழ விடுதலைப் புலிகள் ஆதரவுச் செயல்பாடுகளே தமிழ்நாட்டில் விடுதலை உணர்வைச் சூடாக்கி வருகின்றன. இதனை அவரே கவிதையாக

உலகமெனும் உருண்டைக்குள்

தமிழர்க்காக

உரிமையுள்ள ஒரு நாடு

தோன்றல் வேண்டும்

கலகத்தால் இனமழிந்து

சாகும் முன்னம்

கயவரெல்லதம் தமிழ்குலத்தை

அழிக்கும் முன்னம்



பகைவகற்ற

சூழ்ச்சியினால்

அதிகாரத்தால்

பைந்தமிழர்

நைந்தழிந்து

ஒழியுமுன்னம்

விலகட்டும் பகை!

உரிமைக்

கதிர்தோன் றட்டும்

விடியட்டும்

தமிழீழம்!

விளங்கட்டுமே!!

என்று பாடினார். 'தமிழீழத் தீர்விலேதான் தீர்வே அடங்கிக் கிடக்கிறது' என்று எழுதினார்.

'தமிழின வரலாற்றில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பின் மலைபோல் நிற்பவர் பிரபாகரனே! அவன் வீரத்திற்கு ஈடும் இல்லை, இணையும் இல்லை' என்று எழுதிய விடுதலைக் கவிஞன் இன்று எம்மோடு இல்லை. எமக்குஆதரவாகச் செயற்பட்ட அந்தத் தமிழ்ப் புயல் ஓய்ந்துவிட்டது. சுதந்திர கீதத்தை உயர்த்தி இசைத்த அந்தக் குயிலின் குரல் ஒடுங்கிவிட்டது. விடுதலைப் போர் முரசு அறைவதை நிறுத்திக் கொண்டது. ஆனால் அதன் அதிர்வு தமிழினம் விடுதலை பெற்று தனக்கென்றொரு சுதந்திர நாட்டை உலகில் நிறுவும் வரை தமிழ் நெஞ்சங்கள் அனைத்திலும் உணர்வு அலைகளை எழுப்பிய வண்ணம் இருக்கும்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

அனைத்துலகச் செயலகம்,

# புலிகளின்....

இதனைச் சிறீலங்கா புரிந்து கொள்ளவேண்டும் என டக்ளஸ் ஹேட் தெரிவித்தார்.

மேலும் குறிப்பிடுகையில், இது எந்த வகையிலும் தீவிர வாதிகளின் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்வதாக அர்த்தப்படுத்தப்படக் கூடாது எனவும் சிறீலங்கா அரசாங்கம் சமாதானத்தை அடையத் தாராளமான துணிச்சலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் பிரித்தானியா விடுதலைப் புலிகள் இயக்கத்தைப்பற்றி நன்கு புரிந்து கொண்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

# ஜேர்மனியிலும்.....

வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதிலளித்த இரு அமைச்சர்களும் ஜேர்மனியில் உள்ள தமிழர்கள் குழப்பங்களை விளைவிப்பவர்களாக இல்லை எனவும் இலங்கையில் வடக்கு-கிழக்கு பகுதிகளிற் காணப்படும் போர்ச் சூழ்நிலையினாலேயே அவர்கள் இங்கு தஞ்சம் அடைந்திருக்கின்றனர் எனவும் தங்களுக்குச் சில குழுக்களைப் பற்றித் தகவல்கள் கிடைத்துள்ள போதிலும் இக்குழுக்கள் வன்செயல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான எவ்வித ஆதாரமும் இல்லை எனவும் கூறி லக்சமன் கதிர்காமரின் கூற்றை நிராகரித்தனர்.

# சங்குப்பிட்டிப் பகுதியில் கடும் மோதல்

பூநகரி-சங்குப்பிட்டிச் சிறீலங்கா இராணுவ முகாமிலிருந்து முன்னேவந்து பதுங்கி இருந்த இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே அண்மையிற் கடும் மோதல் இடம்பெற்றது. மேற்படி முகாமில் இருந்து எழுநூறு மீற்றர் வரை முன்னேறியிருந்த இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இந்நேரடி மோதல் இடம்பெற்றது. சுமார் பதினைந்து நிமிடங்கள் வரை நடைபெற்ற இம்மோதலையடுத்துப் படையினர் பலத்த இழப்புக்களுடன் முகாமிற்குப் பின்வாங்கி ஓடிவிட்டனர். இந்நேரடி மோதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இறக்கைகளை விரித்தேன். உடல் மெல்ல மெல்ல மேலெழ, வானவெளிக்குள் எனது பிரவேசம். விமானங்களின் பேரிரைச்சலும் விமான விசிறிகளின் வேகமான வீச்சம் இல்லாததால் வான மண்டலம் அமைதியாக இருந்தது. இதமான காற்று வீசிக் கொண்டிருக்க உச்சிப் பனையைத் தொட்டும் தொடாமலும் பறந்து கொண்டிருந்தேன்.

செவிக்குள் நுழைந்தது.

"இது என்ன சினிமாப்பாட்டுப்போல கிடக்கே" சிந்தனையில் மெல்லிய பொறி.

"சந்திரிகா அரசின் சங்கடங்கள் ஒன்றா-இரண்டா எடுத்துச் சொல்ல' என அசரீரி தொடர்ந்தது.

ஓமோம் அதுவும் நியாயம்தான். அஸ்ரப்பின் இழப்பு ஒருபுறம்,

# சிட்டுவின் சிறகசைப்பு

மெல்லிய கோடாகத் தெரிந்த நெடுஞ்சாலையில் ஆளரவமெதுவுமில்லை. இரண்டு பக்கமும் நீண்ட வயல்வெளியும், ஆங்காங்கே பற்றைக்காடுகளும் தென்பட்டுக் கொண்டிருந்தது. அவற்றைத் தாண்டியபோது முடிவுறாத 'மகாதேவா தாம்போதி'. அதற்கப்பால் துப்பாக்கிகளை

தொண்டமானின் கடிப்பு மறுபுறம். சிறிமணியின் கிசுகிசுப்பு இன்னொரு புறம். சொந்த வீட்டிற்குள்ளேயே சிக்கல் என்பது போல் சுதந்திரக் கட்சியின் குழிபறிப்புக்கள் இன்னொரு பக்கம். பாவம் சந்திரிகா என்ன செய்வார்! என்றே சிந்தனை மேலோங்கியது. இறக்கைகளை ஓயாமல் அடித்து தாண்டிக்குளத்தையும் வவுனியாவையும் கடந்தேன். அடிபட்ட நாகம்

> ஓமோம் அதுவும் நியாயம்தான். அஸ்ரப்பின் இழப்பு ஒருபுறம், தொண்டமானின் கடிப்பு மறுபுறம். சிறிமணியின் கிசுகிசுப்பு இன்னொரு புறம். சொந்த வீட்டிற்குள்ளேயே சிக்கல் என்பது போல் சுதந்திரக் கட்சியின் குழிபறிப்புக்கள் இன்னொரு பக்கம். பாவம் சந்திரிகா என்ன செய்வார் என்றே சிந்தனை மேலோங்கியது. இறக்கைகளை ஓயாமல் அடித்து தாண்டிக்குளத்தையும் வவுனியாவையும் கடந்தேன்.

இறுகப் பிடித்தபடி ஒரு இடத்தில் நிலை கொள்ளாமல் அலையும் இராணுவச் சிப்பாய்கள். ஏக்கம் அவர்களது முகத்தில் அப்பியிருந்தது. விழிகள் பிதுங்கி பயத்தை வெளிக்காட்டிக் கொண்டிருந்தது. மெல்லப் பதிந்தேன். 'அப்பே ரட்ட, அப்பே ஆண்டுவ'. எனது குரலில் என்னையும் அறியாமல் ஒரு கம்பீரம்.

ஒவ்வொரு அசைவையும் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அந்தச் சிப்பாய் குரல் வந்த திசைக்குத் தன் கண்ணைத் திருப்பினான். அதற்கு முன்பாக அவனது துப்பாக்கியின் குழல் என்னை நோக்கித் திரும்ப, விசைகளின் விரலைப் பொருத்தி இலக்கு வைக்க எத்தனித்தான்.

அவனது தோளில் போய் குந்தி "எமது நிலம், எமது ஆளுகை, எதற்குக் குறிவைக்கிறாய்" என்று உலுப்பினேன்.

கையை விசிறி "-போ-போ-சனியன் பிடித்த சிட்டுக்குருவியே! புலிகளின் வரவுக்காய் காத்திருக்கும் எமக்குத் தொந்தரவு செய்யாதே" என்று கெஞ்சினான்.

"எதற்காகவோ-இந்தக் காத்திருப்பு"

-அவனது மௌனம் நீடித்தது.

"அப்பே ரட்ட, அப்பே ஆண்டுவ" என்று மீண்டும் உரத்துக் குரல் கொடுத்தபடி மேலே எழுந்தேன்.

"ஒன்றா-இரண்டா எடுத்துச் சொல்ல" என்றதொரு பாடலின் வரிகள் என்

போல 'அவ்ரோ' விமானங்களும், பல்லிழந்த பாம்புகள் போல உலங்கு வானூர்திகளும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது கண்ணில் தெரிந்தன. அனுராதபுரம் என்பதை ஊகித்துக்கொண்டு கொழும்பு நோக்கிய திசையில் என் பயணம் தொடர்ந்தது.

சோதனைச் சாவடிகளையும், பலப்படுத்தப்பட்ட பாதுகாப்புக்களையும் கடந்து கொழும்பு நகருக்குள் நுழைந்துவிட்டபோது, தேகமெங்கும் ஒருவித மெல்லிய நடுக்கம். எங்கு பார்த்தாலும் நவீன துப்பாக்கிகள் தாங்கிய கடற்படையும் பொலிசாரும். 'பேமன்ற்' தெருக்களில் செல்வோர் கூட, 'ஸ்டிங்கர்' என்றும் 'சாம்' என்றும் 'ஏவுகணைப் பீரங்கி' என்றும் உச்சரித்துக் கொண்டு செல்ல எனக்குள் இன்னும் அச்சம்.

சனாதிபதி மாளிகையில் அசையாமல் காவலுக்கு நிற்கும் சிவப்புச் சட்டைக்காரர்களைத் தவிர, உள்ளே மனித நடமாட்டம் எதையும் காணவில்லை. அப்பால் திரும்ப பழைய பாராளுமன்றம். அதுதான் சனாதிபதி செயலகம் அதை நோட்டம் விட்டேன். 'டிப்டொப்' உடையில் அதிகாரிகள் அதிநவீன ஆடம்பர வாகனங்களில் வந்து இறங்குவதும், 'பைல்'கட்டுக்களை கையில் தூக்கியவாறு அங்குமிங்கும் அலைவதும் மீண்டும் வாகனங்களுக்குத் தாவி மறைவதுமாக...

காட்சி என் கண்ணில் விரிந்தது.

மெதுவாகப் பறந்துபோய் இரும்புக் கம்பி வேலியின் ஒரு ஓரத்தில் உட்கார்ந்தேன். அதற்குள் கண்டுவிட்ட ஒரு காவற்காரன் என்னை விரட்டவென்று ஓடோடி வந்தான்.

ஒருவிதமாக அவனுக்குப் போக்கு காட்டிவிட்டு "அம்மாவைச் சந்திக்க வேணும்" என்றேன்.

"அம்மா, இப்ப ஆரையும் பார்க்கமாட்டா, நீ வந்த வழியே போய்விடு" என்று விரட்டினான் அவன்.

"சரிதான் போ" எனக்குள் கூறியபடி காலிமுகத்திடலை நோட்டம் விட்டேன். களையிழந்தது போலக்கிடந்தது. அப்படியே காலிவீதி வழியாக என் பயணம்



தொடர்ந்தது, கூரைக்கும் மேலே இயந்திரத் துப்பாக்கிகள் பொருத்தியபடி ஒரு மாளிகை கண்களில் தெரிய மெல்லமாகத் தரையிறங்கினேன். அலரி மாளிகை அருகில் இருக்கிறது என்பது சிந்தனையில் உறைத்தது.

தத்தித்தத்தியும் தாவிப் பறந்தும் அங்கே ஒரு சன்னலின் மேல் விளிம்பில் போய் உட்கார்ந்து கொண்டேன். எவரும் என்னைக் கவனிப்பதாக இல்லை என்பதை உறுதி செய்து செவியைக் கூர்மைப்படுத்தினேன்.

"எங்களுக்குத் தெரியாமல் எல்லா முடிவும் நீங்களே எடுத்தால் உப்பிடித்தான் வரும். எங்களுக்குச் சம்பந்தப்பட்ட விடயங்களிலாவது எங்களைக் கலந்தாலோசிக்க வேணும்"

"கவ்போய்" தொப்பியை கழற்றியபடி ஊன்றுகோலில் உடம்பைச் சரித்த பெரியவர் ஒருவர் பொருமினார்.

"மிஸ்டர் அப்படி என்ன செய்தனான்! சொல்லும் பாப்பம்" பெண் குரல்

உறுக்கியது.

"என்னவோ-தளபதிக்கு பதவி நீடித்த விடயமே எனக்குத் தெரியாதே"

"ஓ-அதுவோ-அதாலைதான் ஆளும்கட்சி எம்பிக்களைக் கொண்டு எதிர்ப்புத் தெரிவிக்க வைச்சனீங்களோ!"

"அதுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை"

"அவரைவிட்டா அவரிட இடத்துக்கு யாரைப் போடுறது"

'பத்தாயிரம் பேரைச் சேர்க்கிறதாய் அறிவிச்சிருக்கிறம்தானே'

இதனிடையில் தொலைபேசி ஒன்று அலறியது.

'கலோ-கலோ-'

'காலமை தொடக்கம் றெயின் ஒண்டும் ஓடேல்ல'

'ஏன்-ஏன்- என்ன நடந்தது'

'இல்லை ஆருக்கோ கலியாண வீடாம். சாரதியார் எல்லாம் லீவில போட்டினம்-'

'ஆ-அப்படியா" என்றொரு ஏக்கப் பெருமூச்சை இழுத்துவிட்டார் அந்த அதிகாரி.

"சுட்டு வீழ்த்தினாப் பிறகு பிளேன் ஓட ஆளில்லை. கலியாண வீடு வந்தா ரயில் ஓட ஆளில்லை, என்னடாப்பா என்ன செய்யிறது!" என்றொரு குரல் செவிகளில் இடியென ஒலித்தது.

ஓமோம் அதுதானே என ஆமோதித்தபடி அநாயாசமாக ஒருவர் உள்ளே புகவும், "எல்லாம் ஐ.தேகவின் சதி இது. எனக்குத் தெரியும், இங்க பாருங்கோ-எத்தனை பேரை ஐ.தேக கொன்றிருக்கிறது. எத்தனை பேர் ஐ.தேகவின் காலத்தில் காணாமல் போயிருக்கினம். இதுகளைப் பற்றி விசாரணை நடத்திறதை விரும்பாத ஆக்களின் குழப்ப வேலைதான் இதுகள் எல்லாம்' சாப்பாட்டு மேசையில் வைத்து விளக்கம் நடத்துவது தெளிவாகக் கேட்டது.

ஓமோம், அரசியல் பிரச்சினை எல்லாம் உங்களுக்கு அடுப்படிப் பிரச்சினை மாதிரி என்று உரத்துக் கத்த வேணும் போலிருந்தது. இறக்கைகளை விரித்தேன்...

# முடிவில்லாத போரா?

தோல்வியையும் சந்திக்கும். பொதுவாக மக்களிடம் வேரூன்றிய ஒரு விடுதலைப் போர்-அது எத்தகைய பலம் வாய்ந்த ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக நடந்தாலும்-தோற்றதாக வரலாறு இல்லை. இந்த நிலையில், ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம் தோல்வியடையும்போது, தனது தோல்வியையும் விடுதலைச் சேனையின் வெற்றியையும் மறைப்பதற்காக, போர் தொடர்பான மேற்குறித்த அவநம்பிக்கைத் தத்துவங்களைப் பிரச்சாரப்படுத்த முயல்கின்றது என்பதே உண்மையாகும்.

> ஒரு விடுதலைச் சேனை வளர்ந்து முழுமைபெற எடுக்கும் காலம் வரை விடுதலைப் போரும் நீளும். ஆக்கிரமிப்புப் படைக்கு நிகராக அந்த விடுதலைப் படை வளர்ந்ததும், போர் உச்சக்கட்டத்தை அடைந்து, பின்னர் குறுகிய காலத்தில் போர் முடிவடைந்துவிடும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. அதாவது, முடிவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. தனிநாட்டிற்கான ஒரு அரசு இயந்திரத்தைக் கட்டி அமைத்தபடி, புதியதேசம் ஒன்றை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. புலிகளின் படைபலத்தால் அது சாத்தியமாகிக் கொண்டிருக்கின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மூன்றாம் ஈழப்போரின் பின்னணிகள் பற்றியும் ,அது தொடர்பான சிங்கள அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கிடையேயான நிலைப்பாடுகள் பற்றியும் மட்டுநகரிலிருந்து வெளியாகும் ஜனனி பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையினை இங்கு முழுமையாகப் பிரசுரிக்கின்றோம்

# புலிகளின் தாக்குதலும்

# பின்னணிக் காரணங்களும்

89-90 ஆம் ஆண்டுகாலப் பருவத்தில் கஞ்சிகுடிச்சாறில், விடுதலைப் புலிகள் தமது பிரதான முகாமொன்றை அமைத்திருந்தனர். அநேகமாக அந்தக் காலகட்டத்தில்தான் புலிகளுக்கும் காலஞ்சென்ற பிரேமதாசா அவர்களுக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தது. இருப்பினும் நாளடைவில் இரண்டாம் கட்டப் போர் மீண்டும் தொடங்கியது.

அவ்வேளை பாதுகாப்புப் படையினரின் பிரதான தாக்குதலுக்குரிய இடமாக இந்தக் கஞ்சிகுடிச்சாறு முகாமே உட்பட்டிருந்தது. கடும் இழப்புக்களின் மூலம் முகாமை இராணுவத்தினர் கைப்பற்றியதாகத் தொடர்பு சாதனங்களில் பெரும் பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆனால் 5 ஆண்டுகளைக் கடந்து அதே முகாமின் காப்பரண்கள், இன்று விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டு பத்தொன்பது இராணுவத்தினரும் கொல்லப்பட்டுள்ளனர். அன்று இதே கஞ்சிகுடிச்சாறு பிரதேசத்தில் இராணுவத்தினரின் வெற்றியை அறிவித்து வந்த தொடர்பு சாதனங்கள், இம்முறை புலிகளின் வெற்றியையும் கூற வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகின.

> விடுதலைப் புலிகள் என்ற அமைப்பானது உலகிலேயே உள்ள கெரில்லா படைகளுள் முதல் இடத்தை வசிக்கும் கட்டுக்கோப்பான ஒரு அமைப்பாகும். எனவே, உலகிலுள்ள ஏனைய கெரில்லா அமைப்புக்கள் புலிகளுக்கு அடுத்தபடியானவையே. ஆகவே அப்படிப்பட்ட கெரில்லா அமைப்புகளையே சமாளிக்க முடியாமல் உள்ள சில உலக நாடுகளாயினும் சரி கெரில்லா அமைப்புக்களிலேயே அல்லது அவற்றுக்கு ஆதரவான சில நாடுகளாயினும் சரி முதலாம் இடத்தை வகிக்கின்ற, விடுதலைப் புலிகளை எவ்வாறு அவர்கள் செயலிழக்கச் செய்வார்கள் என்பதும் கேள்விக்குறிதான்.

அன்று இராணுவத்தின் விசேட அதிரடிப்படைப் பிரிவொன்று கஞ்சிகுடிச்சாறு முகாமில் ஆயத்தநிலைக்குத் தயாராகிக் கொண்டிருந்தது. கிழக்குப் பிரதேசத்தில் புலிகளுக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென அவர்கள் அன்றைய கடமைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். இந்த விசேட அதிரடிப்படைப் பிரிவினர், பொலிசார், இராணுவத்தை விட விசேட பயிற்சியைப் பெற்றவர்களாவர். இரண்டாங்கட்ட ஈழப்போர் தொடங்கிய வேளையில், புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளாகிய கிழக்குப் பிரதேசங்களை மீட்டெடுப்பதில் இந்த விசேட அதிரடிப்படையினர்தான் முக்கிய பங்கை வகித்தனர். இவை அனைத்தையுமே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் நன்றாக அறிந்து வைத்தே இருந்தார்.

எனவே இதற்குத் தகுந்த பதிலடியைக் கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தை அவர் வகுத்தார். கஞ்சிகுடிச்சாறு முகாமிலுள்ள விசேட அதிரடிப் படையினரின் பலத்தைப் பலவீனப்படுத்துவதற்குத் தன் பலத்தைப் பிரயோகிக்க வியூகம் வகுத்தார். செயலிலும்

> இந்தத் தாக்குதலின் மூலம் புலிகள் படையினர்க்கும் அரசுக்கும் ஒரு விடயத்தை தெளிவாக உணர்த்தி உள்ளனர். அதாவது படையினரின் கடல் வழித் தாக்குதலுக்கும், வான் வழித் தாக்குதலுக்கும் முகம் கொடுக்கக் கூடிய பலம் தம்மிடம் இருப்பதை உணர்த்தியது போலவே, வட-கிழக்கு மாகாணத்தின் மத்திய பகுதிவரையிலும் தமது பலத்தை விரிவுபடுத்தி உள்ளதையும் அவர்கள் உணர்த்தி உள்ளனர்

இறங்கினார்.

'க்ளைமோர் மைன்ஸ்' எனும் மரக்குண்டுகள் கொண்டு நடத்தப்பட்ட முதல் தாக்குதல் இங்குதான் நடைபெற்றது.

இரவு பூராவும் கஞ்சிகுடிச்சாறு முகாமைச் சுற்றிவரக் காணப்படுகின்ற அடர்ந்த காடுகளில் இராணுவத்தினருக்கான பொறிகளை அமைப்பதில் புலிகள் ஈடுபட்டிருந்தனர். காடுகளின் பல இடங்களில் நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டன. முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியேறி வரும்போது, வருகின்ற பாதையிலுள்ள கிளைப் பாதைகளின் இருபுறங்களிலும் காணப்படுகின்ற மரக்கிளைகளில் மரக்குண்டுகளை கட்டிவிட்டனர். பொருத்தமான வேளை வரும்போது வெடிக்கும் விதமாக இந்த மரக்குண்டுகள் பொருத்தப்பட்டிருந்தன. இரவு பூராவும் இவ்வாறு குண்டுகளை புதைப்பதிலும் பொறிகளை அமைப்பதிலும் புலிகள் ஈடுபட்ட பின், தத்தமது நிலையிலிருந்து விடியும் வரையில் புலிகள் ஆயத்த நிலையில் பதுங்கியிருந்தனர். முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியேறிவிட்டனர் என்ற சமிக்ஞை கிடைக்கும் வரையில் அவர்கள் காத்துக் கொண்டிருந்தனர்.

இதேவேளை, இந்த முகாமிலிருந்த பத்தொன்பது படைவீரர்கள் விடுமுறைக்காகத் தமது சொந்த ஊர்களுக்குச் செல்வதற்கான ஆயத்த நிலையில் இருந்தனர். அவர்களைத் திருக்கோவில் வரை கொண்டு சென்று வழி அனுப்புவதற்கென்று இன்னொரு படைப்பிரிவும் ஆயத்த நிலையில் இருந்தது. விடியும் வேளையில் இவர்கள் அனைவரும் முகாமிலிருந்து வெளியேறி கிளைப் பாதைகளினூடே சென்று கொண்டிருந்தனர். புலிகளுக்கும் சமிக்ஞை கிடைக்கப் பெற்றது. பாதையினூடே படையினர் வந்து கொண்டிருக்கையில் நிலக்கண்ணி வெடிகள் வெடித்தன.

அதேவேளை இருபுற மரங்களிலும் வைக்கப்பட்டிருந்த மரக்குண்டுகள் வெடித்தன. குண்டுச் சத்தம் காட்டுப் பகுதியெங்கும் பரவலாகக் கேட்டது. விடுதலைப் புலிகளும் இடையறாது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்த எதிர்பாராத தாக்குதலுக்கு உட்பட்ட பத்தொன்பது படையினர் அவ்விடத்திலேயே பலியாகினர்.

இந்தத் தாக்குதலின் பின் கஞ்சிகுடிச்சாறு முகாமிலுள்ள விசேட அதிரடிப்படைப் பிரிவின் உயர் அதிகாரிகள், இதனையிட்டு ஆலோசனை நடத்தவென அம்பாறை நோக்கி விரைந்தனர். புலிகளின் தாக்குதலை முறியடிப்பதற்கான திட்டங்களை அங்கு வகுத்தனராம். இவர்கள் இங்கு திட்டங்கள் வகுத்துக் கொண்டிருந்த அதே சமயம் புலிகளின் அடுத்த இலக்காக அமைந்தது புளியங்குளம் பகுதிக் கிராமமாகும். இந்தத் தாக்குதலின் மூலம் புலிகள், படையினர்க்கும் அரசுக்கும் ஒரு விடயத்தைத் தெளிவாக உணர்த்தி உள்ளனர். அதாவது படையினரின் கடல் வழித் தாக்குதலுக்கும், வான் வழித் தாக்குதலுக்கும் முகம் கொடுக்கக் கூடிய பலம் தம்மிடம் இருப்பதை உணர்த்தியது போலவே, வட-கிழக்கு மாகாணத்தின் மத்திய பகுதிவரையிலும் தமது பலத்தை விரிவுபடுத்தி உள்ளதையும் அவர்கள் உணர்த்தி உள்ளனர்.

அனுராதபுரத்திலிருந்து 35 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கிராமத்திற்குப் பாதுகாப்பை வழங்கி வருகின்ற பாதுகாப்புப் பிரிவின் மீது அவர்கள் தொடுத்த தாக்குதல் இதனையே உணர்த்துகின்றது. எனினும் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்களுக்கு அவர்கள் எவ்வித தீங்கையும் விளைவிக்காததும் குறிப்பிடத்தக்கது. இந்தத் தாக்குதல் நடந்தபோது, புலிகள் இருளைத் தமது தாக்குதலுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். பாதுகாப்பு அரணைப் புலிகள் தாக்கியதும், புலிகளின் மற்றொரு பிரிவினர் முகாமுக்குள் ஊடுருவினர்.

மின்சாரம் வழங்கும் ஜெனரேட்டருக்குக் குண்டெறிந்து அதனைச் செயல் இழக்கச் செய்தனர். மேலும் இருள்படிந்தது. இருளையும் வெளிச்சமாக்கிக் காட்டக்கூடிய கண்ணாடிகளை அணிந்தவாறு, புலிகள் முகாமுக்குள் உட்பிரவேசித்து அங்கிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றினர். இதேவேளை, இந்த முகாமை நோக்கி வருவதற்கென அமைக்கப்பட்டிருந்த பாதை பூராவும் 'ஜொனி' மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருந்ததன் மூலம் மேலதிக படையினரின் உதவி இம்முகாமுக்குக் கிடைக்காதவாறு புலிகள் தடையை ஏற்படுத்தியிருந்தனர். ஒரு மணிநேர தாக்குதலின் பின்னர் ஆயுதங்களைக் கைப்பற்றிய புலிகள் தலைமறைவாகிச் சென்றனர்.

புலிகள் இவ்வாறு தொடர் தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கும் அதேவேளையில், தென்பகுதி மக்கள் மத்தியில் ஒரு கேள்வி எழுந்துள்ளது. படையினர் ஏன் தாக்குதல் நடத்துகிறார்களில்லை! இதுவே அவர்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வி.

இதற்கு விடுதலைப் புலிகளின் இராசதந்திரமும் ஒரு வகையில் காரணம் எனக் கூறலாம். புலிகள் எப்போதுமே தமது எதிரியுடன் பேச்சுக் கொடுத்தாலும் முற்றுமுழுதாக அவர்களை நம்பி விடமாட்டார்கள். முன்னாள் தமிழ்த் தலைவர்கள் நம்பியே கெட்ட வரலாற்றைப் புலிகள் நன்றாகவே தமது மனதில் பதித்துள்ளார்கள். பிரேமதாசாவுடன் சமாதான பேச்சுவார்த்தை நடத்திய போதிலும் புலிகள் தம் பலத்தைப் பெருக்குவதிலும் கண்ணும் கருத்துமாகவே இருந்தனர். யாருமே எதிர்பாராத வகையில் இரண்டாம் ஈழப்போர் தொடங்கியது. இதன் பின்னர்தான், இலங்கை அரசு ஆயுத கொள்வனவிற்கென சீனாவுடன் தொடர்பு கொண்டு ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டது. 1990ஆம் ஆண்டு ஆடி மாதம் இந்த ஆயுதங்கள் கிடைக்கப் பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலேயே இலங்கை அரசு இந்த ஒப்பந்தத்தைச் செய்தது. எனினும் 1991ஆம் ஆண்டு வைகாசி மாதம் கடந்து 9 மாதங்களின் பின்னரே அந்த இராணுவ உபகரணங்கள் இலங்கை வந்தடைந்தன.

இதே போன்றதொரு சூழ்நிலைதான், தற்போதும் மூன்றாங்கட்டஈழப்போரிலும் அரசுக்கு ஏற்பட்டுள்ளது போல் தோன்றுகின்றது.

நிலைமை இப்படியிருந்த போதிலும், அரசும் சரி புலிகளும் சரி இரு தரப்புமே சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எப்போதும் தாம் தயார் என்றே கூறிவருகின்றனர். புலிகள் மூன்றாங்கட்டஈழப்போரைத் தொடக்கியதன் நோக்கம் தமது பலத்தை மேலும் உணர்த்தி கிழக்குப் பகுதியிலும் தமது நிலையைப் பரவலாக்கி, வடக்கிலுள்ள பூநகரி போன்ற

தொடர்ச்சி : 18 ஆம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறீலங்கா அரசின் சமாதான முயற்சிகள் கைகூடாமல் போனது எதனால்?

எம்.வசந்தராஜா — முன்னாள் ரூபவாகினித் தலைவர்

பலர், சிறீலங்காவில் தொடக்கப் பேச்சுவார்த்தை முயற்சிகள் முறிவடைந்தமைக்கு, விடுதலைப் புலிகளை முதன்மைப்படுத்திக் குறை கூறுகின்றனர். ஆயினும், உண்மையாகவே நீடித்து நிற்கக் கூடிய தீர்வைத் தேடுகின்றவர்கள், சிறீலங்கா அரசு சமாதான முன்னெடுப்பு முயற்சிகளைக் கையாண்ட பாங்கினை அதிக வெளிப்படையாக ஆராய வேண்டும். குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கு அரசின் நோக்கங்களில் நம்பிக்கையீனம் ஏற்பட்டமைக்கான போதிய காரணிகள் உண்டா என்பதைக் கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

சனாதிபதி சந்திரிகா ஒரு கையில் ஒலிவ் இலையையும், மறுகையில் ஏவுகணையையும் வைத்திருந்தபடி கவச வாகனத்திற் பவனிவரும் கேலிச்சித்திரம் யாழ்ப்பாணச் செய்தித்தாளில் வெளிவருவதற்கு நீண்டகாலம் எடுக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் இத்தகைய விளக்கம் வெளிவந்தமையை நியாயப்படுத்த முடியுமா? நான் நினைக்கிறேன் நியாயம் என்று.

என்னுடைய, சமீப காலத்துச் சிறீலங்கா அரசுடனான உறவுகள் தரும் அறிவின்படி, முன்னைய அரசுகளைப் போலவே இந்த அரசிற்கும் தமிழர்களின் போராட்டத்தைப் பற்றிய வரலாற்றுரீதியான உள்ளடக்கம் இல்லை என்றே தெளிவாகக்கண்டு கொண்டேன் (இது பற்றி நான் பின்னர் விபரிப்பேன்). ஆரம்பத்திலேயே தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பிரிக்கப்பட முடியாத தொடர்பை விளங்கிக் கொள்ள அரசு தவறி விட்டது.

பெரும்பாலும் இதனாலேயே, சனாதிபதி மிக இலகுவாகத் தன்னுடைய அலட்சிய மனோபாவத்தை இராணுவத் தீர்வுதான் என மாற்றக் கூடியதாயிற்று.

இதன் விளைவாகவே அரசின் சமாதான முயற்சிகளின் திரைமறைவில் இரகசிய திட்டங்களும் இருந்தன. விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் இயல்பான முயற்சிகளுடாகப் பரஸ்பர நம்பிக்கையையும் உறுதியையும் வளர்ப்பதற்குப் பதிலாக 'ஏற்புடைய நிலை' ஒன்று உருவாவதைத் தடுக்கக்கூடிய வகையில் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அரசு வித்தியாசமான தந்திரோபாயத்தைப் பக்க விளைவாக ஏற்படுத்த முயற்சித்தது. விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தைத் தமிழ் மக்களிடம் இருந்து தனிமைப்படுத்துவதன் மூலம் அதனை இராணுவத்தினால் மூலைக்குட்தள்ளித் தோற்கடித்து விடலாம் என்பதே அத் தந்திரோபாயம். உண்மையில் இது புதிய தந்திரோபாயம் அல்ல. இராணுவவாதிகளுடன் சில சிங்களப் புத்திஜீவிகளும், மற்றும் இடதுசாரி அரசியல்வாதிகளும், வேறு சில தமிழின விரோதக் குழுக்களும் 'இராணுவத் தீர்வு' என்னும் உபதேசத்தைச் சில காலமாகச் செய்து வந்தன.

இந்த நோக்கு சனாதிபதியின் முயற்சியாக மாறத்தொடங்கியது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால் விடுதலைப் புலிகளை முறியடிப்பதற்கான அரசின் தந்திரோபாய நடவடிக்கையாகச் சமாதான முயற்சிகள் மாறத் தொடங்கியது. அத்துடன் சனாதிபதி சந்திரிகா இப்படி ஒரு நோக்கு இருக்கிறது எனப்பகிரங்கமாகப் பொது மேடைகளிற் பேசவும் தொடங்கினார்.

சமாதான முயற்சியிற் பிரதிநிதிகளாகச் சென்றவர்களது தகுதியினையும், மிக அருமையாகவே (சில தடவைகள் மட்டும்) அவர்கள் யாழ்ப்பாணம் சென்று சிலமணி நேரத்தை மட்டுமே அங்கு கழித்தமையையும் அவதானித்த விடுதலைப் புலிகளுக்கு அரசு மக்களைக் கவர்வதற்கு மட்டுமே முயல்கிறது என்ற சந்தேகம் எழுந்ததில் வியப்பேதுமில்லை.

சமாதான முயற்சிகளின் போது இவை மட்டுமல்லாது அரசு மேற்கொண்ட வேறு பல விடயங்கள் விடுதலைப் புலிகளுக்குத் தவறான சமிக்ஞைகளைக் கொடுத்தன. ரூபவாகினியின் தலைவர் என்ற முறையில், இக்கால கட்டத்தில் நான் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து அன்ரன் பாலசிங்கம் அவர்களுடனும், திரு. தமிழ்ச்செல்வனுடனும் யாழ்ப்பாணத்திற் தொலைக்காட்சி நிலையம் ஒன்றைத் திறப்பது குறித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினேன். இதன்மூலம் வடபகுதி மக்களின் நிலைமைகளில் ஏற்படும் அபிவிருத்திகள் பற்றித் தென்பகுதி மக்களுக்கு நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதுடன் தெற்கிலிருந்து வடக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு நலம் பயக்கக்கூடிய நிகழ்ச்சிகளை வழங்கலாம் என நினைத்திருந்தோம். விடுதலைப் புலிகள் மகிழ்வுடன் இதற்கு இணங்கினர். ஆனால் இந்தச் செய்தியை நான் அரசிடம் கொண்டுவந்தபோது இந்த நோக்கத்திற்குப் பலத்த எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான பிரசாரங்களைத் தொடங்கி வைத்தமையும், திருகோணமலையில் வைபவரீதியாகத் தொடங்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்களும், பேச்சுவார்த்தையின் மூலம் எய்தப்படக்கூடிய வெற்றிகரமான பெறுதிகள் குறித்த நம்பிக்கையைச் சிதறடித்தன.

மேலும் விடுதலைப் புலிகள் இலகுவில் முறிந்துபோகக்கூடிய மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திற்குப் பதிலாக நிரந்தரப் போர் நிறுத்தத்தை வலியுறுத்திய போதிலும் அரசு அதனை அலட்சியம் செய்தது. நிரந்தரப் போர் நிறுத்தத்திற் தெளிவான ஒப்பந்தங்களை எழுதுவதன்மூலமே பிரச்சினைக்குரிய கிழக்குத் தொடர்பான விடயங்களிற் தெளிவான ஒப்பந்தங்களை ஏற்படுத்தலாம்.

சனாதிபதி ஒத்துக்கொண்ட புனர்வாழ்வுத் திட்டங்களில் அதிகளவு தமிழ்த் தொழிலாளர்களை அரசின் சம்பளப்பட்டியலில் நேரடியாகச் சேர்ப்பதற்குக் காட்டப்பட்ட அந்த ஆர்வமானது தமிழ் மக்களின் மனதை மாற்றி அவர்களின் 'உயர்பணிவை' (Loyalties) அரசிற்குப் பெற்றுக் கொள்வதையே நோக்காகக் கொண்டிருந்தது.

இதுவே விடுதலைப் புலிகள், சுயாதீன அதிகாரசபை ஒன்றைப் புனரமைப்பு வேலைகளுக்கென அமைத்து, அதிற் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளத் தகுதியான எல்லோரும் இடம்பெற வேண்டுமெனச் சமர்ப்பித்த கோரிக்கையை, அரசு அக்கறையுடன் பரிசீலிக்காததன் காரணியாகும்.

இறுதியாக ஒருதலைப்பட்சமாக அரசு, தனது கட்டுப்பாட்டில் உள்ள சங்குப்பிட்டிப் பாதையை



விடுதலைப் புலிகளுடன் கலந்தாலோசனையின்றித் திறப்பதற்கு விடுத்த பிரகடனமானது, இருதரப்பினர்க்கும் இடையில் மிகுதியாக இருந்த சிறியளவு நம்பிக்கையையும் தவிடுபொடியாக்கியது.

யதார்த்தங்கள்

அரசு உண்மையான அக்கறையுடன் நம்பிக்கையை உறுதிப்படுத்தித் தவறான விளக்கங்களை விலக்க விரும்பியிருந்தால் அது பல வேலைகளைச் செய்திருக்க வேண்டும். உதாரணமாக, வழமையான போர்நிறுத்தத்தின் ஒரு பகுதியாக, சனாதிபதி செயலகத்திற்கும் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்திற்கும் ஒரு வீடியோத் தொடர்பு ஏற்படுத்தப்பட்டிருந்தால் ஒழுங்கான முறையிற் பேச்சுக்கள் நடைபெற இது பெருமளவில் உதவியிருக்கும். தென்னாபிரிக்காவில் இடம்பெற்றது போன்று இருதரப்பினரையும் உள்ளடக்கிய 'அமைதிக்கான கட்டமைப்பு' ஒன்று நிறுவப்பட்டிருந்தால் அது இறுதிப் பேச்சுவார்த்தைக்குப் பக்கபலமாக இருந்திருக்கும். உயர்மட்ட அதிகாரமுள்ள அரசியல் முதிர்ச்சித் தன்மையுள்ள பேச்சுவார்த்தைக் குழு நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். இதில் ஏற்பட்டிருக்கக் கூடிய பலதரப்பட்ட மட்டத்தில் உள்ளவர்களின் தொடர்பினால் பரஸ்பர நம்பிக்கையும், தெளிவும் வளர்ந்திருக்கும் (நான் உதாரணமாகக் கலாச்சார, அறிவியல், வர்த்தகத் தொடர்புகளைப் பற்றி இங்கு குறிப்பிட்டுள்ளேன்).

அரசின் பிழையான சமிக்ஞைகளுக்கு மத்தியிலும் நான் நம்பிக்கையுடன் செயலாற்றவே முனைந்தேன். நான் சமாதான முயற்சிகள் விரைவில் அதற்குரிய சுயமான உந்துநிலைக்கு வரும், அப்பொழுது அழுத்தத்தின்மூலம் எல்லாம் தானாகவே மாறக்கூடுமென நம்பியிருந்தேன். ஆயினும் என்னுடைய நம்பிக்கைகள் உண்மைகளில் நிலைகொள்ளாது, விருப்புக்களிலேயே அமைந்தமையைக் கண்டுகொண்டேன். கூறப்பட்டவற்றுக்கு மாறான முறையில் அரசு செயற்பட்டதினால், அரசின் மேல் சந்தேகங்கொண்டு விடுதலைப் புலிகள், பேச்சுவார்த்தையிலிருந்து வெளியேறிக் கொண்டனர்.

என்னுடைய மதிப்பீட்டின்படி, சிறீலங்கா அரசின் இந்த எழுந்தமானப் போக்கு, முழுமையான அமைதிக்கான முயற்சிகளை மேற்கொள்ளும்படி, அதனை ஆட்சிப்பீடத்தில் அமர்த்திய சிங்கள மக்களின் உண்மையான நோக்கினைப் பிரதிபலிக்கிறதெனக் கூறமுடியாது. உண்மையில் அரசு அமைதி வழித்தீர்வுக்கான ஆலோசனைகளை வெளியிடத் தவறியமை, அதனிடம் அப்படி ஏதாவது ஒன்று உண்டா?, அப்படி எதாவது இருந்தாலும் அத்தீர்வு தமிழர்களுடைய கோரிக்கைகளுக்குத் திட்டவட்டமான தீர்வாக அமையுமா? என்ற சந்தேகத்தை மிதவாதத் தமிழ்க்குழுக்களுக்குக் கூட ஏற்படுத்தியது.

விரைவிற் சமாதான முயற்சிகள் முறிவடைந்தன. போர் மீளவும் பிரகடனமாகியது. அரசு போரிற்கான முயற்சிகளை ஆதரிக்கும்படி அரசு தொடர்புச் சாதனங்களை அழுத்தத்திற்குள்ளாக்கியது. இத்தகையதொரு சூழலில் என்னாற் தொடர்ந்தும் பதவியிலிருக்க இயலவில்லை. அரசு சமாதானத்திற்கான தொடக்கமுயற்சிகள் குறித்துத் தவறான ஆலோசனைகளுக்குப் பணிந்துவிட்டது. அதனுடைய போர்த் தந்திரோபாயங்களுக்கு உதவுவதற்கு விரும்பாத நிலையில் நான் எனது பதவியைத் துறந்து விட்டேன்.

முன்னேற்றத்திற்கு

சந்திரிகா அரசும் முன்னைய அரசைப் போலவே தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று ரீதியான உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ளத் தவறி விட்டது. இதன் காரணமாகவே தற்போதைய முயற்சிகள் வெற்றி பெறவில்லை. அரசினுடைய கருத்தியலானது, தமிழர்கள் சிங்கள நாட்டில் வாழும் சிறுபான்மையினம் என்ற அம்சத்திலேயே தங்கியுள்ளது. ஆனால் உண்மை வித்தியாசமானதொன்று. சிறீலங்கா என்பது, தமிழ் நாட்டினம், சிங்கள நாட்டினம் என்னும் இரு நாட்டினங்களதும் வரலாற்றுப் பரிமாணத்தினால் உருவான சமூகத்தைக் கொண்டிருக்கிறது. ஆயினும் எண்ணிக்கை அடிப்படையிற் தமிழ் நாட்டினம் சிறியதாக உள்ளது. இவ்விரு நாட்டினங்களும் அருகருகாக உட்தொடர்புகளுடன் வாழ்ந்த போதிலும் 'தமிழர்களின் தாயகம்' என்பது வரலாற்றுக்கு முற்பட்டகாலம் முதல் அங்கு தெளிவாக இனங்காணப்பட்டு வந்துள்ளது.

பிரித்தானிய சமூகம் ஆங்கிலேயர், ஸ்கொட்டிஸ், வேல்ஸ் என்பவர்களால் உருவாக்கப்பட்டுள்ளமைபோல், சிறீலங்கா பிரதானமாக சிங்களவர், தமிழர் எனும் இரு நாட்டினங்களைக் கொண்டிருக்கிறது. பிரித்தானிய முடியாட்சியினரால் ஒரு நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்ட வேளையிலும், அதன் பின்னர் சுதந்திரத்திற்குப் பின்வந்த அரசியலமைப்பு ஆட்சிக்காலங்களிலும் இந்தத் தன்மை தெளிவாகப் பிரதிபலிக்கப்பட்டு வந்துள்ளது. எப்பொழுது ஒற்றையாட்சி பிரகடனப்படுத்தப்பட்டதோ, அப்பொழுதே தேசிய விழிப்புணர்வும், சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையும் காலத்தால் உருவாக்கப்பட்டு விட்டது.

எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா போன்ற சில சிங்கள அரசியல்வாதிகள் இதனை 1920களில் விளங்கியிருந்தனர். இருந்தபோதிலும் 1950 களில் பண்டாரநாயக்காவே சிங்கள இனவெறியின் தாக்குதலுக்கு அடிமையாகிப் பண்டா-செல்வா ஒப்பந்தத்தைச் சிங்களப் பேரினவாதிகளின் வற்புறுத்தலாற் கிழித்த காலகட்டத்திலேயே தமிழ்த் தேசியம் வளரத் தொடங்கி முழுமையான தனிநாட்டைக் கேட்கும் ஒன்றாக வளர்ச்சி பெற்றது. இது 1977 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலிற் தமிழர் ஐக்கிய முன்னணி பெற்ற பெருந்தொகையான தமிழ் ஆதரவு வாக்குகள் மூலம் தனிநாடு ஒன்றுக்காகப் போராடுவதற்கான தேர்தல் வழி ஆணையாக மாறியது.

நம்பிக்கையிழந்த சூழ்நிலைகள்

தமிழர்கள் நாட்டினம் என்கிற சுயவிருப்புணர்வுடன் வளர்ச்சி பெற்றுச் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிற் சிந்திக்கத் தொடங்கியதும் தெற்கிலுள்ள சிங்கள அரசு வலுக்கட்டாயத்தின் மூலமே தீர்வுகளை ஏற்படுத்த முயன்றது. ஆயினும் ஒருதீர்வு தாமாகவே முன்வந்து ஏற்படுத்தும் ஒப்பந்தம் மூலமே எய்தப்பட வேண்டும். ஆயினும் இன்று அத்தகைய, தாமாகவே முன்வந்து செய்யப்படும் எந்த ஒப்பந்தமும், விடுதலைப் புலிகள் தான் மறுக்கப்பட முடியாத தலைமைத்துவம் என்பதை அங்கீகரித்தேயாக வேண்டும். நாங்கள் விரும்பினால் என்ன, விரும்பாவிட்டால் என்ன இதுதான் உண்மை. இதனாற்தான் விடுதலைப் புலிகளின் மக்கள் தன்மையை மறுத்து ஓரங்கட்டி, இராணுவ நடவடிக்கை மூலம் ஒடுக்கலாம் என்னும் அடிப்படையிற் திட்டமிடப்படும் எந்தத் திட்டமும் தோல்வியடையுமென மிகவும் ஆணித்தரமாகக் கூறுகிறேன். ஒரே ஒரு ஆக்கபூர்வமான வழி, விடுதலைப் புலிகளுடன் அவர்கள் தமிழர்களின் பிரதிநிதிகள் என்றவகையில் அணுகுவதுதான். உண்மையும் அதுதான். அவர்கள் தான் தமிழர்களின் பிரதிநிதிகளாகக் காணப்படுகின்றனர்.

தெற்கிலுள்ள எல்லா முற்போக்குச் சிந்தனையுள்ள மக்களும் சிறீலங்கா மற்றொரு பொசுனியாவாக, லெபனனாக மாறுவதைத் தடுப்பதற்குத் தமிழர்களின் போராட்டம் பற்றிய யதார்த்தபூர்வமான அணுகுமுறைகளைக் கைக்கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகள் தான் தமிழ்மக்களின் பிரதிநிதிகள். ஆகவே அரசிடம் புது அணுகுமுறைகளைப் பற்றிச் சிந்திக்கும்படி வற்புறுத்த வேண்டும்மேலும், ஐக்கிய சிறீலங்காவும், ஈழமும் (United states of Sri Lanka and Eelam) அதாவது சிறீலங்கா, ஈழம் ஆகிய குடியரசுகளின் சமஸ்டிக் கூட்டமைப்புதான், இலங்கை த்தீவின் பொருண்மிய வளர்ச்சியில் எழுச்சி கண்டு இரு நாட்டினங்களுக்கும் உதவும் என்பதே எனது எண்ணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மேற்குலக இராஜதந்திரமும்....

அடைந்துள்ளோம்" என்ற சொற்பதங்களைப் பயன்படுத்தியிருந்தால், அது இரட்டிப்பு நன்மைகளைக் கொடுத்திருக்கும். அதாவது, மீண்டும் பேச்சைத் தொடங்க ஊக்குவித்திருக்கும். அதேவேளை, பேச்சுத் தோல்விக்கான சரியான காரணிகளைக் கண்டறியவும் உதவியிருக்கும்.

ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை. பதிலாகப், புலிகளைக் கண்டித்து-அரசை ஆதரித்த மேற்குலகின் செயலானது, இனப்பிரச்சினைக்கு இராணுவ வழிமுறையிலான தீர்வே சாத்தியமானது என்ற கருத்தைச் சிங்கள அரசிடம் வலுப்படுத்தவே உதவியுள்ளது. இது, போரையும்-அழிவையும் ஏற்படுத்தி, இப்பிராந்தியத்தில் ஒரு ஸ்திரமற்ற அரசியல்-பொருண்மிய நிலையைத் தோற்றுவிக்கவே உதவப் போகின்றது. அத்துடன், மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்குவதை அது அதிகதூரம் பின்தள்ளியுமுள்ளது. பேச்சு முறிந்த பின்னரும் சந்திரிகா அரசின் சமாதான முயற்சியைப் பாராட்டி மேற்குலகம் விடுத்த அறிக்கை, இந்தச் சமரசப் பேச்சு முறிந்ததில் அவருக்கு இருந்த பங்கை மூடிமறைத்துச், சந்திரிகா அம்மையாரை அப்பழுக்கற்ற ஒரு தலைவரைப் போலக் காட்டிவிட்டது. இந்தப் பாராட்டை, சமாதானப் பேச்சுக்குப் பதிலாக வேறு ஒரு மாற்றுத் திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதற்காக மேற்குலகம் கொடுத்த ஒரு சைகையாகவும் சந்திரிகா அம்மையார் எடுத்துக்கொள்ள வாய்ப்புக்கள் உள்ளன.

'இனப்பிரச்சனைக்கு இராணுவ வழிமுறையிலேயே தீர்வு' என்ற கொள்கையை முன்னைய அரசு வலுப்படுத்தி வைத்திருந்தது. சனாதிபதியாகச் சந்திரிகா பதவியேற்ற பின்னரும் அந்த இராணுவக் கொள்கையை அவர் முழுவதுமாகக் கைவிடவில்லை. இந்த நிலையில், மேற்கு நாடுகள் விடுத்த தற்போதைய அறிக்கை, ஒரு தீவிர இராணுவவாதத்தை அமுல்ப்படுத்தச் சந்திரிகாவைத் தூண்டலாம். இது இறுதியில், ஒரு பெரிய போருக்கு இலங்கை மக்களை இட்டுச் செல்லலாம். தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு இனஅழிப்புப் போராகவும் இது மாறலாம். கடந்த காலங்களிற் சிங்கள இராணுவ நடவடிக்கைகளில், ஏராளமான அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் பலியானது தெரிந்ததே.

அத்தகையதொரு தீவிர போர்ச்சூழல் எழுந்தால், அது இந்த மேற்குலக நாடுகளின் அரசுகளை ஒரு சிக்கலுக்குள் தள்ளிவிடும். தமிழ் மக்களை அவர்களது தாய்நிலத்தில் வைத்துக் கொன்று-முடமாக்கிவரும் ஒரு அரசுக்கு மேற்குலகம் தொடர்ந்தும் வெளிப்படையான ஆதரவை நல்கி வந்தால், இந்த மேற்குலக நாடுகள் தொடர்பாகத் தமிழ் மக்கள் வைத்திருக்கும் நம்பகத் தன்மைக்கும் நல்லெண்ணத்திற்கும் களங்கம் ஏற்படலாம். இன்றுவரை மேற்குலகம் தொடர்பாகத் தமிழ்மக்களிடம் ஒரு நல்ல அபிப்பிராயம் இருந்து வருகின்றது. அதாவது, ஒரு முழுமையான தமிழினப் படுகொலையிற் சிங்களப் படைகள் இறங்காவண்ணம், மேற்குலக நாடுகள் தமது அரசியல்- இராசதந்திர-பொருண்மிய அழுத்தங்களைப் பயன்படுத்திப் பாதுகாத்து வருகின்றன என்பதே அதுவாகும். மேலும் முக்கியமான விடயம் எதுவெனில், இந்த இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியற் தீர்வு காண்பதிற் தமது அரசுகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும் என்று பிரகடனப்படுத்தி இருந்த நாடுகளே, புலிகள் இயக்கத்தைக் கண்டித்தும் இருக்கின்றன. புலிகள் மீதான கண்டனமும் சந்திரிகா அரசு மீதான ஆதரவும், இராணுவத் தீர்விற்கான உற்சாகப்படுத்தல்களும் ஒன்று சேர்ந்து, இந்த மேலைநாட்டு அரசுகளின் சமாதான முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்கலாம்.

அரசுக்கும்-புலிகளுக்குமிடையேயான நேரடிப் பேச்சுக்களில் ஏற்பட்ட தோல்வி, மற்றும் மூன்றாந் தரப்பாரின் மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொள்ள இணங்கும் புலிகளின் நிலைப்பாடும் இறுதியில், இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வுக்காக அனைத்துலக மத்தியஸ்தத்தைக் கோரும் அளவுக்குச் செல்லலாம்.

ஆனால், இராணுவ நடவடிக்கைகளை உற்சாகப்படுத்தும் மேற்குலகின் போக்குத் தொடருமானால், அது புலிகளின் நிலைப்பாட்டிற் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். அதாவது, ஒரு மத்தியஸ்தப் பாத்திரத்தை வகிக்கக்கூடிய நடுநிலையும்-நேர்மையும் இந்த மேற்குலக அரசுகளிடம் இருக்கின்றது என்ற நம்பிக்கையைச் சிதைத்துவிடக்கூடும்.

இலங்கைத் தீவிற் சமாதானம் ஏற்படவேண்டும் என்று இந்த மேற்கு நாட்டு அரசுகள் மனதார விரும்பினாற், சிறீலங்கா இராணுவத்திற்கு உதவிசெய்வதை அவை தவிர்க்க வேண்டும். அத்துடன், பேச்சுவார்த்தையை மீளப் புதுப்பிப்பதை வலியுறுத்தியபடி-அவசரப்படாது-பொறுமையுடன் அவை பணியாற்ற வேண்டும்.

அமைச்சரவைக் கூட்டங்களிலும் - அரசாங்கக் கட்சி பாராளுமன்றக் கூட்டங்களிலும் கலந்துகொள்வதைக் கடந்த இரண்டரை மாதங்களாகத் தவிர்த்து வந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மீண்டும் அக்கூட்டங்களில் கலந்து கொள்ள ஆரம்பித்துள்ளார்.

# மூன்றாவது இடம் யாருக்கு?

சந்திரிகா குமாரதுங்கா கலந்து கொள்ளாமல் விட்ட கூட்டங்களில் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவும் சமூகமளிக்காத சந்தர்ப்பங்களிலும் 'மூன்றாவது தலைமைத்துவத்துக்கு' எழுந்த போட்டி மிகக்காரசாரமான விடயமாக

# அரசாங்கக் கட்சிக்குள் குத்து வெட்டு



மாறியதே - சந்திரிகாவின் மீள்வருகைக்கு காரணம் எனக் கூறப்படுகின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் இன்று தீவிரமான பிரச்சனையாக உருவெடுத்துள்ள 'மூன்றாவது தலைமைத்துவம்' தென்னிலங்கை அரசியல் களத்தில் பெரியளவில் உணர்வலைகளைக் கிளப்பியும் வருகின்றது.

இந்த உணர்வலைகளை வெளிக்காட்டும் காட்சிகள் அரசாங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் இடம்பெற்றதோடல்லாமல் சுவாரசியமான விடையங்களையும் இது தந்து சென்றது.



சந்திரிகா குமாரதுங்கா தலைமை வகிக்காத முதலாவது அரசாங்கக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் கடந்த பெப்ரவரி மாதத்தின் முதல் வாரத்தில் நடந்தது.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க கலந்து கொண்டதனால் தலைமைத்துவப் பிரச்சனை பெரிதாக எழவில்லை.

ஆனால் சிறிமாவின் தலைமைத்துவத்தை ஆரம்பம் முதலே எதிர்த்து வரும் மங்களசமரவீர, மகிந்த ராஜபக்ச, ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே ஆகியோர் - சிறிமாவுடன் நேரடியாகவே பலத்த வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். சிறிமாவின் முகம் வியர்த்து கலவரமுற்று இருந்ததுடன் அடிக்கடி தனது வழமையான ஆவேசத்தையும் வெளிக்காட்டியபடி இருந்தார்.

ஒருபுறம் கூச்சல், மறுபுறம் கரகோசம் என இருந்த இன்னொரு கூட்டம் மார்ச் மாத இறுதிவாரத்தில் நடந்தது. கூட்டம் முக்கியமான எதிர்பார்ப்புடன் ஆரம்பமானது, சந்திரிகா, சிறிமா இருவரும் சமுகமளிக்காத இந்தக்கூட்டம் 'மூன்றாவது தலைமத்துவப் பிரச்சனையின்' பகிரங்க வெளிப்பாடாகவே அமைந்தது.



> தர்மசிறி சேனநாயக்காவை தலைமை தாங்குமாறு குரல்கள் எழுந்தன. "ரத்வத்த குடும்பத்திலிருந்து வேலைக்காரர் ஒருவராவது தலைமைதாங்க வருவார் அதுவரை பொறுத்திருங்கள்" மண்டபத்தில் கடைசிவரிசையிலிருந்து பெரிதாக குரல் எழுந்தது கொல் என்று சிரிப்பு மண்டபத்தில் பரவியது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்த தலைமை தாங்க எழுந்தார். கூச்சல் உச்சத்தை தொட்டது. கூட்டம் நடந்த மண்டபம் களேபரமாயிற்று.

ரிச்சாட் பத்திரன, மங்கள சமரவீர, தர்மசிறி சேனநாயக்க ஆகியோர்உட்பட பல அமைச்சர்கள் அனுருத்தரத்வத்த தலைமை தாங்குவதை எதிர்த்து குரலெழுப்பினர். குழப்பத்தின் ஒரு கட்டத்தில் தர்மசிறி சேனநாயக்க வேகமாக மண்டபத்தை விட்டு வெளியேறினார்.

லக்ஸ்மன் கதிர்காமர், 'பேராசிரியர்' பீரிஸ், சிறிமனி அத்துலத்முதலி ஆகியோர் பார்வையாளர்களாக முகம் இறுகிப்போய் இந்தக்காட்சிகளைப் பார்த்தவாறு இருந்தனர். மீண்டும் இதேவகையான காட்சி ஏப்பிரல் இறுதிவாரத்தில் நடந்தது.

இந்தக் கூட்டத்திலும் சந்திரிகாவோ. சிறிமாவோ கலந்து கொள்ளவில்லை. மேதினத்தையொட்டி அரசாங்க அறிவிப்பாக வெளிவரவேண்டிய மசோதா ஒன்று தொடர்பாக தொழிலமைச்சர் மகிந்தராஜபக்ச அரசாங்கக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கிக் கூறவிருந்தார்.

கூட்டம் ஆரம்பமாக குறிக்கப்பட்ட நேரம் கடந்து கொண்டிருந்தது. சென்ற கூட்டத்திற்கு தலைமை தாங்கிய அனுருத்தரத்வத்த இந்தக்கூட்டத்திற்கு வருகை தருவதாகத் தெரியவில்லை.

தர்மசிறி சேனநாயக்காவை தலைமை தாங்குமாறு குரல்கள் எழுந்தன 'ரத்வத்த குடும்பத்திலிருந்து வேலைக்காரர் ஒருவராவது தலைமைதாங்க வருவார் அதுவரை பொறுத்திருங்கள்' மண்டபத்தில் கடைசிவரிசையிலிருந்து பெரிதாக குரல் எழுந்தது கொல் என்று சிரிப்பு மண்டபத்தில் பரவியது.

அந்நேரம் அனுருத்த மண்டபத்தினுள் பிரவேசித்தார். ஆனால் மகிந்தராஜபக்ஸ மண்டபத்தை விட்டு வெளியேறிக்கொண்டிருந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கண்கள்

**வா**யினால் பேனாவால் ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள் தேவி—

'பவளம் இந்தப். பரிதாபத்தை என்னால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை.'

ஜன்னல் வழியே. பவளம் நோக்கினாள். தேவி. எதையோ கிறுக்கிக் கொண்டிருந்தாள். படுத்தபடி—

பல்லைக் கடித்துக் கொண்டு முகத்தை கோணலாக்கி கைகளை முறுக்கிக். கத்தினான் தியாகு— "இவளை எங்காவது— "

'என்ன சொல்லுறீங்க' அதிர்ந்து போய்க் கேட்டாள் பவளம். "ஆமாம் பவளம் உறுதியாகச் சொல்கிறேன் நமக்கு இனி. தேவி. வேண்டாம்.'

கால்கள் இரண்டும் போய். கைகள் இரண்டும் போய். முகமெல்லாம் கறுத்து விகாரமாகப் பார்க்கவே சகிக்கவில்லை. ஆத்திரமும் வேதனையுமாகக் கத்தினான்-தியாகு

'என்னங்க இன்று என்றுமில்லாமல்— என்ன நடந்தது. மெதுவாகப் பேசுங்கள் தேவியின் காதில் விழப்போகிறது.'

'நல்லாய்க் கேட்கட்டும். எப்படியாவது தொலைந்து போகட்டும். அல்லது. எதையாவது குடித்துச் சாகட்டும். இது. நடந்ததில் இருந்து வெளியில் நடமாட முடியவில்லை. எல்லோரும் என்னைப் பரிதாபமாகப் பார்க்கிறார்கள். துக்கம் விசாரிக்கிறது போல பேசுகிறார்கள்—"

'அவளை. இந்த. நாடே பாராட்டுது. என் காது படவே பலர் கதைக்கிறார்கள்.



பவளத்தைப் போல துணிச்சல்க்காறி எங்கள் அயலில் இல்லை. அதை விட மகள் அதற்கு மேல்" என்று.

'இல்லை பவளம் நான் சொல்றதைக்கேள் எனக்கு மட்டும் தேவி மேல அன்பு இல்லை என்று நினைக்கிறாயா!. தினம். இதைப்பார்த்து நான் அணு அணுவாய்ச் செத்துக் கொண்டிருக்கிறேன். இப்பவே கலியாண வயசாச்சு இன்னம் நம்முடன் இருந்தால் கஸ்டமே தவிர நிம்மதி இல்லை. நாம் இருக்கிற வரைக்கும் இவளைக் காப்பாற்றுவோம். அதற்குப்பிறகு! அதனால்தான் சொல்கிறேன் இவளைக்.'

'முடியாதுங்க அஞ்சு வருடத்துக்குப் பிறகு எத்தனையோ வேண்டுதலின் பின், கடவுள் தந்த ஒரே செல்வம். அவளை ஒன்றும் பண்ணிடாதீங்கோ."

'பவளம் இவைகளைப் பார்த்து என் இதயமே பாரமாக இருக்கிறது. இவள் இயக்கத்துக்குப் போயிராவிட்டால் இந்த நிலமை வந்திருக்குமா!. அவள் தயா வந்து அடிக்கடி இவளுடன் இயக்கத்தைப் பற்றி பிரச்சாரம் செய்யும் போது தடுத்திருக்கவேணும். காலம் கடந்து போச்சு. இவளுடன் படித்த மற்றப் பெண்கள் உடையும் போட்டுக்கொண்டு மான் குட்டி மாதிரிச் சைக்கிளில் போறதைப் பார்க்க என் நெஞ்சே நெருப்பாகிறது"

"நாளை எப்படியும் இவளைக் கொண்டே பக்கத்தில் உள்ள அனாதை இல்லத்தில் சேர்த்துவிடுவோம். அடிக்கடி போய்ப்பார்க்கலாம்.'

"அவளை எங்காவது துரத்துவது என்ற முடிவோடுதான் இருக்கிறீர்கள் போல்இருக்கிறது. போன வாரம் அந்தக் குஞ்சுகள் வந்து கேட்டதுகள், தேவி நீ எங்களுடன் வந்து இரு உன்னைப் போலப் பலர் இருக்கிறார்கள் நாங்கள் ஒரு குறையும் வராமல் உன்னை வைத்துப் பார்க்கிறோம்"என்று. அதற்கு மகள் என்ன சொன்னவள் தெரியுமா!."நான் ஒரே ஒரு செல்லப்பிள்ளை அப்பா என் மீது வைத்திருக்கும் பாசத்துக்கு வார்த்தைகளே இல்லை" என்று. "எத்தனை ஆயிரம் குஞ்சுகள் இப்படி நாட்டுக்காகப் போராடி அங்க வீனப்பட்டிருக்கு. ஒன்று மட்டும் உறுதியாகச் சொல்கிறேன். இனிமேல் நீங்கள் இயக்கத்தைப் பற்றியோ, அல்லது தேவியைப்பற்றியோ ஒன்றும் கதைக்காதீர்கள். உங்களைக் கணவராக அடைந்ததற்கு வெட்கப்படுகிறேன், வேதனைப்படுகிறேன். மகளை நினைத்து பெருமைப்படுகிறேன்".

"கிளாலியில் இருந்து அன்றொருநாள் ஆமிக்காரர் மக்களை வேட்டையாட வந்போது எங்களுக்காக எத்தனை ஆயிரம் குஞ்சுகள். உங்கள் மோளைப்போல ஆயுதம் ஏந்தியிருக்காவிட்டால் ஆம்பிளை, பொம்பிளை, குஞ்சு குருமன் எண்டபேதமில்லாமல் வெட்டிப் பந்தாடி இருப்பாங்கள். எத்தனை இடங்களில் எங்கட பிள்ளையள் அவங்களுக்கு நல்ல பாடம் படிப்பிச்சிட்டினம். எங்கட எத்தனை ஆயிரம் குஞ்சுகள் தெய்வங்களாப் போச்சுதுகள். அதுகள் இல்லாட்டி நீங்கள் இல்லை— நான்— ஏன்! எங்கள் தமிழீழமே இல்லை. இப்படிக் கதைப்பதற்கு என்றோ ஒரு நாள் நீங்கள்— வருந்தத்தான் போகிறீர்கள். இப்போ வாருங்கள் சாப்பிடலாம்."

முடமான கைகளால் உடலை இழுத்துக்கொண்டு மெல்ல— மெல்ல— நகர்ந்து வாசல் படியில் சென்று உட்கார்ந்து கொள்வாள்தேவி. தன் வயதையொத்த பிள்ளைகள் பள்ளிக்கூடம் போவதையும், விளையாடுவதையும் பார்ப்பாள். தலையைக் குனிந்து தன் கால்களையே பார்ப்பாள்

அன்றும் அப்படித்தான் வாசலில் உட்கார்ந்து இருந்தாள் தேவி

திடீரென்று இயக்க வண்டி ஒன்று வேகமாக வாசல் முன் வந்து நின்றது. அதிலிருந்து இரண்டு போராளிகள்



இறங்கினார்கள் உள்ளே ஓடிச் சென்று பதட்டத்துடன் அவள் அம்மாவை அழைத்தார்கள். தேவியின் காதிலும் விழுந்தது. சைக்கிளில் சென்று கொண்டிருந்த தியாகு லொறி ஒன்றுடன் மோதி வைத்தியசாலையில் இருப்பதாகச் சொன்னார்கள். பவளத்தை ஏற்றிக்கொண்டு வண்டி பறந்தது. இதைக்கேட்டு அதிர்ந்து போனாள் தேவி.

நல்லை. வ. குணபாலசிங்கம்
-சவுதிஅரேபியா-

அங்கே இருபத்திநான்கு மணி நேரம் கெடு விதிக்கப்பட்டுப் பின் ஆபத்தில்லை என்று சொல்லும்வரை பவளம் அங்கேயே இருந்தாள். தாய் வந்து சொன்ன செய்தியால் மூர்ச்சையே ஆகிவிட்டாள். "தேவி. ஒன்றுக்கும் பயப்படாதே அப்பாவின் உயிரைக் காப்பாற்றி விட்டார்கள். அவரோட கண்ணில கண்ணாடித் தூள்கள் ஏறினதில அவருக்குப் பார்வை போய்விட்டது." இதையெல்லாம் கேட்ட தேவிக்குத் திடீரென்று அந்த— எண்ணம் தோன்றியது. மெல்ல தவழ்ந்து போய்க் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டாள் அவளுக்கே பிடிக்காத அருவருப்பான முகம் ஆனால் அந்தக்— கண்கள்—

அம்மா— என்று. அலறினாள் தேவி—

சத்தம் கேட்டு ஓடி வந்த பவளம் தேவியின் கையிலிருந்த போத்திலைப் பார்த்து அதிர்ந்தாள். "அடிப். பாவி. இப்படிப் பண்ணிவிட்டியே இதுக்காகவா உன்னை இத்தனை கஸ்ரப்பட்டு வளர்த்தேன்." என்று கதறி அழ அக்கம்பக்கம் கூடி விட்டது. வண்டி வரவழைக்கப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று வைத்தியர் அவள் நாடியைப் பரிசோதித்துப் பார்ப்பதற்குள் அது அடங்கி விட்டிருந்தது. அப்போதுதான் அதைக் கவனித்தார் வைத்தியர். நெஞ்சச் சட்டைக்குள் ஒரு சிறிய பேப்பர்த்துண்டு.

"என்னை மன்னித்துவிடுங்கள். இத்தனை நாளாக என்னை அன்புடன் வளர்த்த அம்மா, அப்பாவுக்கு என்னால் செய்ய முடிந்த ஒரே உபகாரம் இது ஒன்றுதான். என் கண்களை எடுத்து எங்கப்பாவுக்கு வைத்துவிடுங்கள் இதைத்தவிர அவர்களுக்கு என்னால் வேறு எதையும் செய்ய முடியவில்லை." எழுத்துக்கள் கிறுக்கலாக ஓடியிருக்க வைத்தியர் அவள் முகத்தைப் பார்த்தார். வாய் பிளந்து உதட்டோரத்தில் நுரை தள்ளி உடல் ஒரு மங்கலான நிறத்தில் போக அந்த. கண்கள் மட்டும் எதையோ சாதித்தது போல் திருப்தி அடைந்தது போல் மின்னிக்கொண்டிருந்தது.

## யுத்தம் ஒரு வருடத்திற்கே

**நா**ம் நன்கு திட்டமிட்ட யுத்தமொன்றையே நடாத்துகின்றோம். ஒரு வருடத்துள் இந்த யுத்தம் முடிவுக்கு வரும்' என சிறலங்காப் பாராளுமன்றத்தில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அழகாக நாலுவரி பேசி நாவீரம் போகுமுன்பே, மண்டைதீவில் தனது இறந்த படையினரின் எண்ணிக்கையினை நூற்றொன்பது, நூற்றுப்பத்து என அவசரமாக எண்ணவேண்டிய இக்கட்டான நிலை சிறீலங்கா அரசுக்கு ஏற்பட்டுள்ளது. அதையாவது ஒழுங்காகச் செய்ய முடிகிறதா! ஏனெனில் கிழக்கில் தனது படைகளின் சடலங்களைச் சரி பார்த்து, உரியவர்களுக்குக் கொடுக்கும் தொல்லை வேறு.

அம்மையார் சந்திரிகாவோ 'மண்டைதீவில் வீழ்ச்சியுற்ற இராணுவத்தினருக்கு, மற்றைய முகாம்களிலிருந்து உதவிகள் ஏன் கிடைக்கவில்லை' என அறிய விசாரணைக்குழுவை அமைக்கப் போகிறாராம். விடுதலைப் புலிகளினால் தனது படைகளின் வான்வழி-கடல்வழி-தரைவழி நகர்வுகள் தடுக்கப்பட்டுவிட்டன என்பது அம்மையாருக்குத் தெரியாததல்ல. சிங்களத்தில் கூறப்படும் பழமொழியான, 'புலி வாலைப் பிடித்தவன் போல' நிழலுக்குக்கூட அஞ்சி, உணவும்கூட இன்றி, இராணுவம் மனோநிலை, உடல்நிலை பலங்கள் இழந்து தவிக்கின்றது தமிழீழத்தில் சிங்களப்படை. ஆனால் அம்மையாரோ, கொழும்பில் இருந்தபடி விசாரணைக்குழு அமைத்து விளையாடிக் கொண்டிருக்கின்றார். உண்மையில் ஈழப் போர்-3ஐ அவதானிப்பவர்களுக்கு, இப் போர் தொடங்கப்பட்ட காலம் முதல் சந்திரிகாவின் படைகள் வடக்கிலும் சரி, கிழக்கிலும் சரி தப்பி ஓடுவதிலேயே இலக்காகவுள்ளனர் என்பது புரியும்.

நடைமுறை யதார்த்தம் இப்படி இருக்கையில் சந்திரிகாவும் ரத்வத்தவும், 'ஒரு வருடக் காலக்கெடு" எனப்பேசுவதில் உள்ள மர்மம் என்ன! சந்திரிகாவுக்கும் ரத்வத்தவுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளை வெல்ல முடியாது என்பது நன்கு தெரியும். ஆயினும், "மக்கள் மீதான நீண்டகால முற்றுகை" ஒன்றைச் சர்வதேச யுத்த விதிகளுக்கு மாறான வகையில் நடாத்தி, மக்களைப் பட்டினி நிலைக்குத் தள்ளினால், விடுதலைப் புலிகளையும் மக்களையும் தனிமைப்படுத்தலாம்-இதன் மூலம் தாம் நினைத்த அரசியல் இலாபத்தை அடையலாம் என்பதே சந்திரிகா அரசின் உள்நோக்கு.

அதேவேளை, தமிழ் மக்கள் மீதான நீண்டகால இராணுவ முற்றுகையைத்தொடரத் தேவையான நிதிவளமும் சிறீலங்காவிடமில்லை. வெளிநாடுகளும் கையை விரிக்கின்றன. இதனால் ஒரேவழி, மக்களின் குரல் வளையை நெரித்து, பாதுகாப்பு வரிகளை உயர்த்தி யுத்தத்திற்கு நிதி திரட்டுவதே. இதனைச் சிங்கள-பௌத்த வெறியர்கள் அனைவரும் ஏகோபித்த ஆதரவுடன் வரவேற்பார்கள் என்பதும் சந்திரிகாவுக்குத் தெரியும். இதற்கான ஆதரவைப் பெருக்குவதற்கே 'யுத்த சபை" ஒன்றை அமைக்கின்றார்.

சிங்கள அரசு வெளிநாடுகளில் உள்ள தனது தூதரகங்களுக்கூடாக, "கிரிக்கெற்" என்றும் "டிஸ்கோ" என்றும் களியாட்டங்களை நடாத்திப் பணம் சேர்த்தும் மறுபுறம் "தேசிய பாதுகாப்பு" எனக்கூறி புலம்பெயர்ந்துள்ள சிங்கள மக்களிடம் பெரும் நிதி திரட்டியும் "மக்கள் மீதான யுத்தத்தைத் தொடர" உறுதிபூண்டு நிற்கின்றது. இக் கிரிக்கெற், டிஸ்கோ ஆகியவற்றில் தெரிந்தோ தெரியாமலோ தமிழ் மக்களும் பங்கெடுப்பதன் மூலம், சிறீலங்கா அரசின் தமிழின அழிப்பிற்கும் மறைமுகமாகத் துணைபோகின்றனர். இனியும் இதனைப் பார்த்துக்கொண்டு, "உரோம் எரிகையில் பிடில் வாசித்த நீரோ மன்னன் போல்" தமிழர்கள் வாழ முடியாது. சந்ததிக்கு உதவாத அறிவு அறிவல்ல. உடன் பிறப்புக்களைப் பாதுகாக்க உதவாத உழைப்பு உழைப்பல்ல. இதனை உணர்ந்து உழைப்பளித்தும் அறிவளித்தும் நிதியளித்தும், எம்மக்களைக் காக்கும் விடுதலைப் புலிகளின் பெரும் பணியில் நாமும் இணைந்தால் சந்திரிகாவும் ரத்வத்தவும் விதிக்கும், "ஒரு வருடத்துக்குள்" எம்மினத்திற்கு விடிவே கிடைத்து விடும்.

www.tamilarangam.net



## புலிகளின் தாக்குதலும்....

பிரதான முகாம்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, அதன்மூலம் தமது பலத்தை அரசுக்கு மேலும் உணர்த்தி, அதன் பின் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதே புலிகளின் திட்டமாகும் என சில ஆலோசனையாளர்கள் அரசுக்குக் கூறிவருகின்றனர். அதேவேளை, அரசின் மீது தாம் நம்பிக்கை இழந்தமையினாலேயே மூன்றாங்கட்டப் போரைத் தொடங்கினோம் எனப் புலிகள் கூறிவருவதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

சமீபத்தில் அமெரிக்கப் பிரதிநிதிகள் சிலரைச் சந்தித்த திரு. லோரன்ஸ் திலகர், தாம் சமாதானத்திற்கு எப்போதும் ஆயத்தமாகவே இருப்பதாகக் கூறினார். இதனால்தான் பல மேற்குலக நாடுகள் இலங்கை அரசுக்கு ஆயுத உதவிகளைச் செய்வதற்கு மறுப்புத் தெரிவித்துப் பின்வாங்கின எனவும் கூறப்படுகின்றது.

எது எப்படியிருப்பினும், புலிகளின் பார்வை 'பூநகரி முகாம் மீது' பதிந்திருப்பது மறுக்க முடியாததே. சந்திரிகா அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தபோது இந்தப் பூநகரி முகாமை அப்புறப்படுத்துமாறு கோரும் நிபந்தனையைப் புலிகள் பிரதானமாக முன்வைத்திருந்தனர். எனவே சமாதான வழியில் நிறைவேறாத தமது திட்டத்தை அதிரடித் தாக்குதலின் மூலமாவது நிறைவேற்றிக் காட்டுவதற்குப் புலிகள் முனைப்பாக இருப்பார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது.

இதேவேளையில், இலங்கைக்கு அமெரிக்கப் படைவரக்கூடும் என்ற சுவரொட்டிகளும் தலைநகரில் பரவலாக ஒட்டப்பட்டன. அமெரிக்கப்படை இலங்கை வந்தால் இலங்கையை விட்டு மீண்டும் போகமாட்டார்கள் என்று கூறும் வகையிலேயே அந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. மறுபுறத்திலே சில செய்தித்தாள்கள், அமெரிக்கப்படை இலங்கை வந்தாலும் அதனையிட்டுப் பெரும்பான்மை இனமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனக் கூறும் வகையில் பிரச்சாரங்களை செய்து வருகின்றன. இலங்கை வந்த இந்தியப் படை திரும்பிச் செல்லவில்லையா! இஸ்ரேலுடன் தொடர்பு வைத்துள்ள அமெரிக்கா, இஸ்ரேலை ஆளமுற்படவில்லை. பாகிஸ்தானிலும் அமெரிக்கா நிலைகொள்ளவில்லை. பிலிப்பீன்சிலும் அதேபோல்தான். எனவே இலங்கைக்கு அமெரிக்கப் படைகள் வந்தாலும் அது இலங்கையிலேயே நிலைகொண்டு விடாது என விமர்சனம் செய்யும் வகையில் அந்தச் செய்தித்தாள் விமர்சனங்கள் பெரும்பான்மை இனமக்களை ஆசுவாசப்படுத்தும் முயற்சியில் இறங்கி உள்ளன.

ஒன்றைமட்டும் உறுதியாகக் கூறலாம். விடுதலைப் புலிகள் என்ற அமைப்பானது உலகிலேயே உள்ள கெரில்லாப் படைகளுள் முதல் இடத்தை வகிக்கும் கட்டுக்கோப்பான ஒரு அமைப்பாகும். எனவே, உலகலுள்ள ஏனைய கெரில்லா அமைப்புக்கள் புலிகளுக்கு அடுத்தபடியானவையே. ஆகவே அப்படிப்பட்ட கெரில்லா அமைப்புகளையே சமாளிக்க முடியாமல் உள்ள சில உலக நாடுகளாயினும் சரி, அல்லது அவற்றிக்கு ஆதரவான சில நாடுகளாயினும் சரி, கெரில்லா அமைப்புக்களிலேயே முதலாம் இடத்தை வகிக்கின்ற விடுதலைப் புலிகளை எவ்வாறு அவர்கள் செயலிழக்கச் செய்வார்கள் என்பதும் கேள்விக்குறிதான்.

# அந்நியப் படைகள் வருமா?...

யிரம் மைல் நீளம் கொண்ட இந்தக் கடலை, இந்திய-சிங்களக் கடற்படைகள் தங்களது வலைக்குள் வைத்திருக்கவும் முடியாது. அதேவேளை, கடற்புலிகளின் பலமும்-செயற்திறனும் நன்றாகவே வளர்ந்து விட்டன.

ஆயினும், இந்திய புலனாய்வுத் துறையான 'றோ' அமைப்பு, சிங்களப் புலனாய்வுத் துறையுடன் இணைந்து, போராட்டத்தை நசுக்கும் எண்ணத்துடன் நாசவேலைகள் புரிய சந்தர்ப்பங்கள் உள்ளன. ஆனாலும் எமது மக்கள் விழிப்புடனும்-எச்சரிக்கை உணர்வுடனும் இருந்தால், இந்தச் சதி-நாசவேலைகளை வெற்றிகரமாகத் தடுக்க முடியும்.

இது ஒருபுறமிருக்க, இப்போது வேறு ஒரு கேள்வியும் மக்களின் மனதில் எழுந்தபடி உள்ளது. அதாவது, 'சார்க்' படைகள் வருமா என்பதே அதுவாகும்.

அதாவது, தென்னாசியப் பிராந்திய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ், நேபாளம், இலங்கை, பூட்டான், மாலைதீவு ஆகிய நாடுகளின் கூட்டுப்படை தமிழீழம் வந்து, போராட்டத்தை அடக்க முயலலாம் என்பதே அந்தச் சந்தேகமாகும்.

ஆயினும், 'சார்க் படை' என்று இப்போது ஒரு படையுமே இல்லை. அப்படி ஒரு படையை அமைக்கக்கூடிய சூழலில் சார்க்' நாடுகளும் இல்லை. உண்மையில் அவை, ஒன்றையொன்று பிடித்துத் தின்னும் நிலையில் உள்ளன. ஒன்றின் மீது மற்றது சந்தேகப்படும் அளவில் இருக்கின்றன.

இருந்தபோதிலும், 'பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க 'சார்க்' நாடுகள் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டுப்படையை அமைக்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது என்பது உண்மையே. ஆனால், 'பயங்கரவாதம்' என்று எதைக் கருதுவது! அதை யார் தீர்மானிப்பது என்ற கேள்விகள் எழும்போது, 'சார்க் படை' என்பது காற்றோடு போய்விடும்.

தென்னாசியப் பிராந்தியத்தில் பாகிஸ்தான் பயங்கரவாதத்தைத் தூண்டி வருகின்றது என்று இந்தியா குற்றஞ்சாட்டி வருகிறது. அப்படியாயின், 'சார்க் படை' அமைக்கப்பட்ட உடனே, அதைப் பாகிஸ்தானுக்குத்தான் அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கை இந்தியாவில் எழும். இதை இந்தியாவின் ஒரு சதி என்றே பாகிஸ்தான் எண்ணும். அதில் உண்மை இல்லாமலும் இல்லை. எனவே, 'சார்க் படை' யை அமைக்க தென்னாசியாவின் இரண்டாவது பலம் பொருந்திய நாடு அனுமதிக்காது.

இந்தியாவுக்கும் 'சார்க் படை' தொடர்பான ஒரு அச்சம் உண்டு. 'சார்க் படை' உருவாக்கப்பட்டால், காஸ்மீர் 'பய்கரவாதத்தை' ஒழிக்க அது அங்கே போகவேண்டி இருக்கும். அப்படி ஒரு 'சார்க் படை' வந்தால் அதில், இசுலாமிய நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஸ், மாலைதீவு ஆகியவற்றைச் சேர்ந்த இசுலாமிய வீரர்கள் கணிசமான அளவில் இருப்பார்கள். இந்த இசுலாமியப் படை, காஸ்மீரிலுள்ள இசுலாமியப் போராளிகளுடன் இணைந்தால் என்ன நடக்கும்! எனவே, இந்தியாவும் 'சார்க் கூட்டுப்படை'யை விரும்பமாட்டாது.

இதேவேளை, 'சார்க்' நாடுகளைப் பொறுத்தளவில், 'நீயா அல்லது நானா சிறந்த பிச்சைக்காரன்!' என்ற நிலையே உள்ளது. இந்த நிலையில், 'சார்க் படை'களின் செலவை யார் பொறுப்பது! கூட்டுப் பொறுப்பேற்கும் ஒரு யோசனை சொல்லப்பட்டாலும், அதை ஒரு 'தண்டச் செலவாகவே' மற்றைய நாடுகள் பார்க்கும். இத்தகைய ஒரு பாரத்தைச் சுமக்க, உலகின் ஏழை நாடான பங்களாதேஸ் முன்வரமாட்டாது. அத்துடன், அங்கும் ஒரு விடுதலைப் போர் (பயங்கரவாதம்) நடைபெறுகின்றது. 'சார்க் படை' அமைந்தால், அது தனது உள்நாட்டு விவகாரத்தில் தலையிடலாம் என்று பங்களாதேசம் அஞ்சும்.

இவ்வாறு ஒவ்வொரு நாடும் தத்தம் நலன்களைக் கருத்தில் எடுத்தபடியும்-ஆளை ஆள் நம்பாத சூழலிலும் 'சார்க்' என்ற ஒரு கூட்டுப்படை அமைவதை விரும்பமாட்டாது. இன்றைய சூழலில், சிறீலங்கா மட்டும்தான், 'சார்க்' ஆசையுடன் அலையும் ஒரு நாடாக இருக்க முடியும். ஆனால் அது ஓர் அழகான கற்பனை மட்டுந்தான்! எனவே எமது மக்களே! 'சார்க் படை' என்ற சஞ்சலத்தை மனதிலிருந்து பிடுங்கி எறிந்து விடுங்கள்.

இந்த இடத்தில், எமது போராட்ட வளர்ச்சியை மக்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். 2000 போராளிகளுடன்-சாதாரணரக ஆயுதங்களுடன்-குறைந்த போர் அனுபவங்களுடன் நின்றிருந்த புலிப்படையுடன், ஒரு இலட்சம் இந்தியப் படைகள் மோதி தோல்வி கண்டன. இது, எமது கண்முன்னால் நிகழ்ந்த உண்மை. அப்படியாயின் இன்று, பல்லாயிரம் பேராகப் பெருகிவிட்ட புலிப்படையுடன்-பல்வேறு படையணிகளாகப் பரிமாண வளர்ச்சி பெற்றுவிட்ட புலிப்படையுடன்-மிக நவீன ஆயுதங்களுடனும் மிக நவீன போர் யுக்திகளுடனும், உலகே வியக்கும் போர்த் திறனுடனும் இருக்கும் புலிப்படையுடன்-ஒரு அந்நியப்படை, அது இந்தியாவோ அல்லது 'சார்க் படை'யோ மோத முன்வருமா! அப்படி முன்வந்தாலும் அவற்றால் வெற்றி பெறத்தான் முடியுமா!

"அது வந்தால் என்ன செய்வது இது வந்தால் என்ன செய்வது!" என்ற சிந்தனைகள் அவசியமானவைதான். அதேவேளை, எது வந்தாலும் இலட்சியப் போரை விடுவதில்லை என்ற உறுதியும் வேண்டும்.

இந்தியப்படை வந்து சென்றதன் பின், தமிழீழ விடுதலைப் போராட்டம், அனைத்து நிலைகளிலும் முன்னேற்றம் கண்டதை எவராலும் மறுக்க முடியாது. இப்போது இருக்கும் நிலையில் தமது ஆக்கிரமிப்புபோரின் வளர்ச்சி போதாது என்று சிறீலங்கா அரசு கருதினால், ஏதாவது அந்நியப்படையை அது அழைக்கட்டும்!

ஒன்று மட்டும் உண்மை. பலம் தான் எமது இனத்திற்கு வாழ்வு அளிக்கக்கூடியது.

## சங்கப்படலை

எப்போது வந்தாலும் இடி
வாலையிலே— ஆடி
வயதழிந்த வேளையிலும்
காலையெடுத்தாட்டக் காத்திருக்கும்
வேலையற்ற
அப்பு ரத்வத்த 'அரைமினிஸ்டர்'
எம் மண்ணில்
எப்போது வந்தாலும் இடி.
வந்த விமானத்தை
வயலுழவே வைத்த புலித்
தங்கங்கள் வாழும் தமிழ் நாட்டை
சந்திரிகா
கல்லாலெறிந்து கலைப்பேன்
எனச் சொன்னால்
வெல்வாளா!சும்மா விடு

- கோணாசலத் தேசிகர்

## 'முகங்கள்" வீடியோப்படம்
### சிறப்புற வெளியீடு

கலை பண்பாட்டுக்கழகத்தின் ஆதரவுடன் நிதர்சனம் தயாரித்து வழங்கிய 'முகங்கள்' என்னும் முழுநீள வீடியோப்பட வெளியீட்டு விழா மிகவும் சிறப்புடன் நடைபெற்றது.

அண்மையில் யாழ். சிறீதர் திரையரங்கில் நடைபெற்ற வெளியீட்டு விழாவிற் பெருமளவு மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நிதர்சனம் பொறுப்பாளர் ஜவான் தலைமையில் நடைபெற்ற இவ்வெளியீட்டு விழாவில் மங்களவிளக்கை லெப். கேணல் நவம் அறிவுக்கூடப் பொறுப்பாளர் சஞ்சை, மகளிர் பிரிவுத் துறைப் பொறுப்பாளர் செல்வி. தமிழவள் ஆகியோர் ஏற்றி வைத்தனர். வரவேற்புரையைப் புலிகளின் குரல் வானொலியைச் சேர்ந்த வின்சன் நிகழ்த்தினார்.

வெளியீட்டுரையைக் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்கள் நிகழ்த்தினார்.

'முகங்கள்' வீடியோப் படத்தினைத் தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் வெளியிட, வீரமணிஐயர் பெற்றுக் கொண்டார்.

இவ் வீடியோப் படத்தினை உருவாக்குவதற்கான நிதி உதவியினை வழங்கியோருக்கான வீடியோப்படச் சிறப்புப் பிரதிகளைச் செல்வி. தமிழவள் வழங்கிக் கௌரவித்தார். இவ்வீடியோப் படத்தில் பங்குகொண்ட கலைஞர்களை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சுப தமிழ்ச்செல்வன் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். இதனைத் தொடர்ந்து இவ் வீடியோப் படத்தினைத் தயாரித்து வழங்கிய ஞானரதன் அவர்களுக்குச் சிறப்புப் பரிசு வழங்கப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பேச்சுவார்த்தையின் போது இந்தியா விடுதலைப் புலிகளுக்கு பக்கபலமாக இருந்திருக்க வேண்டும்

## முன்னாள் இலங்கைக்கான இந்தியத் தூதுவர்

பிரித்தானிய இந்திய வம்சாவளியினரைப் பிரதிபலிக்கும் அமைப்பின் சார்பில், 17.06.95 ஞாயிற்றுக்கிழமை அன்று அனைத்துலக ஆசிய நாட்டின விழா, தெற்கு இலண்டனில் 'கிறீனிச்' எனுமிடத்தில் நடைபெற்றது. இவ்விழாவின்போது விசேட கருத்தரங்கு ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இதில் குறிப்பாக இந்தியாவிலிருந்து, முன்னைநாள் இலங்கைக்கான இந்தியத் தூதுவரும், பாரதிய ஜனதா கட்சியின் மத்தியகுழு உறுப்பினரில் ஒருவருமான நரேந்திர நாத்ஜா அவர்களும், இலண்டனில், முன்னாள் லூசியம் நகர பிதா. திரு. சின்னமணி அவர்களும், தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலக சட்ட ஆலோசகர் திரு. நடேசன் சத்தியேந்திரா அவர்களும் கலந்து கொண்டனர்.



இக்கருத்தரங்கில் உரையாற்றிய திரு. நரேந்திர நாத்ஜா, இலங்கை–இந்திய ஒப்பந்தம் பற்றிக் குறிப்பிடுகையில், இவ் ஒப்பந்தம், விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கும், அப்போதைய சிறீலங்காவின் சனாதிபதி திரு. ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கும் இடையில்தான் கைச்சாத்திடப்பட்டிருக்க வேண்டும் எனவும், அதில் இந்தியா பார்வையாளராகவோ அல்லது ஆலோசகராகவோதான் இருந்திருக்க வேண்டும். மேலும் அவர் தெரிவிக்கையில், பேச்சுவார்த்தைக்கென விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களை இந்திய அரசு டெல்லிக்கு அழைத்து, அங்கு அவரை வீட்டுக் காவலில் வைத்தது மிகவும் தவறான செயல். அங்குள்ள செய்தியாளர்களுடனும், 300 இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்களுடனும், திரு. பிரபாகரனைக் கலந்துரையாட வசதிகளை அமைத்துக் கொடுத்திருப்பதன் மூலமே அவரின் நம்பிக்கையை இந்தியா பெற்றிருக்க முடியும். தொடர்ந்து அவர் பேசுகையில், இறுதியாக நடைபெற்ற சந்திரிகா அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, இந்திய அரசு நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ விடுதலைப் புலிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி அவர்களுக்குப் பக்கபலமாக நின்றிருக்க வேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை என்றார்.


**விளம்பரம்**

**புதிய ரக எண்ணெய் விதையிலிருந்து எரிபொருள் சக்தி உருவாக்கல்**

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமானது (TEEDOR) நீண்ட கால நோக்கிலான அபிவிருத்தித் திட்டங்களையும் தற்போதுள்ள போர்ச்சூழலில் சுயதேவையினைப் பூர்த்தி செய்யக்கூடிய குறுகிய காலத் திட்டங்களையும் உருவாக்கிச் செயற்படுத்தி வருகின்றது.

சிறிலங்கா இனவாத அரசு எமது தேசத்தின் மீது பொருளாதாரத் தடையினை ஏற்படுத்தி எமது மக்களின் அன்றாட வாழ்க்கையை ஜீவமரணப்போராட்டமாக்கியுள்ளது. இப்பொருளாதாரத்தடையினை உடைத்து இத்தற்காப்புப் பொருண்மியத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையாக ஒருவகை எண்ணெய் விதை (RAPE SEED) இலிருந்து எரிபொருள்/ சக்தி உருவாக்கும் ஆய்வினை த.பொ.மே.நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

இவ் விதையினை (RAPE SEED) பயிரிடும்/பயன்படுத்தும் வெளிநாடுகள், பயிரிடுவதற்கான மண்வகை, பயிரிடப்படும் முறை, விதையின் உறங்கு நிலை போன்ற தகவல்கள் திரட்டப்படுகின்றன. அத்தோடு இவ்விதையிலிருந்து எரிபொருளை/சக்தியைப் பெறும் வழிமுறைகள் (Processing) தொடர்பாக :-

தொடர்புகட்கு: TEEDOR
P.O.BOX 6795
LONDON E6 1SB
U.K.
0956 314 370 / 0181 - 503 4294
Fax: 0181 - 470 8593.



**இலண்டனில்**

**புகைப்படக் கண்காட்சி**

**புலம் பெயர்ந்து வாழ் தமிழீழ மக்களே!**

1983 யூலை மாதத் தமிழினப் படுகொலையினை நினைவுகூரும் முகமாகவும்,சிறீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவம் தற்போது தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள இராணுவ பயங்கரவாதத்தை வெளியுலகிற்கு எடுத்துக் காட்டவும்

எதிர்வரும் **22-7-95**
**சனிக்கிழமை**
பி.பகல் 12 மணியிலிருந்து - மாலை 6 மணி வரை
**TRAFALGAR SQ, WC1**
Charing Cross

என்னுமிடத்தில் ஒரு மாபெரும் புகைப்படக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பிரவேசம் இலவசம்.

தமிழீழத் தேசப்பற்றுள்ள உங்கள் அனைவரையும் வருகை தந்து ஆதரவு நல்குமாறு பாசக்கரம் நீட்டி அழைக்கின்றோம்.

பிரித்தானியக் கிளை
தமிழீழ விடுதலைப் புலிகள்.

தொலைபேசி: 0181 - 503 4294



நம் தாய் நாட்டின் நிகழ்வுகளை
படம் பிடித்துக் காட்டும்
நவம்பர், டிசம்பர்
1994
ஒளிவீச்சு வெளிவந்துவிட்டது



**நோர்வேயில்**

**சுதந்திர தாகம்**

**எழுச்சி நிகழ்வு**

- சிறுவர் நடனம்
- கிராமிய நடனங்கள்
- எழுச்சி கீதங்கள்
- வில்லிசை
- நாட்டிய நாடகம்
- நாடகம்

இடம் : SAMSUNNSHUSET
OSLO
காலம் : 05 - 08 - 95
மாலை 7 மணி

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெண்ணிலாவே



ஈழத் தமிழ் நாட்டினிலே - வெண்ணிலாவே! - தமிழ்
இரத்தமெங்கும் சிந்துவதேன்! வெண்ணிலாவே!
மானத்தமிழ்ப் பரம்பரையில் வெண்ணிலாவே! - நாம்
மண்டியிடலாகுமோ! சொல்! வெண்ணிலாவே!

ஆண்ட ஈழத்தமிழரெமை - வெண்ணிலாவே!
ஆளவொரு எண்ணமுண்டோ - வெண்ணிலாவே!
தூண்டிவிடும் இனப்பகையில் - வெண்ணிலாவே!
துன்பமின்றி இன்பமுண்டோ - வெண்ணிலாவே!

சேர சோழ பாண்டியனார் - வெண்ணிலாவே!
செத்தும் இன்னும் வாழுவதேன் - வெண்ணிலாவே!
வீரப்புலி நாட்டினிலே - வெண்ணிலாவே! ஒரு
வேற்றுமகன் கால் பதிக்கில் - வெண்ணிலாவே!
மார்தட்டிப் போர் தொடுத்தே - வெண்ணிலாவே!
மண்ணதன்மேல் வீழ்த்திடுவாய் - வெண்ணிலாவே!
பேரைச் சொல்லிக் கூரைதட்டி - வெண்ணிலாவே
பேரன் அவன் வாழ்ந்த மண்ணாம் - வெண்ணிலாவே!

மட்டுநகர் தமிழ்க் கடலாம் - வெண்ணிலாவே! எங்கள்
மறப்புலிகள் கடற்படைதான் - வெண்ணிலாவே!
கிட்டு அண்ணன் தொட்டகடல் - வெண்ணிலாவே
கிலி உனக்கு இனியுமேனோ! - வெண்ணிலாவே!

பாட்டி அன்னை, திலீபன் அண்ணன் - வெண்ணிலாவே!
பட்டினியால் ஏன் இறந்தார் - வெண்ணிலாவே!
வீட்டைவிட்டே ஓடுகின்றார் - வெண்ணிலாவே! இவர்
வீரமுள்ள மறவர்களா! - வெண்ணிலாவே!
பூட்டி நம்மை எரித்திடுவார் - வெண்ணிலாவே!
புலிகள் என்றால் போயொளிப்பார் - வெண்ணிலாவே!



சத்தியத்தில் உயிர்கொடுப்பார் - வெண்ணிலாவே!
சரித்திரமும் புகழ் பாடும் - வெண்ணிலாவே!
செத்த ஒரு காந்தியத்தில் - வெண்ணிலாவே!
சித்தமது தெளிவதுண்டோ - வெண்ணிலாவே!
புத்தமத ஆட்சியிலே - வெண்ணிலாவே! பெரும்
புழுக்களைப் போல்தமிழர் - வெண்ணிலாவே!
செத்தபின்னும் வாழ்ந்த இனம் - வெண்ணிலாவே! நீ
சினம் தணிந்தே சிரித்தெழுவாய் - வெண்ணிலாவே!

மறை புலி
- நோர்வே

U.T.O., 211 Katherine Rd, London E6 1BU, UK. Tel: 0181 - 503 4294, Fax: 0181 - 470 8593

L.T.T.E
Post Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
T/F: 718-657-9463

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-191260 F: 190114

T.C.C
Groot Hertoginnelaan
2517 BL Den Haag, Nederland
Tel: 070-346 1963 , F: 384 0683

T.C.C
Glomminge Grand - 29
16362 Spanga, Sweden
Tel: 08-7812943

Printed by Observer Group Newspapers

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்